Deviyin **KANMANI** -Tamil Fortnightly **MAY - 1, 2010** Regd. No. TN/CH(C)/360/09-11 Registered With Registrar of News papers for India Under No.49510/89 Published every 1st and 15th of every month.

## என்னைப்பற்றி...

அன்பார்ந்த வாசகர்களுக்கு கண்மணி மூலமாக உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மனித உறவுகள் கண்ணுக்கு தெரியாத நூலிழையால் கோர்க்கப்பட்டவை. அவற்றை இணைத்து பாலம் அமைக்கையில் ஒரு நூல் விலகினாலும் பாதை மாறிவிடும் அல்லது பயணம் முறிந்து விடும். இந்த நாவலில் வரும் கதாபாத்திரங்கள் வெவ்வேறு திசையில் பயணித்தாலும் அன்பு எனும் சங்கிலியால் இணைக்கப்பட்டிருப்பதால் பயணம் இனிமையாக தொடர்கிறது. மனித மனமும் அப்படிப்பட்டது தான். சுய நலம் இல்லாத அன்புதான் உலகை நேசிக்க கற்றுக் கொடுக்கிறது. இதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் அமைத்து தந்த கண்மணிக்கு என் நன்றி.

அன்புடன்
தமிழ் நிவேதா

தேவியின் கண்மணி

தமிழ் நிவேதா

ரூ.7



# உறவு பாலங்கள்..

# அவிழ்மடல்




சியாமளாராவ்-வின் ''இரட்டைக் கிளிகள்'' ஆர்.கீதாராணி-யின் 'என் விழியில் ஏன் விழுந்தாய்...?, சித்திரை சிறப்பிதழில் இரு அருமையான நாவல்களை தந்து திக்குமுக்காட வைத்துவிட்டீர்கள். சித்திரையின் சிறப்பு குறித்த கட்டுரை...பயனுள்ள அரிய தகவல்களை தந்தன. நகைச்சுவை நுணுக்குகள் இல்லாத கண்மணி.. நிலவில்லா வானம்போல்..

-குஞ்சன்விளை ரவி.

இரட்டைச்சிறப்பிதழுக்கு ஒத்தை அட்டைப்படம் தான்..ஒத்தை நாடியுடன் அத்தை மகளை அப்படியே அட்டையில் கொண்டு வந்த மாருதியின் தூரிகை காரிகைத்திருவிழாக் கொண்டாட வைத்தது. பேரிகைமுழங்க பேருவுவகையுற்றேன்.

-ஆர்.ஜி.காயத்ரி, மணலிவிளை.

சித்திரைப்பெருவிழா என்றகட்டுரை முதல் மாதமகிமையைப் பெருமையுடன் விளக்கியது புதியவிடியலும்-புனிதக்குளுமையும்-புதுமையுடனும் அருமையுடனும் தொகுக்கப்பட்டது பெருமை சேர்ப்பதாக அமைந்தது.

-ஆர்.ஆர்.உமா, செல்வமருதூர்.

''என் விழியில் ஏன் விழுந்தாய்..?'' நாவலில் சஞ்சய் கதாபாத்திரத்தை ''பார்த்திபன்'' பாணியில் கொண்டு போய் இறுதியில் ''பிரகாஷ்ராஜ்'' பாணியில் முடித்த விதம் புதுமையாக இருந்தது. தமிழ் மாதங்களின் சிறப்பைக் கூறிய விதம் நன்றாக இருந்தது.

-பழ.கவிதா சிவமணி, புன்செய்ப்புளியம்பட்டி.

இருநாவல்களுமே இனிய இலக்கியங்கள். நவரசமும் மழையாகி நளினமும் தூறலாகி நந்தவனத்தில் நறுமணத்துடன் சுற்றுலா வந்த சொர்க்க அனுபவம் கை கூடியது. நாவல் ஆசிரியர்கள் இருவருக்கும் சலாம்! சலாம்!

-ஆர்.ஜி.ஏ.விஜய்சாய்பாலா, திருச்செந்தூர்.

இழைத்த சந்தனத்தின் நிறம் கொண்ட முகமும், பளிச்சிடும் புன்னகையும், உயிரின் ஒளிபார்வையும், நீல்விழிபுருவமும், அழகிய பொட்டும், ஜொலிக்கின்ற தங்க ஆபரணங்களை அணிந்து, அடர்கருங் கூந்தலில் பல வண்ண மலர்களை சூடி, கண்மணியில் ''சித்திரை சிறப்பிதழை'' சிறப்பிக்க வந்த தேவதையே, நீ மாருதியின் கைவண்ணத்தில் உருவான பல கோடி மலர்களில் ஒரு ''குறிஞ்சிமலரோ''?

-ஜி.மனோகரன், கச்சிராயபாளையம்.



# உறவு பாலங்கள்

மாலைக்காற்று சிலுசிலுவென வீசிக் கொண்டிருந்தது. மண் சாலையின் இரண்டு பக்கமும் கண்ணுக்கெட்டியவரையில்நெற்பயிர்கள் பச்சை போர்வையை விரித்திருந்தன. வயலை ஒட்டிச் சென்ற அம்பராம் பாளையம் ஆற்றில் வாத்துகள் குழந்தைகள் மிதக்க விட்ட பொம்மைகளைப் போல் மிதந்து கொண்டிருந்தன. இரை தேடி கிளம்பிய பறவைகள் தங்கள் கூடுகளுக்கு திரும்பி கொண்டிருந்தன. வயலில் வேலையை முடித்துவிட்டு கூலியாட்கள் பேசிய படியே தங்கள் வீடு நோக்கி சென்று கொண்டிருந்தனர். தன் பைக்கில் அவர்களை கடந்து சென்ற சங்கரன் நினைத்தார். உலக நியதி இது தான் போலும். பொருள் தேடும் பொருட்டு இருப்பிடத்திலிருந்து கிளம்பிப் போய் பொருளைத் தேடி மீண்டும் இருப்பிடம் சேர்வது எல்லா உயிர்களுக்கும் பொதுவான செய்கை தான் என யோசித்தபடியே தன் வீட்டு வாயிலில் வண்டியை நிறுத்தினார்.

சமையலறையில் வேலையாய் இருந்த வேணி கணவனின் பைக் சத்தம் கேட்டதும் தண்ணீர் சொம்புடன் வெளியே வந்தாள். கை, கால்களை கழுவிக் கொண்டு ஒரு வாய் தண்ணீரை குடித்த சங்கரன் ''வானதி எங்கே?'' என்றார் சுற்றிலும் பார்த்து. ''மலர்க்கொடியைப் பார்க்க புரவி பாளையம் போயிருக்கிறாள்' 'என்றாள் வேணி.

'மலர்க்கொடி இங்கிருந்து போய் இரண்டு நாள் தானே ஆகிறது' என்றார் சங்கரன் கேள்வியுடன் பார்த்து.

''அக்காவை பார்க்கணும்னு பிரியத்தோடு போயிருப்பா. இதுக்ெல்லாம் நாள் கிழமை பார்க்கணுமா? ''என்றாள் வேணி.

''அதில்லடி பெண்ணை கொடுத்த இடத்தில் அளவோடு இருந்தால் தான் நமக்கு மரியாதை. அடிக்கடி போனால் வீண் விவகாரம் தான் வரும்''

''வானதி அடிக்கடி போகிற ஆளா என்ன? மலரும் மாப்பிள்ளையும் தானே எப்பவும் வருவாங்க. வானதி இல்லைன்னு மாப்பிள்ளையே எங்கிட்ட குறைபட்டிருக்கார். இன்னிக்கு மலரின் பெரிய பையனுக்கு உடம்பு சரியில்லேன்னு போன் பண்ணினா. மாப்பிள்ளை மதுரை போயிருக்காராம். அதனால் வானதி போய் அக்காவையும் குழந்தையையும்

**தமிழ் நிவேதா**

பொள்ளாச்சி அழைத்துப்போய் ஆஸ்பத்திரியில் காட்டிவிட்டு வீட்டில் விட்டுட்டு வரப்போயிருக்கிறாள்.''

''கூட நீயும் போயிருக்க வேண்டியது தானே? மலருக்கு ஒத்தாசையாக இருக்கும்'' என்றார் சங்கரன்.

''இப்பதான் அடிக்கடி பெண்ணை கொடுத்த இடத்துக்கு போகக்கூடாதுன்னு சொன்னீங்க ''என்றாள் வேணி லேசான கிண்டலுடன்.

''இவ யாருடி இவ, புரியாம பேசிக்கிட்டு. அடிக்கடி போக வேண்டாம்னா அவசரத்துக்கு கூட போகாம இருப்பியா?'' என்றார் சங்கரன் எரிச்சலாக.

''நான் ஒண்ணும் புரியாம பேசல. உங்களுக்கு புள்ளைங்க மேல இருக்கிற பாசம் புரிஞ்சுதான் பேசறேன். தேவை இருந்திருந்தால் நான் போயிருப்பேன். லேசான சளி காய்ச்சல் தான். மருந்து கொடுத்ததும் நல்லாயிருக்கான்னு வானதி அங்கிருந்து கிளம்பி வந்து கொண்டே இருக்கிறாள்'' என்றாள் வேணி.

''அப்ப சரி'' என்றார் சங்கரன் நிம்மதியான குரலில்.

''சாப்பிட வர்றீங்களா? இடியாப்பம், கோழி குழம்பும் சூடா இருக்கு'' என்றாள் வேணி.

''வானதி வரட்டும்'' என வாசல் திண்ணையில் சாய்ந்து அமர்ந்தார் சங்கரன்.

''அது சரி, பொண்ணை விட்டுட்டு எப்ப சாப்பிட்டிருக்கீங்க?'' என்றபடி அவர் அருகே அமர்ந்தாள் வேணி.

பொள்ளாச்சியின் ஆற்றோர கிராமங்களில் ஒன்றான ஆத்து பொள்ளாச்சி என்றழைக்கப்படும் அந்த ஊரின் செல்வந்தர்களுள் சங்கரனும் ஒருவர். இரண்டு பெண்கள். பெரியவள் மலர்க்கொடி. பனிரெண்டாம் வகுப்பு முடித்ததும் அவளை எந்த கல்லூரிக்கு அனுப்பலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே ஒரு விசேஷ நிகழ்ச்சியில் மலர்க்கொடியை பார்த்துவிட்டு மாப்பிள்ளை வீட்டார் பெண் கேட்டு வந்தார்கள்.

புரவி பாளையத்தில் பெரிய பண்ணைக் குடும்பம் என்பதுடன் பாஸ்கரன் நல்லவனாகவும் பார்க்க லட்சணமாகவும் இருந்தான். அவனது விருப்பத்தின் பேரிலேயே பெற்றோர் பெண் கேட்டு வந்திருப்பதாக சொல்லவும். மலர்க்கொடி மகிழ்ச்சியுடன் திருமணத்திற்கு தலையசைத்தாள். மலர்க்கொடியை விட ஐந்து வயது சிறியவளான வானதி அவளை விட உற்சாகத்துடன் குதித்தாள். தன் பள்ளி தோழிகளை அழைத்து வந்து திருமண இனிப்புகளை சாப்பிடக் கொடுத்தாள். தன் புது உடைகளையும், விரல்களில் பற்றியிருந்த மருதாணி சிவப்பையும், தங்கள் வீட்டின் புதுவரவான மாமாவையும் பற்றி வாய் கொள்ளாமல் பெருமை பேசினாள்.

தன் பட்டுப்பாவாடையையும், ஜடை குஞ்சலத்தையும் வீட்டை நிறைத்த உறவினர்களின் சலசலப்பையும், அக்காவின் சிவந்த முகத்தையும் மாமாவின் வாய் கொள்ளா சிரிப்பையும் மிகவும் ரசித்தாள். தரையில் கால் படியாமல் சுற்றித் திரிந்தவள் அக்கா கணவன் வீடு கிளம்பும் போது தான் சுய நிலைக்கு வந்தாள்.

''அக்காவை எங்கே கூட்டிட்டு போறீங்க? நான் போக விட மாட்



டேன்'' என்றாள் அக்காவை இறுக அணைத்தபடி.''

தங்கையைக் கட்டிக் கொண்டு மலர்க்கொடியும் விசும்பி அழ, கூடியிருந்த உறவினர்கள் அதட்டினார்கள்.

''நல்ல காரியம் நடக்கறப்ப இதென்ன அழுகை?''

''சின்னவளை உள்ளே கூட்டிட்டு போங்க''

''மலர்க்கொடி கண்ணை துடைச்சிட்டு கிளம்பு. வீட்டு மகாலட்சுமி அழுதா குடும்பத்துக்கு ஆகாது''

''இதோ பக்கத்து ஊர். நினைச்சா வந்துடப்போற' 'என ஆளாளுக்கு புத்திமதி சொல்ல மலர்க்கொடி தன் அழுகையை நிறுத்தினாள்.

சங்கரனும், வேணியும் தங்கள் கண்களைத் துடைத்தபடி மகளை வழியனுப்பி வைத்தனர்.

அக்காவிற்கு திருமணம் என்றதும் தங்கள் வீட்டிற்கு ஒரு புது உறவும் பிரிந்து போய்விட்டதை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. தன் அக்காவுடனும், மாமாவுடனும் சிறிது நாள் சரியாக பேசாமல் கூட இருந்தாள். அடிக்கடி தாய் வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிருந்த மலர்க்கொடி தங்கையை கெஞ்சியும் கொஞ்சியும் வழிக்கு கொண்டு வர முயற்சித்தாள்.

மலர்க்கொடி பிரசவத்திற்கு வந்திருந்த சமயம் கொஞ்சம் வளர்ந்து விட்டிருந்த வானதி அக்கா குழந்தையை கொஞ்சுவதிலும் விளையாடுவதிலும் மூழ்கிப்போய் அக்காவைக் கூட மறந்து போனாள்.

''ஐந்தாவது மாதம் பாஸ்கரன் மனைவியையும் , குழந்தையையும் அழைத்து சென்ற போது உலகநடப்பு புரிந்த வானதி தன் அழுகையையும் துக்கத்தையும் தனக்குள்ளே புதைத்துக் கொண்டாள். இருந்தாலும் தனக்கு பிரியமானவர்களை தன்னிடம் பிரித்து அழைத்துச் சென்ற பாஸ்கரனிடம் அவளால் ஒட்டவே முடியவில்லை அவன் பேசமுற்படும் போது சுருக்கமான பதிலுடன் ஒதுங்கி விடுவாள்.

இப்போது அக்காவின் குழந்தைக்கு உடல் நிலை சரியில்லை என உதவிக்கு போகும்போதும் பாஸ்கரனைப் பார்த்ததும் அவர்கள் எத்தனை வற்புறுத்தியும் கேட்காமல் வானதி வீட்டிற்கு கிளம்பியதும் அதனால்தான் .

வீட்டு வாயிலில் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு வானதி உள்ளே நுழைந்த போது பக்கத்து தோட்டத்தில் வசிக்கும் முத்துக்கவுண்டர் அவள் பெற்றோருடன் பேசிக் கொண்டிருந்தார். இவளைப் பார்த்ததும்

''நான் நடிக்க வரலேன்னா ரீமேரேஜ் பண்ணிக்கிட்டு குடும்ப தலைவியாகியிருப்பேன்...''

''உங்களுக்கு தான் நடிக்க வரலையே பேசாம மேரேஜ் பண்ணிக்கலாமே...''

-கே.பிரசன்னகுமார்.
குடந்தை-1.



''குழந்தை எப்படியிருக்கிறான்?'' என்றார் சங்கரன்''நல்லா இருக்கான் அப்பா'' என அவர் அருகில் வந்து அமர்ந்தாள் வானதி.

''இருட்டற சமயம் இப்படி விழுந்தடிச்சி ஓடி அக்கா வீட்டில் தங்கிட்டு காலையில் வந்திருக்கலாம்?''என்றாள்வேணி

அம்மாவிற்கு பதில் சொல்லாத வானதி திரும்பி முத்துக்கவுண்டரிடம் பேசினாள் '' எப்படியிருக்கிங்க மாமா? ஏன் ஒருவாரமா வரலை?'' ''வயசான கட்டை எப்படியிருந்தா என்னம்மா? உன் விஷயம் என்ன சொல்லு ? '' என்றார் முத்துக்கவுண்டர். ''ஆமாம் எப்ப உன் கல்யாணம்னு சொல்லு''

''நிச்சயமா இப்ப இல்லை''

''என்ன சங்கரா, உன் பொண்ணு இப்படி சொல்றா?'' என்றார் முத்துக்கவுண்டர் சங்கரனிடம்.

''என்ன செய்ய சொல்றீங்க அண்ணே! பெரியவளைத் தான் அதிகம் படிக்க வைக்கலை. இவளையாவது படிக்க வைப்போம்னு வானதி சொன்னதற்கெல்லாம் தலையாட்டினோம். மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் படிச்சா. படிப்பு முடிஞ்சதும் கல்யாணம் பண்ணலாம்னா முடியாதுங்கறா. இத்தனை வருஷம் கஷ்டப்பட்டு பணம் செலவு செய்து படிச்சதுக்கு பலன் வேண்டாமா? வேலை பார்த்த பிறகு தான் திருமணம் என்கிறாள்'' என்றார் சங்கரன்.

''இங்கே இருந்து கொண்டு என்ன வேலை தேட முடியும்? விவசாயமும், மில்லும் தானே இருக்கிறது. கோயம்புத்தூர் போனால் தான் உண்டு'' என்றார் முத்துக்கவுண்டர்.

''இன்டர்நெட்டில் இருந்த இடத்திலிருந்தே வேலை தேடலாம் மாமா'' என்றாள் வானதி.

''நீ சம்பாதிச்சுத்தான் நிறையனும்ங்கற நிலையில நாம இல்லை வானதி. காலாகாலத்துல கல்யாணம் பிள்ளை குட்டின்னு'' வேணி முடிக்கும் முன் வானதி இடைமறித்தாள்.

''போதும்மா. இருக்கவே இருக்கு. உங்க கல்யாணமும் பிள்ளை குட்டியும். அக்காவை இப்படித்தான் அவசரமா கட்டி வெச்சீங்க.

வாழ்க்கைன்னா என்னன்னு தெரியறதுக்கு முன்னாடியே கழுத்தை நீட்டிட்டு செக்கு மாடு மாதிரி சுத்திக்கிட்டு இருக்கா. நானாவது கொஞ்ச நாள் பிரீயா இருக்கேன்''

மகள் சொல்வது சங்கரனுக்கு நியாயமாகவே பட்டது. அவர் தலையசைப்பதற்குள் வேணி சொன்னாள் ''நீ வேலைக்கு போய் செட்டில் ஆகி திருமணம் செய்து கொள்வதென்றால் இன்னும் நாலு வருஷமாவது ஆகும். இப்பவே எங்களுக்கு ஷுகர், பி.பி.ன்னு உடம்பிருக்கு. நீ கல்யாணத்துக்கு சம்மதிக்கும் போது நான் போய் சேர்ந்துட்டேன்னா உனக்கு யார் செய்வாங்க? என்னதான் அக்கா இருந்தாலும் அம்மா பிள்ளைக்கு செய்யற மாதிரி வருமா?'' வேணி கண்ணை கசக்க, சங்கரன் தடுமாறினார்.

''அம்மா நான் கல்யாணமே வேண்டாம்னா சொன்னேன். கொஞ்ச நாள் வேலை பார்க்கறேன்னு தானே சொன்னேன். இதுக்காக நீயும் கவலைப்பட்டு அப்பாவையும் குழப்பணுமா?'' என்றாள் வானதி.

''சரி நீ எப்ப கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொல். நான் நிம்மதியா



என் வேலையை பாத்துட்டு இருப்பேன்'' என்றாள் வேணி.

''அம்மா நான் தேதி குறிப்பிட்டு அக்ரிமென்ட் போட்டு தரவா முடியும்?'' என்றாள் வானதி.

அம்மாவுக்கும், மகளுக்கும் நடந்த விவாதத்தில் முத்து கவுண்டர் குறுக்கிட்டார். ''பெத்தவங்களுக்கு கவலை இருக்கிறது நியாயந்தானே வானதி. பொதுவா பொண்ணுங்க வெளியே போனாலே பாதுகாப்பு இல்லேன்னு தான் எங்க தலைமுறை கவலைப்படும். அதுவும் உன்னைப்போல் இத்தனை அழகான பெண் வேலை பார்க்க போகும்போது ஏற்படும் சிக்கல்கள் பற்றி கவலையிருக்கத்தானே செய்யும்'' என்றார் வானதியிடம்.

''சிக்கல்கள் எங்கு தான் இல்லை மாமா? போன வாரம் பொள்ளாச்சி சந்தைக்கு போய்விட்டு வந்த பக்கத்து வீட்டு அக்காவிடம் குடிபோதையில் ரவுடி பசங்க கலாட்டா பண்ணலியா? கணவனோடு சினிமா பார்க்க போன நம்ம வாத்தியார் பொண்ணு கலாவை யாரோ இடித்து தியேட்டரிலேயே கலாட்டாவாகலியா?'' என்றாள் வானதி.

''அதெல்லாம் சரி தான். இது போல பெரிய படிப்பு படித்து வேலை பார்க்கப்போகும் இடத்தில் சில பெண்களுக்கு மனம் தடுமாறிப் போகிறது''முத்துக்கவுண்டர் தொடர்ந்து பேசும் முன் வானதி குறுக்கிட்டாள்.

''உங்களுக்கு அந்த பயமே தேவையில்லை. நான் காதல் என்றெல்லாம் சறுக்கி விழுகிற ஆளில்லை. அம்மாவையும், அப்பாவையும் எப்போதும் நான் தான் அருகே இருந்து கவனித்துக் கொள்ளப்போகிறேன். எனவே எனக்கு மாப்பிள்ளை பார்க்கும்போது கூட இங்கேயே இருக்க சம்மதிப்பவனைத்தான் திருமணம் செய்து கொள்வேன்''

''இதென்னடி புதுக்கதை?'' என்றாள் வேணி வியப்புடன்.

''புதுசில்லமா. எப்போதும் மனசில் உள்ளது தான். இப்போது நேரம் வந்ததால் சொல்கிறேன். அக்கா திருமணமாகி போன போது நாம் அடைந்த வேதனையை மறுபடியும் படக்கூடாது''

''காலங்காலமாக இது நடப்பது தானே வானதி. பெண் மணமாகி புகுந்த வீடு போவது புதுசா என்ன? நான் உள்பட எல்லோரும் அப்படி வந்தவர்கள்தானே'' என்றாள் வேணி.

''அப்பா, அம்மா சொல்வதைப் பார்த்தால் நான் உங்களுடனேயே இருந்து விடுவதில் விருப்பம் இல்லை போலிருக்கிறதே'' என்றாள் வானதி தந்தையிடம் .

''நம் வீட்டில் இல்லாமல் வேறு யார் இருப்பார்களாம்? எனக்கு நீ மகள் மட்டுமல்ல மகனும் கூடத்தான். அதனால் இங்கேயே இருந்து விடு கண்ணா'' என்றார் சங்கரன் பெருமையுடன்.

''சரி தான். இந்த வயலில் வந்து வசிக்க வேண்டுமென்றால் மகளுக்கு ஏர் உழுகிறவனைத்தான் மாப்பிள்ளையாய் பிடிக்க வேண்டும்'' என்றாள் வேணி கிண்டலாய்.

''ஏன், ஏர் ஓட்டுகிறவன் என்றால் மட்டமா பிளைட் ஓட்டுகிறவன் தான் உசத்தியா? இரண்டுமே நாட்டுக்குத் தேவையான தொழில் தான். என்னைப் புரிந்து கொண்டு நம் குடும்பத்துடன் இருக்க சம்மதிப்பவன் யாராய் இருந்தாலும் அவனைத்தான் திருமணம் செய்து கொள்வேன்'' என்றாள் வானதி.

''நீ தோளில் பையை மாட்டிக் கொண்டு வேலைக்கு போக, உன் கண வன் வீட்டில் சமைத்து வைத்துவிட்டு உனக்காக காத்திருந்தால் நன்றாகத் தான் இருக்கும்'' என்றாள் வேணி வாய்விட்டு சிரித்தபடி.

''அப்பா பாருங்கப்பா, எப்படி கிண்டல் பேசறாங்க'' என வானதி தந் தையின் தோளில் சாய்ந்து சிணுங்க, ''அவ கிடக்கறா விடும்மா'' என்றார் சங்கரன் செல்லமாக.

முத்துக்கவுண்டர் சொன்னார், ''என்னை ப்பாரேன் இரண்டு பையன் களுக்கும் திருமணம்செய்து வைத்ததும் சொத்தைப் பிரித்து கொண்டு போய் விட்டார்கள். மனைவியை இழந்த நான் மகன்களுக்கும் வேண்டாத குப்பையாகிப்போனேன். வானதியைப் பார்க்கும் போதெல்லாம் நமக்கு ஒரு பெண் இருந்திருந்தால் என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை''

முத்துக்கவுண்டரின் குரல் தழுதழுக்க வானதி வாஞ்சையுடன் அவ ரைப் பார்த்து புன்னகைத்தாள். ''நாம் வேறு வேறு வகுப்பைச் சேர்ந்தவர் கள் என்றாலும் என் அம்மா உங்களை அண்ணா என்று கூப்பிடுவதால் நான் மாமா முறை வைத்து அழைக்கிறேன். மற்றபடி நானும் அக்காவும் குழந்தையிலிருந்து உங்கள் மடியில் தவழ்ந்து விளையாடி இருக்கிறோம். என் அப்பா மீதிருக்கும் அன்பும், மதிப்பும் உங்கள் மீதும் எங்களுக்கிருக் கிறது''

முத்துக்கவுண்டர் நெகிழ்ச்சியுடன் புன்னகைக்க வீட்டிற்குள்ளேயி ருந்து டெலிபோன் மணியடிக்கும் சத்தம் கேட்டது. வானதி போனை எடுக்க செல்லவும். முத்துக்கவுண்டர் அப்போது தான் நினைவு வந்தவ ராக சங்கரனிடம் சொன்னார்.

''செய்தி கேள்விப்பட்டாயா? உன் சின்னம்மா தவறிட்டாங்களாம்''

சங்கரனின் முகம் இறுகிப்போனது. ''எனக்கு சின்னம்மா, பெரியம்மா என்று எந்த உறவும் இல்லை கவுண்டரே. தெரியாதா உங்களுக்கு?'' என் றார் கடினமான குரலில்.

''நீ இல்லைன்னு சொன்னா இருக்கிற உறவு இல்லாமலா போயிரும். உங்கப்பா கூட இப்ப ஊர்ல இல்லையாம். சின்ன மகன் போக்கு பிடிக் காம மனம் நொந்திருந்தவரை மகள் தன்னுடன் அழைத்துப் போய்விட் டாளாம்'' என்றார் முத்துக்கவுண்டர்.

''யார் எங்கே போனாலும் எனக்கு அக்கறை இல்லை. எங்கம்மாவு டன் முடிஞ்சு போச்சு எல்லாம்'' என்றார் சங்கரன் துண்டை உதறி தோளில் போட்டபடி.

முத்துக்கவுண்டர் பொதுவாய் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு போன பிறகும் சங்கரன் ஏதோ நினைவுகளில் மூழ்கியவாறே அப்ப டியே அமர்ந்திருந்தார். இரண்டு முறை அழைத்தும் அவர் கவனம் கலை யாமல் போகவே அருகில் வந்த வேணி சமாதானமாக சொன்னாள்.

''நடந்து முடிந்தவைகளை நினைத்து எந்த பலனும் இல்லை. எங்கி ருந்தாலும் எல்லோரும் நல்லா இருக்கணும்னு நினைச்சிட்டு, நம்ம வேலையை பார்ப்போம்''

''எப்படி வேணி மறக்க முடியும்? எத்தனை அவமானத்தை வலியை அனுபவித்திருக்கிறேன் ஒரு தவறும் செய்யாமல். எப்படி என்னால் மறக்க முடியும்?''



''மன்னித்து பாருங்களேன். சுலபமாக மறக்கவும் முடியும்''

''நான் ஞானியல்ல வேணி. என்னால் முடியாது'' என்றார் சங்கரன் தீர் மானக் குரலில்.

'அப்பா' என்றழைத்தபடி அங்கே வந்த வானதி ''ஏன் இப்படியிருக் கீங்க? என்ன விஷயம்?'' என்றாள் பெற்றோர் இருவரையும் பார்த்து.

பதிலாக 'போனில் யார் வானதி?' என்றாள் வேணி.

''தேங்காய் மண்டிக்காரர் எப்ப காய் எடுக்க வரலாம்னு கேட்டார்'' என வானதி சொல்லவும் சங்கரன் மண்டிக்காரரிடம் போனில் பேசப்போனார்.

''கை, கால் கழுவிட்டு வா வானதி. சாப்பிடப்போகலாம்'' என வேணி யும் சமையலறைக்கு சென்றாள்.

உடை மாற்றி வந்த வானதியுடன் சங்கரனும் சேர்ந்து கொள்ள, ''அப்பா நீங்க இன்னுமா சாப்பிடல?'' என்றாள் வானதி வியப்புடன்.

''உன்னை விட்டுட்டு என்னைக்கு சாப்பிட்டிருக்கார்?'' என்றாள் வேணி.

''அப்பா இன்னைக்கு டவுனுக்கு போயிட்டு, தோப்புக்கும் போய் அலைஞ்சு களைப்போட வந்திருக்கார். மதியமும் வெளியே சாப்பிட்டி ருக்க மாட்டார். மாலையில் வந்ததும் சாப்பிட வைக்க வேண்டாமா? என் னம்மா நீ?'' என்றாள் வானதி குறையுடன்.

''கேட்டீங்களா? உங்களை நான் கவனிக்கிறதில்லையாம். இத்தனை நாள் பார்க்காமத்தான் இந்த குடும்பம் இப்படி இருக்கா?'' வேணி கணவ னிடம் முறையிட்டாள்.

''ஒரு வேளை நீ கவனித்துப் பார்த்திருந்தால் இன்னும் நன்றாக நடக் குமோ என்னவோ'' என சங்கரன் மகளுடன் சேர்ந்து சிரித்தார்.

கணவன் மனம் லேசானதை உணர்ந்து ''ரெண்டு பேரும் ஏதாவது கேட்டு எங்கிட்ட வாங்க. அப்புறம் பேசிக்கறேன்'' என்றாள் வேணி பிகு வுடன்.

தொடர்ந்து பேச்சும் சிரிப்புமாகவே மூவரும் சாப்பிட்டு முடித்தார்கள்.

## 2

உலகின் கவர்ச்சி தலைநகரமான பாரிஸ் நகரம் அந்த இரவுக்கே உரிய அற்புத அழகுடன் ஜொலித்தது. சத்தமில்லாத குரலில் நாசூக்காக பேசியபடி மக்கள் 'ஷேம்ப் எலிஜே'' சாலையில் நள்ளிரவைத் தாண்டியும் நடந்து கொண்டிருந்தார்கள். 'ஆபரா'க்களில் நாடகங்க ளில் மூழ்கிப்போன இலக்கிய கும்பலும், பேஷன் ஷோக்களில் அறைகுறை ஆடை அணிவகுப்பை கண்டு ரசிக்கும் கும்பலுமாய் நகரம் ஏக சந்தடியுடன் இருந்தது. தெருவுக்கு தெரு இருக்கும் புகழ்பெற்ற மியூசியங்களிலும், ஓவியம், சிற்பங்களிலும் மனதை பறிகொடுத்து நாளையும் பொழுதையும் மறந்து போய் நின்றிருந் தது கலையார்வம் மிக்க ரசிகர் கூட்டம்.

இவற்றின் மத்தியில் பிரமாண்டமான ஒளி பிம்பமாய் நின்றது. பாரி ஸின் அடையாள சின்னமான ஈபிள் டவர். டவரின் விளக்கை அணைத்து எரியவிடும் ஒளிக்காட்சி நடந்து கொண்டிருக்க சீனர்கள், கொரியர்கள், இந் தியர், அமெரிக்கர் என டூரிஸ்டுகள் கலவையாய் நின்று வேடிக்கை பார்த்

துக் கொண்டிருந்தனர்.
அருகிலேயிருந்த சிறு காபி ஷாப்களில் ஒன்றில் அமர்ந்து காபி குடித்
துக் கொண்டிருந்தார்கள் உத்சவ்வும், வரதராஜுனும்.
''தாத்தா காபி எப்படியிருக்கிறது?'' என்றான் உத்சவ் தன் தாத்தாவி
டம் . ''வேறு எங்கு போய் காபி குடிச்சாலும் பிடிக்காது'' என்றார் வரத
ராஜுன் ஏக்கமும், துக்கமும் சேர்ந்த குரலில்.
''தாத்தா நாம் வெளியே வந்ததே உங்களுக்கு ஒரு மாற்றம் வேண்டும்
என்பதற்காகத்தான். இங்கே வந்தும் நீங்கள் கவலைப்பட்டால்''... உத்சவ்
முடிக்காமல் நிறுத்த வரதராஜுன் சமாளித்துக் கொண்டார். தன்னை உற்சா
கப்படுத்த பேரன் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கு ஈடு கொடுப்பவ
ராக டூரிஸ்டுகளுடன் சேர்ந்து ஈபிள் டவரை வேடிக்கை பார்த்தார்.
''அழகான கோபுரம், இல்லையா?'' என்றார் பேரனிடம். உத்சவ் பல
மாக சிரித்தான். ''வெளியூர்காரர்கள் தான் இப்படி சொல்கிறார்கள். தங்
கள் புராதன சிற்பங்களிலும், கலைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள
உள்ளூர் மக்கள் இதை அசிங்கமான எலும்புக்கூடு போல இருக்கிறது என்
றும், அழுது வடியும் விளக்கு கம்பத்தை போல் இருக்கிறது என்றும் ஐரோப்
பிய ரோம் கட்டிட கலைக்கு இது ஒரு சாபக்கேடுஎன்றும் இது கட்டிடக்க
லைக்கே இதுவரை யாரும் செய்யாத தீங்கு என்றும் பலவாறாக விமர்ச
னம் செய்கிறார்கள். இதைவிட வேடிக்கை என்ன தெரியுமா? பிரபல
எழுத்தாளர் மாபாசான் இந்த டவரின் முதல் தளத்திலுள்ள ரெஸ்ட்டாரண்
டிற்கு அடிக்கடி செல்வாராம். ஏன்? என்று கேட்டதற்கு பாரிசில் இங்கிருந்து
மட்டும் தான் இந்த டவரை பார்த்துத் தொலைக்க வேண்டியதில்லை என்
றாராம்''
உத்சவ் சொல்ல வரதராஜுன் புன்னகையுடன் தலையசைத்தார்.
''பாரிஸ் நகரத்தை ஒரு திறந்தவெளி மியூசியம் என்று தான் சொல்லு
வார்கள் உத்சவ். அதற்கு தகுந்தாற்போல் ஒவ்வொரு தெருவிலும், சதுக்கத்
திலும், தோட்டத்திலும் ஏதாவது ஒரு புராதன சிலையோ, கட்டிடமோ
கண்ணை கவர்கிறது. கிட்டத்தட்ட ஆறு நூற்றாண்டு காலமாக வளர்ந்தி
ருக்கும் பாரிஸ் நகரம் புராதன அழகு மாறாமல் நவீன பாணி வித்தியாச
மாக உறுத்தாமல் ஒரு தனித்தன்மையுடன் நிற்பதற்கு காரணம் பிரெஞ்ச்
மக்களுக்கு இயல்பாக இருக்கும் ரசனை தான். அதுவும் ஜோதிக் ஆர்கி
டெக்குக்கு எடுத்துக்காட்டாய் நிற்கும் நோட்ரடாம் கதீட்ரலை பார்த்த கண்
களுக்கு வேறு எந்த அழகும் கண்ணில் படாது'' என்றார் வரதராஜுன்.
''தாத்தா நீங்கள் முதன் முதலாய் பாரிஸ் வரும்போது உங்களுக்கு

''சம்மர் கேம்பில் சமையல்
சொல்லித் தர்றாங்கலாம்..''
''போயிட்டு வாயேன்...''
''நான் சொல்ல வந்தது உங்
களை''
-ராஜிராதா, பெங்களூர்.





என்ன வயதிருக்கும்?'' என்றான் உத்சவ்.
''இருபத்தி மூன்று வயதில் வந்தேன். ஐம்பத்தைந்து வயதில் உன் பாட்
டியுடன் அங்கேயே செட்டிலாகும் எண்ணத்தில் திரும்பி இந்தியா
போனேன். சில வருடங்களில் உன் பாட்டி நோய்வாய்ப்பட திரும்பி இங்கே
வந்தோம். உன் அப்பா லண்டனுக்கு அழைத்துச் சென்றார். பாரிசிலும் காட்
டினோம். சொல்லி வைத்தாற்போல் எல்லா டாக்டர்களும் ஒரே மாதிரி
சொன்னார்கள். நாட்களைத் தள்ளிப்போடலாமே தவிர, பிழைக்க வைக்க
முடியாது என்று ஏதோ பிறகு இரண்டு வருடம் அவள் உயிரோடு இருந்
ததே பெரிய விஷயம்'' என்றார் வரதராஜுன்.
உத்சவ்வின் செல்போன் சிணுங்கவும், நெம்பரைப் பார்த்ததும் ''ஹாய்
டாடி'' என்றான் ஸ்கிரீனை தொட்டு.
''நீங்கள் இருவரும் எங்கேயிருக்கிறீர்கள்?'' என்றார் உத்சவ்வின் அப்
பாவும், டாக்டருமான ராமச்சந்திரன்.
''ஈபிள் டவர் முன்பு அமர்ந்திருக்கிறோம் டாடி''
''குளிர்காலம் ஆரம்பித்து விட்டது உத்சவ். தாத்தாவிற்கு ஒத்துக்
கொள்ளாது. சீக்கிரமாய் கிளம்பி வாருங்கள் ''என்றார் ராமச்சந்திரன்.
''வீட்டிலேயே இருந்து தாத்தாவிற்கு போரடித்து போனதால் தான்
வெளியே வந்தோம். பாரிஸின் குளிர் எனக்கும் உங்களுக்கும் முன்பே தாத்
தாவிற்கு பழக்கம். நினைவில் வையுங்கள் டாடி'' என்றான் உத்சவ் சிரிப்பு
டன்.
''எனக்கு நன்றாக நினைவிருக்கிறது உத்சவ். ஆனால் தாத்தாவிற்கும்
வயதாகிறது. எப்போதும் நம் உடல் ஒரே மாதிரி ரியாக்ட் பண்ணாது'' என்
றார் ராமச்சந்திரன்.
''ஓ.கே. டாக்டர். வருகிறோம்'' என்றான் உத்சவ். ''தாத்தா உங்கள்
மருமகனின் ஆர்டர். இதற்கு மேல் தாமதிக்க முடியாது'' என வரதராஜின்
கைகளைப் பற்றியபடி உத்சவ் நடக்கத் தொடங்கினான்.
அவர்கள் வீட்டை அடைந்து காரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைகை
யில் மைதிலி இரவு சாப்பாட்டுடன் தயாராக இருந்தாள்.
ராமச்சந்திரன், உத்சவ், வரதராஜுன் மூவரும் டேபிளை சுற்றி அமர,
அவர்களுடன் தனக்கும் சேர்த்து பரிமாறியபடியே மைதிலி சொன்னாள்.
''ராம், இன்று மிஸஸ் பிளாரென்ஸ் போன் செய்திருந்தாள்''
''தோழிகள் தினமும் தான் பேசிக் கொள்கிறீர்களே' என்றார் ராமச்சந்
திரன் அதில் சுவாரஸ்யம் ஏதுமின்றி.
''தினமும் பேசுகிற விஷயமில்லை. புதிதாய் விஷயம் இருக்கிறது''
என்றாள் மைதிலி சஸ்பென்ஸ் குரலில்.
''என்ன விஷயம்?''
''பிளாரென்ஸ்ற பெண் ஆன் நம் உத்சவ்வை காதலிக்கிறாளாம். ஏற்க
னவே இவனிடமும் சொல்லியிருக்கிறாளாம். பிளாரென்ஸ் இருவருக்கும்
விரைவில் எங்கேஜ்மென்ட் செய்து விடலாம் என்கிறாள்''
''நிஜமாகவா? உத்சவ் நீ என்னிடம் சொல்லவேயில்லையே''என்றார்
ராமச்சந்திரன் வியப்புடன்.
''சொல்வதற்கு எதுவும் இல்லை டாடி. ஆன் என்னிடம் பரபோஸ்
செய்தாள். 'நோ ஐடியா' என்றேன். யோசித்து சொல் என்றாள். பிறகு

அதை நான் மறந்தே போய்விட்டேன்'' என்றான் உத்சவ் கேஷுவலாக.

''உத்சவ் மைன்ட் பண்ணவேயில்லை. நீ அதற்குள் நிச்சயதார்த்தம் வரை போய் விட்டாயே' 'என்றார் ராமச்சந்திரன்.

''சரி எப்படியும் இவனுக்கு திருமண வயதாகவில்லையா? நாம் பெண் பார்க்கத்தானே வேண்டும். அதற்கு இவனுக்கும், நமக்கும் தெரிந்த பெண்ணாய் இருந்தால் நல்லது தானே. பிளாரென்ஸ்சின் கணவர் மார்க்- உத்சவ் இருவரும் பிஸினஸ்ஸில் பார்ட்னர்கள். உங்களது மருத்துவமனை உத்சவியில் கூட பிளாரென்ஸ் கணிசமான பங்குகளைவாங்கியிருக்கிறாள். இவர்கள் இருவரும் இணைவது பயனுள்ளதாக இருக்கும்'' என்றாள் மைதிலி.

அதுவரை அமைதியாக அவர்கள் உரையாடலை கவனித்துக் கொண்டிருந்த வரதராஜு சொன்னார். ''ஒரு திருமணம் நடப்பதற்கு பரஸ்பர பிரியம் மட்டுமே காரணமாய் இருக்க வேண்டும்.-கமிட்மெண்ட்டுக்காக கல்யாணம் பண்ணக்கூடாது மைதிலி''

''நான் உத்சவ்வை வற்புறுத்தி பிரியமில்லாமல் திருமணம் செய்ய சொல்ல வில்லை அப்பா. ஆன் நம் இந்திய குழந்தைகளுடனேயே வளர்ந்த பெண். பிளாரன்ஸ் டிபிக்கல் பிரெஞ் கன்சர்வேடிங் குடும்பத்தை சேர்ந்தவள். எனவே நிச்சயம் ஒழுக்கமும், பண்பும் உள்ளவளாக இருப்பாள்'' என்றாள் மைதிலி.

''உத்சவ் சரி என்றால் எனக்கு ஆட்சேபனை இல்லை'' என்றார் ராமச்சந்திரன்.

மூவரும் உத்சவ்வை பார்க்க அவன் சொன்னான். ''உங்கள் ஆர்வம் எனக்கு புரிகிறது. என் பிஸினெஸ் விஷயமாக சில யோசனைகள் வைத்திருக்கிறேன். அது முடிந்த பிறகு தான் திருமணத்தை பற்றி யோசிக்க வேண்டும்''

''அப்படியானால் அவர்களை பொறுத்திருக்க சொல்லலாம்'' என்றாள் மைதிலி.

'பொறுத்திருந்தாலும் அம்மா, எனக்கு ஆன் மீது என்னையும் மீறிய ஈர்ப்பு ஏற்பட்டால் தான் இந்த திருமணம் சாத்தியம். ஆனால் ஏற்படுமா என்று என்னால் சொல்ல முடியாது. ஏனென்றால் என் சிறு வயது தோழியாகத்தான் அவளை நினைக்க முடிகிறது. வேறு எதுவும் நினைக்க முடியாது என்னால்'' என்றான் உக்சவ் உறுதியான குரலில்.

ராமச்சந்திரன் மனைவியைப் பார்க்க, ''சரி உன் விருப்பம் உத்சவ்'' என்றாள் மைதிலி ஏமாற்றத்துடன்.

தாயின் முகத்தைப் பார்த்த உத்சவ் சிரித்தான். ''நீ கவலைப்படாதே மம்மி. ஆன்னை விட நல்ல பெண்ணை அழைத்து வந்து உன் முன் நிறுத்த வேண்டியது என் பொறுப்பு'' என்றான் சமாதானமாக.

''அதை கொஞ்சம் விரைவாக செய்'' என்றாள் மைதிலி.

அதன் பிறகு எதையும் விவாதிக்காமல் நால்வரும் சாப்பிடத் தொடங்கினார்கள்.

நாம் இருவர் நமக்கு ஒருவர் என்கிற குடும்பம் ராமச்சந்திரனுடையது. சென்னையில் ஒரு பெரிய மருத்துவமனையில் இதய நோய் நிபுணராக பணியாற்றிய ராமச்சந்திரனை வரதராஜு தன் நண்பர் மூலமாக சந்தித்தார். முதலில் எதேச்சையாக சந்தித்தவர் ராமச்சந்திரனின் குணம், குடும்பம் எல்லா



மும் பிடித்துப்போக தன் பெண்ணைக் கொடுத்து பாரிசுக்கு அழைத்து வந்துவிட்டார். இங்கு மருமகன் வேலை பார்க்கத் தொடங்கியதும் அவர் மருத்துவமனை அருகிலேயே அவர்களுக்கு குடித்தனம் அமைத்து தந்தார்.

பிறகு வரதராஜு தன் மகன் மோகனுக்கும் ஒரு பெண்ணை பார்த்து திருமணம் செய்து தான் நடத்திக் கொண்டிருந்த டிபார்ட்மெண்ட் ஸ்டோரை மகனிடம் ஒப்படைத்தார். அதன் பின் அவரது வெகு நாள் ஆசைப்படி யார் தடுத்தும் கேளாமல் தன் மனைவியுடன் கையில் கணிசமான பணத்துடன் இந்தியா போய் சேர்ந்தார். தன் பூர்வீகமான கோயம்புத்தூரில் ஒரு ஸ்பின்னிங் மில்லை தொடங்கி ஒரு வீட்டையும் வாங்கினார். சொந்த ஊரில் வசதியாக வாழ்கிறோம் என்ற கவுரவத்துடனும், ஏதேனும் லட்சியத்துடனும் வளைய வந்தவரால் கொஞ்ச நாட்களுக்கு பிறகு நிம்மதியாய் இருக்க முடியவில்லை.

ஏனென்றால் அவர் மனைவிக்கு புற்றுநோய் ஏற்பட்டிருந்தது. மருமகனின் வற்புறுத்தலுக்காக பாரிஸ் அழைத்துப்போய் காண்பித்தும் பலனில்லாமல் இரண்டு வருடம் நோயுடன் போராடி அவளது விருப்பப்படி கோயம்புத்தூரிலேயே இறந்தாள். தாயின் துக்கத்திற்கு மைதிலியும், மோகனும் பாரிசிலிருந்து குடும்பத்துடன் கிளம்பி வந்தனர். துக்கம் முடிந்து மைதிலி மட்டும் திரும்பிப்போக மோகன் தந்தையுடனேயே தங்கி விட்டான். துக்க வீட்டின் சம்பிரதாயங்கள் முடிந்து சிறிது நாள் கழித்து மனம் இயல்பு நிலைக்கு திரும்பிய ஒரு தருணத்தில் வரதராஜு சொன்னார். 'நீ போய் உன் வேலையை கவனி மோகன். இந்த கிழவனுக்காக குடும்பத்துடன் இன்னும் எத்தனை நாள். இங்கே கிடப்பாய்? பெண்ணின் படிப்பு, உன் வியாபாரம் எல்லாமே பாதிக்கும். நான் இருக்கப்போகிற கொஞ்ச நாளை என் விருப்பப்படி இங்கேயே கழித்து விடுகிறேன்.' மோகன் உடனே பதில் சொல்லாமல் சிறிது நேரம் தலை குனிந்து அமர்ந்திருந்தான்.

''அப்பா நான், என் மனைவி, மகளுடன் இங்கேயே தங்கி விடுவதென தீர்மானித்து ஒரேடியாக வந்துவிட்டேன்'' என்றான் மெதுவான குரலில்.

''இதென்ன திடீர் முடிவு?'' என்றார் வரதராஜு வியப்புடன்.

''கொஞ்ச நாளாகவே ஸ்டோர் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. அதனால் கடன் வேறு ஏற்பட்டது. சமாளிக்க முடியாமல் ஸ்டோரை விற்றுவிட்டேன்''.


வரதராஜு அதிர்ந்து போனார்.

அவர் முதன் முதலில் பாரிசுக்கு சென்ற போது இவரைப் போல

''உன்னையும் உன் கணவரையும் இணைச்சு வெச்சிருப்பது குழந்தைகளா, கடமையா...''?

''ரெண்டுமில்லே அவர் சம்பள பாக்கெட்...''

-ராஜிராதா, பெங்களூர்.



பெரிய படிப்பு ஏதுமின்றி காண்ட்ராக்டில் வந்த சிலர் காண்டிராக்ட் முடிந்த பிறகு, ஊர் திரும்பி போனாலும் வாழ வழியில்லை என்பதால் அங்கேயே சிறு ப்ளாட்பார கடை ஒன்றை ஆரம்பித்தார்கள். சிகரெட்டும், கோக்கும், காபியும் விற்றார்கள். இவர்களை இனம் கண்ட அந்த பகுதியில் வசிக்கும் இந்தியர்கள் இந்தியாவிலிருந்து வரும் மசாலா பொடி, அரிசி, பருப்பு கிடைக்குமா என்று கேட்கவும் அவற்றையும் தருவித்து கொடுத்தார்கள். இப்படி கொஞ்சம் கடை வளர்ந்து வாடகை இடம் பிடித்து அங்கு மாற்று கையில் கடையின் பார்ட்னர்கள் இருவரும் ஊர் பக்கமே போய் விடுவதாக சொன்னார்கள்.

அவர்கள் முதலீடு செய்த பணத்தை தவணை முறையில் அனுப்பி வைப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்டு கடையை வரதராஜு ஏற்றுக் கொண்டார். கடன் முடியும் சமயம் அவரது விசாவும் முடியும் தருவாயில் இருந்தது. இவரை போலவே வாழவந்த சிலர் நிரந்தரமாக தங்கியிருக்க செய்து கொள்ளும் ஏற்பாட்டின் படி பிரான்ஸ் குடியுரிமை பெற்ற பெண்ணை அவசரமாக திருமணம் செய்து கொண்டார். பாண்டிச்சேரியில் தான் வேலை பார்த்த பிரெஞ்சுக்காரர்களுடன் சிறுவயதிலே பாரிஸ் வந்து குடியுரிமை பெற்றிருந்த அந்த பெண் சரளா மகிழ்ச்சியுடன் வரதராஜுவை கணவனாக ஏற்றுக் கொண்டாள். குடியுரிமை கிடைத்ததும் விவாகரத்து செய்து கொள்வதாக இருவரும் பேசி செய்து கொண்ட திருமணம் தான். என்றாலும் சரளாவின் நிராதரவான நிலை, அவருக்கு உதவியதால் ஏற்பட்ட நன்றியுணர்ச்சி எல்லாம் சேர்ந்து வரதராஜுவால் அவளை உதற முடியவில்லை. கணவனும், மனைவியும் விடாது பாடுபட்டதன் பலனாக வரதராஜுவின் வியாபாரம் மிகுந்த வளர்ச்சியடைந்தது. பாரிசில் சொந்தமாய் காரும், வீடும் வாங்கினார். மகனையும், மகளையும் படிக்க வைத்து சிறப்பாய் திருமணம் செய்து வைத்தார்.

பல வருடங்களாய் மனதை உறுத்திக் கொண்டிருந்த விஷயத்திற்கு தீர்வு காண இந்தியா வந்தார். தேடி வந்த சிக்கல் தீருமுன் மகன் புதிய பிரச்சனையுடன் வந்து நின்றான்.

''மோகன் எத்தனை பெரிய டிபார்ட்மெண்ட் ஸ்டோர் நம்முடையது? எவ்வளவு வருமானம் வந்து கொண்டிருந்தது? எல்லாம் எப்படி ஒரேயடியாக போய்விடும்?'' என்றார் வரதராஜு நம்பமாட்டாத குரலில்.

''ஏதோ கெட்ட நேரம்ப்பா. போய் விட்டது'' என்றான் மோகன் ஒற்றை வார்த்தையில்.

''எவ்வளவு சாதாரணமாக சொல்கிறாய். எத்தனை ஆண்டுகள் இரவு பகலாய் உழைத்து படிப்படியாக நான் வளர்த்த தொழில் தெரியுமா? இதில் எத்தனை இழப்புகள், சிக்கல்கள் பிரச்சனைகளை சந்தித்திருக்கிறேன். அத்தனையுமா வீணாகி விட்டது?'' என்றார் உடைந்து போன குரலில்.

மோகன் பதிலே பேசாமல் நின்றிருக்க வரதராஜுக்கு தாங்க முடியாத துக்கம் ஏற்பட்டது. தான் இரத்தத்தை வியர்வையாக்கி உயிரை உழைப்பாக்கி கட்டிய கோபுரம் கண்முன்னே சரிந்து மாயமாய் போனதை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. வரதராஜு இடிந்து போனவராய் முடங்கிக் கிடக்க அந்த இடைவெளியில் மோகன் இயல்பாக அந்த வீட்டில் குடும்பத்துடன் செட்டிலானான். வரதராஜுன் ஸ்பின்னிங் மில்



பொறுப்பையும் அவனே ஏற்றுக் கொண்டான். வரதராஜு சிறகொடித்த பறவையானார்.

மோகன் அவருடன் வசிக்க வந்து சிறிது நாள் ஆன பிறகு தான் அவனுக்கு நஷ்டம் எதனால் ஏற்பட்டதென்று அவருக்கு புரிந்தது.

மோகன் பொறுப்பற்றவனாக இருந்தான். தொழிலை வேலையாட்களிடம் ஒப்படைத்து விட்டு மனைவி, மகளுடன் ஷாப்பிங், பிக்னிக் என்று சுற்றி கொண்டிருந்தான். வீட்டில் இருந்த நேரத்திலும், விஸ்கியும், சிகரெட்டுமாய் தன் அறையிலேயே அடைந்து கிடந்தான். மோகனின் மனைவி சுதாவின் வீண் ஆடம்பரம், பேத்தி பிரீதாவின் அடாவடி பரபரப்பு எதுவுமே வரதராஜுக்கு பிடிக்கவில்லை.

தான் எடுத்து சொல்லி புரிந்து நடந்து கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லை என்பதால் வரதராஜு என்ன செய்வதென யோசிக்கத் தொடங்கினார்.

அவர் மனக்கண் முன் லட்சுமி வந்து போனாள்.

என்னை மன்னித்து விடு லட்சுமி என்றார் வாய்விட்டு. வியாபாரத்தில் மூழ்கிப் போய் பணம் சம்பாதிக்கிற வேகத்தில் உன்னை மறந்து போனேன். அதே வியாபாரம் இப்போது என்னை எப்படி தள்ளி விட்டு போய்விட்டது பார்த்தாயா?

மூடிய இமைகளில் நீர் வழிந்தது. வரதராஜு வெறுமையுடன் நாட்களை கழித்த சமயத்தில் அப்பாவின் மனதை உணர்ந்தோ என்னவோ மைதிலி வரதராஜுவை கொஞ்சநாள் தங்களுடன் வந்து தங்கிப்போகும்படி வற்புறுத்தினாள்.

மகளின் அழைப்பைத் தட்ட முடியாமல் பாரீஸ் வந்தவருக்கு பேரனும், மருமகனும் தன்னை கவனித்துக் கொண்ட விதம் மனதுக்கு இதமாய் இருந்தது.

வீட்டின் முதல் பேரன் என்பதால் உத்சவ்விடம் அவருக்கு எப்போதுமே படிப்பில் முதுநிலை பட்டம் பெற்ற சமயம்தான் சரளா இறந்து போனாள். பிறகு அவன்தான் அம்மா மூலம் வற்புறுத்தி அவரை இங்கு வரவழைத்தான். தன் வேலை நேரம் போக மீதி நேரத்தை அவருடன் செலவிட்டான்.

டி.வி.யில் சன் நியூஸ் சேனலை ஓட விட்ட உத்சவ், தாத்தாவை அழைத்தான். தாத்தா இந்தியாவில் என்ன நடக்குதுன்னு பாருங்க. அநேகமாய் கோயமுத்தூர் வீடு கூட இதில் தெரிந்தாலும் தெரியும் என்றான் கிண்டலாய்.

தாத்தாவும் பேரனும் செய்தி விமர்சனத்தில் இருக்க, மைதிலி வந்து அவர்கள் அருகில் அமர்ந்தாள்.

''அப்பா ஈவ்னிங் மோகன் போன் செய்திருந்தான் '' என்றாள் வரதராஜுவிடம்.

''என்னவாம் அவனுக்கு ''என்றார் வரதராஜு அலட்சியமாக.

''அவனுக்கு பணம் வேண்டுமாம். தொழிற்சாலை நஷ்டத்தில் நடக்கிறதாம். என் கணவரிடம் கடனாக கேட்க சொல்கிறான். ''

''நீ கேட்காதே என்றார் வரதராஜு கோபத்துடன் மாப்பிள்ளையிடம் இதைப்பற்றி எதுவும் பேசாதே. மோகன் ஒரு ஊதாரி. சுயமாய் சம்பாதிக்க

வேண்டும் என்ற எண்ணமோ, கொடுத்ததை பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்போ இல்லாதவன். அவனுக்கு பணம் தருவது ஆற்றில் போடுவதை போலத்தான்'' என்றார் வரதராஜு.

''அவனுக்காக இல்லாவிட்டாலும் அவனை நம்பியிருக்கும் மனைவிக்காகவும், மகளுக்காகவும் ஏதாவது செய்யத்தான் வேண்டும்'' என்றாள் மைதிலி.

''உனக்கு தெரியாது மைதிலி. மோகனின் நிலைக்கு அவர்களும் ஒரு காரணம். அம்மாவும், பெண்ணும் ஒரு முழுநாள் வீட்டில் இருந்ததில்லை. தினமும் ஏதாவது சினிமா, பார்ட்டி என கிளம்பி விடுவார்கள். வீட்டில் இருக்கும் நேரத்தில் நண்பர்கள் கூட்டத்துடன் ஸ்பீக்கர்களில் பாட்டை அதிர வைத்துக் கொண்டு பெரிய சத்தத்துடன் பேச்சும் சிரிப்புமாக வீட்டை கலங்கடிப்பார்கள்.''

''மாமா எதுவும் சொல்ல மாட்டாரா? ''என்றான் உத்சவ் வியப்புடன்.

அவன் சரியாக இல்லாத போது மற்றவர்களை எப்படி சொல்ல முடியும்? என்றார் வரதராஜ் வெறுப்புடன்.

''மூவரும் யோசனையில் ஆழ்ந்து அமைதியாக மோகனுக்கு என்னதான் சொல்வது'' என்றாள் மைதிலி இறுதியாக.

''ஒரு பைசா தரமுடியாது என்று சொல். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஸ்டோரை விற்று நாசமாக்கியதுடன் தொழிற்சாலையையும் நஷ்டப்படுத்தியிருக்கிறான். என் இத்தனை வருட உழைப்பு கரைந்து போய் விட்டது'' என்றார் வரதராஜு ஆதங்கத்துடன். ''தாத்தா மாமாவை தொழிற்சாலையில் தன்னிச்சையாய் செயல்பட அனுமதித்தது உங்கள் தவறு. இங்கிருந்த ஸ்டோரை விற்றதுமே அவர் போக்கு புரிந்து அவர்களை வழிக்கு கொண்டு வந்திருக்க வேண்டும்.''

''குடும்பஸ்தனாகி விட்ட பிள்ளையையும், தலைக்கு மேல் வளர்ந்து நிற்கும் பேத்தியையும், மருமகளையும் நான் அதட்ட முடியுமா? உத்சவ்? அப்படி அதட்டினால்தான் என் பேச்சை கேட்பார்களா என்ன? ''

''ஏன் மாட்டார்கள்? சொல்கிற விதத்தில் சொன்னால் யாராக இருந்தாலும் வழிக்கு வந்துதான் ஆக வேண்டும் ''என்றான் உத்சவ் உறுதியான குரலில்.

''அப்படியானால் சொல்கிற பொறுப்பை நீ எடுத்துக் கொள். உன் மாமா குடும்பத்தை உன்னால் சரி பண்ண முடியுமா என்று பார்.''

டன் என்றான் உத்சவ் உற்சாத்துடன் மைதிலி வியப்புடன் மகனைப் பார்த்தாள். ''உன்னால் என்ன செய்ய முடியும் உத்சவ்? அதுவும் நீ பாரீசிலும் அவர்கள் இந்தியாவிலும் இருக்கையில் இது எப்படி சாத்தியம்?''

''மம்மி உங்களுக்கு தெரியும். நான் வாய் வார்த்தையாக எதையும் சொல்வதில்லை. சொன்ன பிறகு அதில் பின் வாங்குவதும் இல்லை.''

''சரி இப்போது என்ன முடிவெடுத்திருக்கிறாய்?''

''கொஞ்ச நாளாகவே இந்தியாவில் எங்கள் தொழிலை விரிவுபடுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இப்போது அதற்கான சந்தர்ப்பம் வந்திருக்கிறது. ஆனால் அதற்கு முன் தத்தாவிடம் ஒரு அக்ரிமெண்ட் இருக்கிறது எனக்கு.''

''என்ன அக்ரிமெண்ட்?'' என்றார் வரதராஜு வியப்புடன்.



''தாத்தா நாம் இருவரும் இந்தியா போகப்போகிறோம் என் விருப்பப்படி தொழிலையும், உங்கள் விருப்பப்படி மாமா குடும்பத்தையும் சரி செய்ய முடியுமா என்று பார்க்கிறோம். இதெல்லாம் செய்வதற்கு யாருக்கும் பதில் சொல்ல தேவையிராத முழு உரிமை என் கையில் இருக்க வேண்டும். உங்கள் வீடு, தொழிற்சாலை மற்ற சொத்துக்களின் பவர் ஆப் அட்டர்னி என்பெயரில் இருக்க வேண்டும். அதற்கு ஈடாக இங்கேயுள்ள என் தொழிலின் பார்ட்னர்ஷிப்பை உங்களுக்கு எழுதித் தருகிறேன். நாம் விரும்பியது போல விஷயம் வெற்றியடைந்தால் சொத்துக்களை மாமாவிடமே ஒப்படைத்து விடுவோம். முடியாத பட்சத்தில் வெற்றிகரமாய் பின்வாங்கி பவர் ஆப் அட்டர்னியை கேன்சல் செய்து கொண்டு இங்கேயே திரும்பி வந்து விடுவோம்.''

''நீ சொல்வதெல்லாம் சரிதான் உத்சவ். ஆனால் அக்ரிமெண்ட் மட்டும் வேண்டாம். நீ என் பேரன். என் சொத்துக்களுக்கு உரிமையுள்ளவனும் கூட நேர்மையானவன். உன் பெயரில் தொழிற்சாலையை நடத்தினாலும் அல்லது நீயே வைத்துக் கொண்டாலும் கூட எனக்கு மகிழ்ச்சிதான்'' என்றார் வரதராஜு.

''எங்களுக்கு வேண்டியது செய்திருக்கிறீர்கள் தாத்தா. அதற்கு மேல் ஆசைப்படுவது நியாயம் இல்லை. என்னதான் உறவும் உயிருமாக இருந்தாலும் பண விஷயத்தில் கரெக்ட்டாகத்தான் இருக்க வேண்டும். என்ற உத்சவ் அடுத்து வந்த நாட்களில் தான் சொன்னபடி அக்ரிமெண்ட் தயார் செய்தான். தாத்தாவும் பேரனும் பரஸ்பரம் கையொப்பமிட்டனர். உத்சவ் தன் அப்பாவிடம் தாத்தாவுடன் இந்தியா போகப் போவதாக சொன்னதும் ராமச்சந்திரன் ஆச்சரியமடைந்தார்.

''தாத்தாவிற்கு ஒரு மாற்றம் வேண்டுமென்றுதானே அவரை இங்கு வரவழைத்தோம்? திரும்பவும் எதற்கு அங்கே அழைத்துப் போக வேண்டும் ''என்றார்.

''இந்தியாவில் தொழிலை விரிவுப்படுத்த வேண்டும் என்ற என் கனவிற்கு டிரையல் பார்க்கப் போகிறேன். எல்லாம் ஒத்து வந்தால் அங்கே தொடங்கலாம். இல்லையென்றால் திரும்ப வந்துவிடுவேன்.''

''இங்கே இருக்கும் பிஸினெஸ் என்னாவது?''

''மார்க் அங்கிள் பார்த்துக் கொள்வார். தவிர நானும் தொடர்பில்தான் இருப்பேன்.''

''உனக்கு எதற்கு இந்த திடீர் தலைவலி?'' என்றார் ராமச்சந்திரன் முழுக்க சம்மதமின்றி.

''சவால்கள் இல்லாமல் சாதனைகள் இல்லை டாடி. எனக்கு ஒரு சவாலை ஏற்று சாதிக்க வேண்டும் போலிருக்கிறது.''

மறுபடி தயங்கியவரிடம் ''என் மீது நம்பிக்கை இல்லையா டாடி?'' என்றான் உத்சவ்.

மகன் முடிவெடுத்து விட்டதைக் கண்டதும்'' உன் பிரியப்படி செய் உத்சவ். தாத்தா உன் கூட இருக்கிறார். இப்போது உன் மாமா, அத்தையும் அங்கே இருப்பதால் எனக்கு நிம்மதியாகத்தான் இருக்கிறது, புதிய இடத்தில் வேலை செய்வது உனக்கு நல்ல அனுபவத்தைக் கொடுக்கும். போய் விட்டு வா'' என்றார் இறுதியாக. சரியாக பத்து நாட்களில் தன் வேலை

களை முடித்துக் கொண்டு பெற்றோரிடம் பிரியா விடை பெற்று தாத்தாவுடன் சார்லஸ் டிகால் விமான நிலையத்தில் விமானம் ஏறினான் உத்சவ். ஒரு சஸ்பென்ஸ் தொடரை பார்க்கப் போகும் திரில்லுடன் மைதிலி மகனை வழியனுப்பியும் வைத்தாள்.




**வீ**ட்டு வாயிலில் நின்றபடி தன் மூன்று வயது குழந்தைக்கு சாதம் ஊட்டிக் கொண்டிருந்தாள். மலர்க்கொடி. அருகிலிருந்த வேப்பமரத்தின் மீதிருந்து சில காக்கைகள் பறந்து வரவும் அவற்றிற்கு சில பருக்கைகளை வீசினாள். காகங்கள் போட்டிபோட்டு வந்து பருக்கைகளைப் பொறுக்கவும் குழந்தை குஷியானான். சிரிப்பும் விளையாட்டுமாய் கையிலிருந்த கிண்ணம் காலியானதும் மலர்க்கொடி உள்ளே செல்ல திரும்பினாள்.

பின்பக்கமிருந்து யாரோ கண்களைப் பொத்தவும் தடுமாறினாள். யார் இது? இவர் பகலில் வீட்டு வாயிலில் இப்படி எல்லாம் விளையாட மாட்டாரே! என்றபடி கண்களை மூடியிருந்த விரல்களை பற்றியவள் ''வானதி நீயா!'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

''நானில்லாமல் வேறு யார் உரிமையுடன் என் அக்காவிடம் விளையாட முடியும்!'' என்ற வானதி காக்கையை விரட்டிக் கொண்டு ஓடிய குழந்தையை துரத்திப் பிடித்து முத்தமிட்டாள்.

''என்ன வானதி சொல்லாம கொள்ளாம வந்து நிக்கற. அம்மாகூட நீ இங்கு வரப்போவதாய் போன் எதுவும் பண்ணலியே!'' என்றாள் மலர்க்கொடி.

''அம்மாகிட்ட கூட சொல்லல. நேராய் உன்னைப் பார்க்கத்தான் வந்தேன் ''என்ற வானதி தன் பேக்கை பிரித்து அதிலிருந்த சாக்லெட் பாக்சை எடுத்து அக்காவிடம் கொடுத்தாள்.

''என்னடி திடீர்னு சாக்லெட் கொடுக்கற, கல்யாணம் பேசி முடிச்சிருக்காங்களா? இல்லையே, அப்படியிருந்தால் அம்மாவோ அப்பாவோ எனக்கு சொல்லியிருப்பாங்களே! ஒரு வேளை நீ யாரையாவது லவ் பண்ணத் தொடங்கி விட்டாயா? அங்கே நீ லவ் பண்ணுகிற மாதிரி யார் இருக்கிறார்கள்?'' மலர்க்கொடி யூகத்தில் இறங்கவும் வானதி அவள் முதுகைத் தட்டினாள்.

''அக்கா உன் கற்பனைக்கு கொஞ்சம் பிரேக் போடு. நீ நினைக்கிற

''மன்னா என்ன இது உங்கள் உடல் வீக்கமா இருக்கு''?

''அரசியார் சற்று இடித்து ரைத்து விட்டார்''

-பாலாஜிகணேஷ்.





மாதிரி அசட்டுத்தனங்கள் எதுவும் நடக்கவில்லை. எனக்கு வேலை கிடைத்திருக்கிறது. நாளையிலிருந்து வேலைக்குப் போக போகிறேன்.'' மலர்கொடி வியப்புடன் தங்கையைப் பார்த்தாள். ''நீ சொன்னதை சாதித்து விட்டாய். அம்மாவும் அப்பாவும் நீ வேலை பார்க்க சம்மதித்து விட்டார்களா?''

''முதலில் மறுத்தார்கள் தான். ஒரேயடியாய் நான் பிடிவாதம் பிடிக்கவும் அவர்களுக்கு வேறு வழியில்லாமல் போனது.''

''உன் விருப்பம் நிறைவேறியதில் மகிழ்ச்சிதான் வானதி. ஆனால் ஜாக்கிரதையாக இரு'' என்றாள் மலர்க்கொடி. ''உனக்கு தோசை ஊத்தித் தரவா? அல்லது சாப்பாடு சாப்பிடுகிறாயா? ''என்றபடி மலர்க்கொடி சமையலறைக்கு செல்ல எனக்கு டீ மட்டும் கொடு அக்கா'' என அவளை வானதி பின் தொடர்ந்தாள்.

பள்ளிக் கூடத்தையும் வீட்டையும் தவிர வேறு ஏதும் அறியாத மலர்க்கொடி தன் இயல்பான வெகுளித்தனத்துடன் வானதியின் வேலைப்பற்றியும், அலுவலகத்தைப் பற்றியும் கேட்க வானதி பொறுமையுடன் அவளுக்கு விளக்கினாள். பேசியபடி இருவரும் டீயை குடித்து முடிக்காமல் ''உன் மாமா வந்து விட்டார் வா.. வானதி ''என மலர்க்கொடி முன்னே செல்ல வானதி தயக்கத்துடன் கதவருகிலேயே நின்று விட்டாள். அவளைக் கண்டதும் பாஸ்கரனின் முகம் மலர்ந்து போக ''அடடே வானதியா? எப்ப வந்த? மாமா அத்தை நலமா? ''என்றான் உற்சாகத்துடன்.

வானதி பதில் பேசாமல் தலையசைக்க,'' உங்களுக்கு தெரியுமா?'' வானதிக்கு நல்ல வேலை கிடைச்சிருக்கு. இனி அவளும் சம்பாதிக்கப் போகிறாள் ''என்றாள் மலர்கொடி பெருமையுடன்.

''அப்படியா ஆனால் உன் தங்கை பேசவே மாட்டாளே! வேலை பார்க்கப் போகிற இடத்தில் என்ன செய்வாள்?'' என்றான் பாஸ்கரன் சந்தேகமாக.

''அதற்கெல்லாம் பேசத் தேவையில்லையாம். மெஷினில் தான் வேலையாம்? ''மலர்கொடி விளக்கம் சொன்னாள்.

''அப்ப சரி என்றான்'' பாஸ்கரன் சிரிப்புடன்.

கோவையின் ரேஸ்கோர்ஸ் பகுதியில் அமைந்திருந்தது அந்த வீடு. கீழே பெரிய ஹால், சமையலறை,இரண்டு பெட்ரூம்கள், மாடியில் மூன்று அறைகள் என மார்பிள் பதித்த கச்சிதமான வீடு. வீட்டை சுற்றிலும் அழகான தோட்டம் பராமரிப்பின்றி கிடந்தது. வீடு முழுவதும் பொருட்கள் காணப்பட்டன. சமையலறையில்.

கரெக்டாக மூன்று வேளையும் உணவு தயாரிக்கப்பட்டு அதை சமையல் ஆள் மட்டுமே சாப்பிட்டுக் கொண்டிருந்தான். இருந்த இரண்டு கார்களும் நிற்காமல் ஓடிக் கொண்டிருந்தன. வீடு முழுவதும் வேலைக்காரர்களே நடமாடினர். வீட்டு உறுப்பினர்களை பார்க்கவே முடியவில்லை.

உத்சவ்வும், வரதராஜுவும் கோவை வந்து இரண்டு நாட்கள் ஆகியிருந்தன. தகவல் கூட தெரிவிக்காமல் வந்து நின்ற இருவரையும் பார்த்தபடி மோகனும், சுதாவும், திகைத்துப் போனார்கள். சுதா முதலில் சமாளித்துக் கொண்டாள்.

''மாமா ரொம்ப இளைத்துப் போய் விட்டீர்களே! உத்சவ் கூட

ரொம்ப வளர்ந்து விட்டதால் அடையாளமே தெரியவில்லை. பயணம் நல்லபடியாக இருந்ததா? இருவரும் சாப்பிட்டு விட்டு ஓய்வெடுங்கள். இன்று இளப்பில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி இருக்கிறது. நான் போனதும் வந்து விடுகிறேன்'' என வாயிற்பக்கம் விரைந்தாள். என்ன பேசுவதென்று புரியாமல் சிறிது நேரம் நின்று விட்டு மோகன் மனைவியை டிராப் பண்ணி விட்டு வருவதாக சொல்லிவிட்டு சென்றான்.

உத்சவ்வும், வரதராஜுவும் குளித்து விட்டு வந்து வேலையாள் டேபிள் மீது வைத்து விட்டு போன உணவை சாப்பிடத் தொடங்கினர். சில நிமிடங்களில் வெளியே செல்லத் தயாராகி மாடிப்படிகளில் ஹை ஹீல்ஸ் தடதடக்க இறங்கி வந்த பிரீத்தி மாடிப்படி எதிரே இருந்த டைனிங் டேபிளில் நல்ல உயரமும், செதுக்கின முகமும், மாநிறமாய் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த இளைஞனைப் பார்த்ததும் திகைத்துப் போனாள். வரதராஜுவிடம் ஏதோ சொல்லிவிட்டு அவன் புன்னகைக்க வரிசைப் பற்கள் மின்னி மறைந்து அவன் கவர்ச்சியை அதிகரிக்க ''வாவ்'' என்றாள் பிரீத்தி தன்னையறியாமல்.

உண்மையில் மோகனின் குடும்பம் பாரீசில் வசித்த போதும் பிரீத்தியும், உத்சவ்வும் அதிகம் சந்தித்துக் கொண்டதில்லை. இருவர் வீடுகளுக்கும் உள்ள தூரம் ஒரு காரணம் என்றால் சுதா கணவன் வீட்டவர்களிடம் பழக ஆர்வம் காட்டாதது மற்றொரு காரணம். எதாவது முக்கிய நிகழ்ச்சிகள் பொருட்டு சந்திக்க நேரும் போதும் மகளைபள்ளிக்கு அனுப்பிவிட்டு தலையை காட்டி விட்டு ஓடிவிடுவாள். மைதிலி எப்போதாவது தமையனைப் பார்க்க வரும்போது உத்சவ் ஸ்போர்ட்ஸ், பிராஜெக்ட் என பிஸியாக இருப்பான். எனவே தன் மகனை அவளால் அடையாளம் காணமுடியவில்லை. பிரீத்திக்கு நேர் எதிரே அமர்ந்திருந்த உத்சவ் நிமிர்ந்து அவளைப் பார்த்தான். பிரீத்தி என்றான். புரிந்து கொண்ட கேள்வியுடன் தன்னை பெயர் சொல்லி அவன் அழைத்ததால் ஏற்பட்ட ஆச்சரியத்துடன் ... நீ? என பிரீத்தி யோசிக்கவும் வரதராஜு புன்னகைத்தார்.

பிரீத்தி நன்றாக வளர்ந்து விட்டாள் என அவருக்குப் பதிலளித்த உத்சவ் நீ இப்போது என்ன படிக்கிறாய்? என்றான் அவளிடம்.

உத்சவ்வா இது? என மனதுக்குள் வியந்த பிரீத்தி ''பி.ஏ.படிக்கிறேன்'' என்றாள் அவனிடம்.

''அப்படியா? இன்று கிளாஸ் இல்லையா உனக்கு?'' என்றான் உத்சவ்.

''இருக்கிறதே!''

''பிறகு ஏன் இன்னும் கிளம்பாமல் இருக்கிறாய்?''

''இங்கே கல்லூரி ரொம்ப போரடிக்கிறது உத்சவ். எப்பவும் படிப்பு படிப்புதான். அதனால் நான் என் பிரென்சுடன் இன்று சினிமா போகப் போகிறேன். நீயும் வருகிறாயா? ''என்றாள் ஆர்வத்துடன்.

''இல்லை. நான் வரவில்லை'' என்றான் உத்சவ்.

''ஓ.கே. என் பிரென்ட்ஸ் காத்திருப்பார்கள். நான் வருகிறேன்'' என பிரீத்தி கிளம்பிப் போனாள்.

வரதராஜு சிறிது நேரம் ஓய்வெடுத்த பின் தாத்தாவும், பேரனும் தொழிற்சாலைக்கு போனார்கள். தொழிற்சாலையும், வீட்டைப்



போலவே பராமரிப்பின்றி இருந்தது. முதலாளி கவனிப்பதில்லை என்பதால் மேனேஜர் சிரத்தையின்றி இருந்தார். தொழிலாளர்களிடம் சோம்பல் தெரிந்தது. நவீன ரக மிஷின்கள் ஓடிக் கொண்டிருக்க சிலர் கும்பலாய் நின்று முதல்நாள் பார்த்த திரைப்படத்தை விமர்சித்துக் கொண்டிருந்தனர். பெண்கள் பஞ்சு பொதிக்கு நடுவே அமர்ந்து தங்கள் மாமியாரையும், கணவனையும் அர்ச்சனை செய்து கொண்டிருந்தனர்.

சுவரில் ஆங்காங்கே வெற்றிலை காவியும், காலில் பீடி, சிகரெட் துண்டுகளும் இடறின.

உத்சவ் தொழிற்சாலையை நிதானமாய் அளவெடுத்தான். அவனைப் பார்த்ததும் எல்லோர் கண்களிலும் ஒரு ஆர்வம் தெரிந்தது. சினிமா கதாநாயகன் கணக்கா இருக்காரே, யாராய் இருக்கும்? என தங்களுக்குள் குசுகுசுத்தார்கள்.

''இங்கே சூப்ரவைசர்கள் யாருமில்லையா?'' என்றான் உத்சவ் உரத்த குரலில்.

மசால்வடையை வாய்க்குள் திணித்துக் கொண்டிருந்த சூப்ரவைசர் வேகமாக வந்தார். ''நான்தான் இந்த செக்ஷனுக்கு சூப்ரவைசர். நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்றார் அவன் தோற்றத்தை கண்டு மரியாதையுடன். ''எல்லா செக்ஷன் சூப்ரவைசர்ஸ், மேனேஜர், லேபர் லீடர், ஏ.ஓ. எல்லாரும் முதலாளியின் அறைக்கு வாருங்கள். அவர் உங்களுக்காக காத்திருக்கிறார்'' என்றான் உத்தரவிடும் குரலில்.

முதலாளியின் அறைக்குள் அவர்கள் சென்றபோது நடுநாயகமாய் வரதராஜு அமர்ந்திருக்க, அவர் அருகில் உத்சவ் நின்று கொண்டிருந்தான். எல்லோரையும் உட்காரச் சொன்ன வரதராஜு பேசினார்.

''இத்தனை நாட்களாய் நான் ஏன் பேக்டரிக்கு வரவில்லை என்று நீங்கள் நினைத்திருப்பீர்கள். என் மனைவி இறந்த பிறகு என் மகளின் வற்புறுத்தலின் பேரில் பிரான்ஸ் போயிருந்தேன். அந்த சமயம் தற்காலிகமாக மில்லை நிர்வகிக்கும் பொறுப்பை என் மகன் மோகனிடம் கொடுத்திருந்தேன். இரண்டு நாள் முன்புதான் இந்தியா திரும்பினேன். தொழில் நஷ்டத்தில் நடப்பதாக அறிந்தேன்.

இவன் என் பேரன் உத்சவ். பிரான்சிலேயே பிறந்து வளர்ந்தவன். மேலாண்மையையும், நிர்வாகத்தையும் பாடமாக கற்றவன். நம் நாட்டில் தொழில் தொடங்க ஆர்வம் உள்ளவன். எனவே இவனிடம் நமது தொழிற்சாலையை ஒப்படைக்கிறேன். நீங்கள் அனைவரும் உத்சவ்வின் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு தர வேண்டும். உத்சவ்வின் படிப்பும், உங்கள் அனுபவமும் நமது தொழிற்சாலையை வெற்றிப்பாதையில் நடக்கச்செய்யும் என்று நம்புகிறேன். தொழில் சிறப்பாக நடந்தால் அதனால் பயனடையப்போவது நீங்களும்தான். அதனால் எல்லோரும் முழு மனதுடன் பாடுபடுவோம்.

கூடியிருந்தவர்களிடையே சிறு சலசலப்பு எழுந்து அடங்கியது. உத்சவ் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அறிமுகம் செய்து கொண்டான். பிறகு கட்டளையிடும் குரலில் சொன்னான். ''இனி நமது தொழிற்சாலையில் சட்ட திட்டங்கள் கட்டுப்பாடான முறையில் நடைமுறை படுத்தப் படும். ஷிப்ட் வேலைக்கு வருபவர்கள் சரியான நேரத்திற்குள் தங்கள்

கார்டை பஞ்ச் பண்ணி விட்டு உள்ளே வந்து விட வேண்டும். தாமதமாக வந்தால் அரைநாள் வேலை செய்யலாம். அல்லது திரும்பி போய் விடலாம். திமர் உடல் நலக்குறைவு ஏற்பட்டால் போனிலாவது தகவல் தெரிவிக்க வேண்டும். செக்ஷன் சூப்ரவைசர்கள் ட்யூட்டி நேரத்தில் அவர்கள் செக்ஷனில் இல்லை என்றால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்ததாக குடோன் இன்சார்ஜில் இருப்பவர்கள் ஸ்டாக் இருப்பை கம்ப்யூட்டரில் பதிவு செய்ய வேண்டும். இதுவரையிலான கொள்முதல், விற்பனை கணக்குகளை அக்கவுண்டன்ட்கள் தயாரித்து இரண்டு நாளில் எனக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். இப்போது போய் உங்கள் வேலையை கவனியுங்கள். பிறகு நானே வந்து உங்களை சந்திக்கிறேன் ''என்றான் உத்சவ்.

தட்டிக்கேட்க ஆளின்றி தங்கள் போக்கில் வேலை செய்து பழகியதால் வந்த சோம்பலும், புது முதலாளியின் பேச்சில் ஏற்பட்ட உந்துதலுமாக அவர்கள் கலைந்து சென்றனர்.

உத்சவ் வாட்ச்மேனை வர சொல்லி அவனது வேலைகளைப் பற்றி விளக்கினான். அவனுடன் டியூட்டி பார்க்க இன்னொரு வாட்ச்மேனையும், இரவு பணிக்கு கூர்க்காவையும் ஏற்பாடு செய்யும்படி சொன்னான்.

தொழிற்சாலையின் புறத்தோற்றத்தை சீர்செய்து, வெள்ளையடித்து சுற்றிலும் இருந்த காலியிடங்களில் புல் தரைகளும், பூச்செடிகளும் அமைக்கச் செய்தான்.

இத்தனை நாளின் மெத்தனத்தை சில நாட்களில் சரி செய்து விட முடியாது என்பதை உணர்ந்தவனாக தொழிலாளர்களிடம் ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்தினான். முதலாளிகள், தொழிலாளிகள் என இருபாலருமே இந்த தொழிலை சார்ந்துதான் இருக்கிறோம். தொழில் நன்றாக நடந்தால் எங்களுக்கு லாபம் வரும். உங்களுக்கு போதிய ஊதிய உயர்வு, போனஸ், சலுகைகள் எல்லாம் கிடைக்கும். உங்களுக்கெல்லாம் சொந்த வீடு, குழந்தைகளுக்கு பள்ளிக்கூட வசதி போன்றவை செய்து தர வேண்டும் என்று பல திட்டங்கள் போட்டிருக்கிறோம். இவை நிறைவேற வேண்டுமானால் உங்கள் வேலையை நீங்கள் சரியாக செய்ய வேண்டும் என அவர்களிடம் எடுத்துக் கூறினான். நாளடைவில் இதன் பலன் தொழிற்சாலையின் உற்பத்தியில் தெரிந்தது. வெட்டி பேச்சும், வீண் விவாதங்களையும் விடுத்து எல்லோரும் தங்கள் வேலையை பார்க்கத் தொடங்கினர். வரதராஜு நிம்மதியுடன் தொழிற்சாலை அலுவலகத்தில் தன் சேரில்

''லைட்வெயிட் புடவையை பார்த்ததும் என் கணவருக்கு ரொம்ப சந்தோசம்...''

''ஏன்''?

''அவருக்கு துவைக்கிறது ஈசியாச்சே''

-ராஜிராதா, பெங்களூர்.





அமர்ந்திருந்தார்.

''தாத்தா நமக்கு இன்னொரு என்ஜினீயர் வேண்டும். இன்டர்நெட்டில் தேடலாம்'' என்றான் உத்சவ்.

''செய்யலாம். ஆனால் வெளியூர் ஆட்கள் வேண்டாம். இந்த பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கலாம்'' என்றார் வரதராஜு. உத்சவ் சரி என்றான் உடனடியாக.

இரவு மணி பதினொன்றாகியிருந்தது. மோகன் தன் மனைவி, மகளுடன் ஹாலில் அமர்ந்து அப்பாவின் வரவை எதிர்பார்த்திருந்தான். சுதா முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடிக்க கணவனை முறைத்தாள். பிரீத்தி நகத்தை கடித்தபடி பெற்றோர் இருவரையும் மாறி மாறி பார்த்தாள்.

தொழிற்சாலையின் லாயரைப் பார்த்து விட்டு, அவருடன் ஹோட்டல் சிட்டி டவரில் டின்னர் சாப்பிட்டு விட்டு உத்சவ்வும், வரதராஜும் அன்று வீடு திரும்ப வெகு நேரமாகி விட்டிருந்தது. அந்த நேரத்திலும் தூங்காமல் ஹாலில் அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து வரதராஜு ஆச்சரியமடைந்தார்.

''மோகன் இன்னும் தூங்கலையா? நாங்க வரலையேன்னு பாத்தீங்களா? நானும் உத்சவ்வும் சிறு பிள்ளைகளா என்ன? உத்சவ் ஊருக்கு புதிதானாலும் எனக்கு பிறந்த ஊராயிற்றே! எந்த நேரமானாலும் பத்திரமாக திரும்பி வந்துவிடுவோம். அதனால் எங்களைப் பற்றி கவலைப்படாமல் தூங்குங்கள்'' என்றார்.

சுதா எரிச்சலை வெளிக்காட்டாமல் பல்லை கடிக்க, மோகன் துணிவு பெற்றவனாக சொன்னான் ''உங்களிடம் பேச வேண்டும் அப்பா. அதனால்தான்...''

''என்ன பேச வேண்டும்?''

''தொழிற்சாலையை உத்சவ்விடம் ஒப்படைத்து விட்டதாக கேள்விப்பட்டேன்.. அதைப்பற்றி..?''

வரதராஜு பேசுவதற்கு வசதியாக ஒரு சோபாவில் அமர்ந்து கொண்டார். நானே உனக்கு இதைப் பற்றி சொல்ல வேண்டும் என்றிருந்தேன். தொழிற்சாலையை மட்டுமல்ல இந்த வீட்டையும், உன் அம்மாவின் நகைகளையும் கூட அவனிடம்தான் ஒப்படைத்திருக்கிறேன். எனக்கு வயதாகி விட்டது. உன்னாலும் லாபமாக நடத்த முடியவில்லை. தொழிற்சாலை நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருந்தது. இப்படியே போனால் விரைவில் விற்று விட வேண்டிய சூழ்நிலை வரும். தொழிற்சாலையை விற்று விட்டு வீட்டை எப்படி பராமரிப்போம்? உணவுக்கும், செலவுக்கும் என்ன செய்வோம்? அதனால்தான் வேறு ஒருவர் நம் தொழிற்சாலையை வாங்குவதற்கு முன் நானே உத்சவ்விடம் ஒப்படைத்து விட்டேன். நஷ்டத்தை அவன் பார்த்துக் கொள்வான். என்னோடு கூட நீயும் இந்த வீட்டில் தங்கிக் கொள்ளவும், சாப்பிடவும் உத்சவ் அனுமதியளித்திருக்கிறான்.''

''அனுமதிப்பதா? நான் உங்கள் மகன் இல்லையா? இந்த வீட்டில் எனக்கு உரிமையில்லையா?''

''நீ என் மகன் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் நான் பாடுபட்டு வளர்த்த கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கடையை உன்னிடம் ஒப்

படைத்தேன். உன்னால் ஸ்டோரையும் நடத்த முடியவில்லை. இங்கு வந்த பிறகும் தொழிற்சாலையில் உன் கவனம் செல்லவில்லை. எனவே என்னிடம் எதை எதிர்பார்க்கவும் உனக்கு உரிமையில்லை. அது மட்டுமில்லாமல் உத்சவ் வேறு யாரோ அல்ல. உன் மகள் எனக்கு எப்படி பேத்தியோ அதுபோல உத்சவ்வும் எனக்கு பேரன். என்னிடம் சகல உரிமைகளும் அவனுக்கு உண்டு.''

மூவரும் பேசக் கூட தோணாமல் நின்றிருக்க உத்சவ் சொன்னான் ''மாமா இப்போதைக்கு நம் நிதிநிலைமை சரியில்லை. அது உங்களுக்கே தெரியும். அதனால் தொழிற்சாலையிலும், வீட்டிலும் சில கட்டப்பாடுகளை கடைபிடித்தால்தான் இதிலிருந்து மீண்டு வர முடியும். முதலாவதாக தேவையில்லாமல் செய்யப்படும் செலவுகளை குறைக்க வேண்டும். வேலையாட்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த வேண்டும். வீட்டில் அனைவருமே நான் உட்பட செய்கிற செலவிற்கு கணக்கு எழுதி வைக்க வேண்டும். கடைசியாக வீட்டிற்கு உறவில்லாமல் வரும் விருந்தாளிகளையும், வீண் ஆடம்பரங்களையும் தவிர்க்க வேண்டும்.''

''இதென்ன வீடா அல்லது சிறைச்சாலையா?'' என்றாள் சுதா வெறுப்புடன்.

''கண்டிப்பாக வீடுதான். கண்ணுக்கு தெரியாத சில வழிமுறைகளுக்கு கட்டுப்பட்டு வசிக்கும் இடம்தான் வீடு. இல்லையென்றால் ஒரு ஹோட்டலுக்கும் அதற்கும் வித்தியாசம் இல்லாமல் போய் விடும்.'' உத்சவ் கடினமான குரலில் சொல்ல அந்த குரல் அவர்கள் மேற்கொண்டு பேசுவதற்கு தயக்கத்தை ஏற்படுத்தியது.

வழக்கம் போல் மறுநாள் காலையில் தாமதமாக கண்விழித்த பிரீத்தி தனக்கு பெட்காபி வராததால் எரிச்சலுடன் அம்மாவைத் தேடி போனாள். சுதாவும் அப்போதுதான் எழுந்து பல் துலக்கி கொண்டிருந்தவள் மகளைப் பார்த்ததும் குட் மார்னிங் என்றாள் பேஸ்ட் நுரைக்க.''

''பேட் மார்னிங் .. எனக்கு காபியே வரவில்லை'' என்றாள் பிரீத்தி.

''ஆமாம், இங்கும் வரவில்லை. இந்த சமையல்காரர் என்ன செய்து கொண்டிருக்கிறார் காபி கூட அனுப்பாமல். வா போய்ப் பார்க்கலாம்'' என மகளுடன் சேர்ந்து சமையல் ஆளை திட்டுவதற்காக சுதா வேகமாக கீழே இறங்கி வந்தாள்.

வரதராஜு அன்றைய நியூஸ் பேப்பரில் மூழ்கியிருக்க, அப்போதுதான் தன் ஜாகிங்கை முடித்து விட்டு வந்த உத்சவ் அவர்களைப் பார்த்ததும் குட்மார்னிங் என்றான் புன்னகையுடன்.

பிரீத்தி பதிலுக்கு காலை வணக்கம் சொல்ல, சமையலறைக்குள் சென்ற சுதா திரும்பி வந்து ''இந்த சமையல் ஆள் எங்கே போயிருக்கிறான்? ''என்றாள் உத்சவ்விடம்.

''அவன் வீட்டில் இருக்கலாம்'' என்றான் உத்சவ்.

''அவன் வீட்டில் இருப்பதற்காகவா சம்பளம் கொடுக்கிறோம்? சொல்லாமல் லீவ் போட்டிருக்கிறான். வரட்டும் பேசிக் கொள்கிறேன்'' என கறுவினாள் சுதா.

''அவன் வரமாட்டான். அதனால் இப்போதே பேசி விடுங்கள்'' என்றான் உத்சவ்.



''ஏன் வரமாட்டான்?''

''அவனை நேற்றே வேலையை விட்டு அனுப்பி விட்டோம்''

''ஏன் அனுப்பினீர்கள்? அப்புறம் யார் சமைப்பது? ''என்றாள் சுதா திடுக்கிட்டு.

''நீங்கள்தான்''

''நானா? என்னால எப்படி முடியும்?''

''தனியாக முடியாதுதான். உதவிக்கு பிரீத்தியை அழைத்துக் கொள்ளுங்கள். எனக்கு இதெல்லாம் செய்து பழக்கமில்லை. அதுவுமில்லாமல் பிரீத்தி சின்னப் பெண்'' என்றாள் சுதா கோபத்துடன்.

''நம்முடைய பசிக்கு நாம் சமைத்து சாப்பிடுவது கேவலமானது அல்ல. பிரீத்தியும் சின்ன பெண் அல்ல. திருமண வயதை அடைந்த பெண். சில அடிப்படை வேலைகளை தெரிந்து வைத்திருப்பதுதான் நல்லது. உங்களுக்கே தெரியும். பாரிசில் எங்கள் வீட்டில் கூட அம்மாதான் அத்தனை வேலைகளையும் செய்கிறாள். விடுமுறை நாளில் மட்டும் நானோ அப்பாவோ உதவுவோம். அது போல சமயம் கிடைக்கும் போது உங்களுக்கும் நான் உதவ தயாராக இருக்கிறேன். அப்புறம் வீட்டுடன் தங்கியிருந்த இரண்டு ஆட்களையும் அனுப்பி விட்டேன். அதனால் இனி அடிக்கடி வீட்டில் களவு போகாது. மேல் வேலை செய்ய ஒரு பெண் காலையில் வந்து விட்டு மாலையில் போய் விடுவார்'' என்ற உத்சவ் திரும்பி பிரீத்தியிடம் சொன்னான்.

''பிரீத்தி உனக்கு டூவீலர் ஓட்டத் தெரியுமா? தெரியாதென்றால் உடனே கற்றுக்கொள். ஏனென்றால் நம் கார்களில் ஒன்றை மில்லுக்கும், இன்னொன்றை நான், தாத்தா தொழிற்சாலைக்கும் வியாபார சம்பந்தமாக போய் வரவும், உறவினர் வீட்டு விசேஷங்களுக்கு எப்போதாவது போய்வரவும் உபயோகிக்கலாம். அதனால் உனக்கு ஒரு ஸ்கூட்டி வாங்கியிருக்கிறேன். இனி கல்லூரிக்கு நீ அதில்தான் போக வேண்டும்.''



''தெம்புக்கு டானிக் எதுவும் வேண்டாம் டாக்டர்''
''வேற என்ன வேணும்''?
''நர்சோட செல் நம்பர்வேணும்''
-பாலாஜி கணேஷ்,
கோவிலாம்பூண்டி

''ஸ்கூட்டியிலா காற்றில் தலையெல்லாம் கலைந்து பறக்கும். வெய்யிலில் உடல் கறுத்து விடும். என்னால் முடியாது'' என்றாள் பிரீத்தி கண்டிப்பாக. ''அப்படியானால் பஸ்சில் போ.''

''ஒரே கூட்டம்... வியர்வை நாற்றம் ''என்றாள் பிரீத்தி அருவெறுப்புடன்.

''சரி. வீட்டுடன் இருந்து விடு'' என்றான் உத்சவ் ஒற்றை வார்த்தையில்,

''இத்தனை பேருக்கு ஒரு கார் எப்படி போதும்? இன்னொரு கார் வாங்கினால் என்ன? ''என்றான்

பிரீத்தி படபடப்பாக.

''இந்த கார்களை பராமரிப்பதே இப்போது சிரமமான விஷயம். நேற்றே நான் இதைப்பற்றி சொல்லிவிட்டேன். எக்ஸ்ட்ரா கார் இல்லை என்று வருத்தப்படாதே. காலே இல்லாமல் நடப்பவர்களை பார்த்து சந்தோஷப்படு'' என்றான் முடிவாக.

தங்களது கோபமும், வருத்தமும் அவனிடம் செல்லுபடியாகாது என்பதை உணர்ந்த சுதா தணிவான குரலில் சொன்னாள். ''உத்சவ் நீ எங்களை விட வயதில் சிறியவன். உறவு முறையின் மரியாதை வேறு இருக்கிறது. நாடு விட்டு நாடு வந்து எங்கள் இடத்தில் எங்களை அடக்கியாள நினைப்பது கொஞ்சமும் சரியல்ல''.

''இது முதலில் உங்கள் இடம் அல்ல. கடனில் மூழ்கி போயிருக்க வேண்டிய தாத்தாவின் சொத்துக்களை பாரிசிலிருக்கும் என் தொழிலை ஈடாக கொடுத்து நான் மீட்டிருக்கிறேன். எனவே என் வீட்டை எப்படி நடத்துவதென தீர்மானிப்பதற்கு எனக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. உங்களால் முடியவில்லை எனில் தாராளமாக இங்கிருந்து வெளியேறிச் செல்லலாம். என் கட்டுப்பாட்டில்தான் இருந்தாக வேண்டும் என்று நான் வற்புறுத்தவோ, கட்டளையிடவோ இல்லை'' என்றான் முகத்தில் அடித்தாற்போல்.

தாயும், மகளும் விக்கித்து நிற்க வரதராஜு புன்னகையுடன் தொழிற்சாலைக்கு கிளம்ப ஆயுத்தமானார்.

இருவரும் கிளம்பிச் சென்றதும் சுதா கணவனிடம் பொரிய ஆரம்பித்தாள்.

''எல்லாம் உங்களால் வந்தது. கணவன் சாமர்த்தியசாலியாய் இல்லாவிட்டால் பெண்கள் இப்படித்தான் கண்டவர்களிடம் பேச்சுக் கேட்க நேரும். இந்த கிழவர் பயங்கரமான ஆள்தான். சத்தமில்லாமல் இங்கிருந்து கிளம்பி போய் அத்தனை சொத்துக்களையும் பேரனுக்கு எழுதிக் கொடுத்து விட்டு வந்திருக்கிறார். நாம் பார்க்க வளர்ந்த பையன். அவனுக்கு பயந்து பதில் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறோம். பிடிக்காவிட்டால் வெளியே போ என்கிறான். எத்தனை திமிர் இருக்க வேண்டும். இதுபோல நடக்கும் என்று தெரிந்திருந்தால் பாரிசை விட்டு வந்திருக்கவே வேண்டியதில்லை. இங்கே அடிமை போல வேலை செய்வதற்கு அங்கே டீஸண்ட் சர்வன்ட்மெய்ட் வேலை பார்த்திருக்கலாம்.'' சுதா கோபத்துடன் கத்தித் தீர்த்தாள்.

பாரிஸில் அவர்கள் இருந்த போது சுதாவின் அப்பா இருதய ஆபரேஷன் செய்து கொள்வதற்காக தன் குடும்பத்துடன் கிளம்பி வந்து இவர்கள் வீட்டில்தான் தங்கியிருந்தார். அவரது ஆபரேஷன் செலவு, அத்தனை பேருக்கும் பிளைட் டிக்கெட், மாதக்கணக்கில் தங்கியிருந்து ஊர் சுற்றி பார்த்தது, அவர்கள் இழுத்து விட்ட ஆடம்பர செலவுகள். சுதாவின் தங்கை திருமணத்திற்காக தாங்கள் செலவு செய்த தொகை எல்லாம் மோகன் மனக்கண் முன் வந்து போனது. மனைவியிடம் மெதுவாக கேட்டான், ''உன் பெற்றோர் மதுரையில் தானே இருக்கிறார்கள்? நாம் அங்கேயே போய் விட்டால் என்ன சுதா?''

''வெட்கமாக இல்லை உங்களுக்கு?'' சுதா சீறினாள். ''பெண் எடுத்த



இடத்தில் போய் உட்கார்ந்திருந்தால் மற்றவர்கள் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்? என்னால்தான் தலைநிமிர்ந்து நடக்க முடியுமா?'' பெண்ணை கொடுத்த இடத்தில் வந்து தங்கியிருக்கும் போது மற்றவர்கள் எதுவும் சொல்லமாட்டார்களா? என்று தோன்றியது மோகனுக்கு. அதைக்கேட்டால் சுதா சும்மா விடமாட்டாள் என்பதால் ''இதற்கு என்ன தான் செய்வது? நீயே சொல்!'' என்றான் மோகன்.

''நாம் இங்கே இருக்கவே கூடாது. இங்கிருந்து போய் விடலாம்'' என்றாள் பிரீத்தி.

''போய்.. போய் என்ன செய்ய முடியும் நம்மால்? கையில் காசில்லை, நிற்க நிழலில்லை. நம் மூன்று பேரில் ஒருத்தருக்கும் படிப்பு தகுதியில்லை. ஏதோ இங்கிருப்பதால் கௌரவமாக உடுத்தவும், சாப்பிடவும் செய்கிறோம். இந்த வீட்டில் சமைத்து சாப்பிட முடியாதென சிணுங்குகிறீர்களே! வெளியே போனால் நாம் மூவரும் வீடு வீடாக போய் அதைத் தான் செய்ய வேண்டியிருக்கும்?'' மோகன் சொல்ல சொல்ல எதிர்காலம் கண்முன்னே விரித்த பயங்கர கற்பனையில் அம்மாவும், மகளும் முகம் இருண்டு போனார்கள்.

4

''சார் மெஷினில் பஞ்சு சிக்குகிறது... ஸ்ட்ரக் ஆகிறது'' என்றான் மிஷின் ஆபரேட்டர்.

இந்த மாதத்தில் இது மூன்றாம் முறை. ஒருவருக்கு இருவராய் என்ஜினீயர்களை நியமித்தும் வேலையில் தடை ஏற்படுகிறது. ''உன் செக்ஷன் என்ஜினீயரை வரச் சொல்'' என்றான் உத்சவ் கோபமாக.

சரி சார் என அவன் போன மறு நிமிடமே டேபிள் மீதிருந்த போன் அலறியது. ''இன்று என் பிரண்டிற்கு பிறந்த நாள். ஏதாவது கிப்ட் வாங்க வேண்டும். பர்த்டே பார்ட்டிக்கு போக வேண்டும். எனக்கு பணமும், காரும் வேண்டும்'' என்றாள் பிரீத்தி எதிர்முனையில்.

''இரண்டு நாள் முன்புதான் உனக்கு பாக்கெட் மணி கொடுத்தேன்'' உத்சவ் நினைவு படுத்தினான்.

''அது செலவாகி விட்டது''.

''அப்படியானால் பிறந்த நாள் கிப்டை அடுத்த மாதம் பாக்கெட் மணியில் வாங்கிக் கொடு.''

''கிண்டல் செய்கிறீர்களா? இன்று பிறந்த நாளுக்கு அடுத்த மாதம் கிப்ட் கொடுப்பார்களா?''

''அப்படி நினைத்திருந்தால் உன் பணத்தை நீ சேமித்திருக்க வேண்டும். கடைசி முறையாக சொல்கிறேன் ப்ரீத்தி, வீண் ஆடம்பரங்களுக்கு இந்த வீட்டில் இடமில்லை. உன் படிப்பு மற்றும் நியாயமான செலவுகளுக்கு நீ கேட்காமலேயே நான் கொடுத்து வருகிறேன். அதையும் மீறி உனக்கு செலவு ஏற்பட்டால் நீயேதான் பார்த்துக்கொள்ள வேண்டும்.'' உத்சவ் கண்டிப்புடன் கூறிவிட்டு தொடர்பை துண்டித்தான்.

வருந்த பேசிவிட்டோம் என மனம் உறுத்தினாலும் நல்லதற்காகத் தான் செய்தோம் என்ற சமாதானம் ஏற்பட்டது.

''மே ஐ கமின் சார்'' என்ற குரலுக்கு ''எஸ்'' சொல்லி விட்டு டேபிள்

மீதிருந்த பைலை பிரித்தான் உத்சவ்.

ரோஜா நிற சுடிதாரில் ரோஜாப்பூவாக நின்றிருந்த ஒரு பெண் 'குட் மார்னிங் சார்' என்றாள் சிரித்தபடி. சிவந்த இதழ்களையும் பால் நிறத்தில் பளீரிட்ட பற்களையும் பார்த்தபடி ''ஹலோ'' என்றான் உத்சவ்.

'' நீங்கள் வரச் சொன்னதாக மெஷின் ஆபரேட்டர் சொன்னார். ''

'' எந்த மெஷின்? ''

'' இரண்டாவது செக்ஷனில் ''

'' என்ன செக்ஷன் ''

'' சார் '' என்றாள் வியப்புடன். உத்சவ் சுதாரித்தான். அவளை அமரும்படி கை காட்டினான். அவள் தன் கையிலிருந்த குறிப்பேடை டேபிள் மீது வைத்தாள்.

'' சார் நான் சென்ற முறை எழுதி அனுப்பியிருந்த குறிப்பை நீங்கள் பார்க்கவில்லை என்று நினைக்கிறேன். மெஷின் ஆபரேட்டர் வேலைக்கு புதியவர். அவருக்கு இன்னும் டிரையினிங் தேவைப்படுது. இயந்திரங்களை முரட்டுத்தனமாக கையாளக்கூடாது. ஓவர் லோடு பண்ணக்கூடாது என்று அவருக்கு நானே விளக்கி சொல்லியிருக்கேன். உங்களுக்கும் குறிப்பு அனுப்பியிருக்கிறேன்.'' பைலை பிரித்துக் காட்டி விளக்கினாள்.

உத்சவ்விற்கு அப்போது தான் புரிந்தது. புதிதாக சேர்ந்திருக்கும் இன்சினியர் போலும். மேனேஜரும், தாத்தாவுமே அப்பாயின்ட் பண்ணியதால் தான் இதுவரை இவளை சந்திக்க நேரவில்லை. ''நீங்கள் மெக்கானிக்கல் இஞ்சினியர் இல்லையா? உங்களை நான் இங்கே எதிர்பார்க்கவில்லை.'' என்றான் உத்சவ்.

அவள் புரியாமல் பார்க்க உத்சவ் விளக்கினான் ''இங்கேயுள்ள பெண்கள் கல்லூரிகளில் படிக்கும் போது இயந்திரங்களைப் பற்றி படித்தாலும் வேலை பார்க்க வரும் போது அதே டிபார்ட்மென்டில் லெக்சராக சேருவார்கள். அல்லது மேற்கொண்டு எம்.பி.ஏ.வோ கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட படிப்போ படித்து உட்கார்ந்த இடத்தில் வேலை பார்க்கத் தான் விரும்புவார்கள். ''

அவள் சிரித்தபடி '' நீங்கள் சொல்வது ஓரளவு சரிதான். ஆனால் எனக்கு பேப்பரில் படித்ததை நிஜத்தில் செய்து பார்க்க வேண்டும். என்ற ஆர்வம் இருந்தது. ''

'' உங்கள் ஆர்வம் இந்த தொழிற்சாலையின் வளர்ச்சிக்கும் உதவட்டும் '' என்றான் உத்சவ்.

'' நன்றி '' என்றாள் அவள் தலையை சரித்து.

மீண்டும் உத்சவ்வின் பார்வை அவள் மீது பதிந்து மீண்டது. அவளது செயற்கை பூச்சு சிறிதும் அற்ற செழுமையான முகத்தையும், கரிய பெரிய கண்களையும், அதில் தென்படும் துருதுருப்பையும் பார்க்கையில் தனக்குள் ஒரு உற்சாகம் பரவுவதை உணர்ந்தவனாய் அவளிடம் சொன்னான்.
'' பைலை வைத்து விட்டு போங்கள். நான் என்ன செய்யலாம் என்று பார்த்து விட்டு பிறகு சொல்கிறேன். ''

'' ஓ.கே. சார் '' என அவள் எழுந்து செல்லவும் அப்போது தான் நினைவு வந்தவனாக கேட்டான்.

'' உங்கள் பெயர் என்ன? ''



கதவருகே சென்றிருந்த அவள் திரும்பிப் பார்த்தாள். தன் வழக்கமான பளிச்சிடும் புன்னகையுடன் சொன்னாள்.

'' வானதி ''.

களத்தில் காயப்போட்டிருந்த நெல்லை பரத்தியபடி அமர்ந்திருந்த வேணியை பின்பக்கமிருந்து கட்டிக் கொண்டாள் வானதி.

'' என்ன இன்னிக்கு ஒரே சந்தோஷமா இருக்கு? '' என்றாள் வேணி ஒரு நிமிடம் யோசித்தாள். '' புதுசா அப்படி என்ன விஷயம் நடந்திருக்கு? '' என தனக்குள் கேட்டுக் கொண்டவள் '' தெரியலை. நீயே சொல்லிடு. '' என்றாள் மகளிடம்.

'' இரு வருகிறேன் '' என்ற வானதி மாட்டுக்கு தீவனம் கலக்கிக் கொண்டிருந்த தந்தையை கைப்பிடியாக அழைத்துவந்தாள்.

'' அடடே என்னம்மா கை கழுவக்கூட விடாமல்?'' என்றபடி வந்தவரை நிற்க வைத்து இருவர் காலிலும் விழுந்து நமஸ்கரித்து விட்டு தன் கையிலிருந்த கவரை கொடுத்தாள்.

'' கவரில் என்ன இருக்கிறது வானதி? '' என்றார் சங்கரன்.

'' இன்று முதல் தேதி நினைவில்லையா? என் முதல் மாத சம்பளம்.
'' கவரில் இருந்த ரூபாய் நோட்டுகளை பார்த்த வேணி பெருமிதத்துடன் கணவரிடம் கொடுக்க அவர் திருப்பி மகளிடமே கொடுத்தார்.

'' இந்த பணத்தை நீயே பேங்கில் போட்டு வை வானதி. தேவைப்படும் போது எடுத்துக் கொள்ளலாம். ''

'' இது உங்கள் செலவிற்கு அப்பா ''

'' தோட்டமே கதியன்று இருக்கிறோம். எங்களுக்கு என்ன செலவிருக்கிறது? அப்படியே இருந்தாலும் இத்தனை நாள் செலவழிக்கவில்லையா என்ன? ''

'' அப்படியானால் இந்த பணத்தை வாங்கிக் கொள்ள மாட்டீர்கள் அப்படித்தானே? '' என்றாள் வானதி முகம் வாட.

மகளின் வாடிய முகம் பெற்றவர்களை சங்கடப்படுத்த வேணி சமாதானமாய் சொன்னாள். ''எங்களால் முடிந்தவரை உழைக்கிறோம். முடியாத போது எங்களுக்கு வேறு யார் இருக்கிறார்கள்? உங்கிட்டதானே வரணும்? நீ தானே எங்களை கூட இருந்து பாத்துக்கப் போறதா சொல்லியிருக்கியே. அப்ப இந்த பணம் உபயோகமாகும். அதுவரை சேமித்து வை.''

வானதி அரை மனசாய் பணத்தை வாங்கிக்கொண்டாள். சங்கரன் அவள் வேலையைப் பற்றி விசாரித்தார். '' மொத்தம் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள்? முதலாளி யார்? '' என்றார்.


'' ஓரளவு பெரிய தொழிற்சாலை தான் அப்பா. வெளிநாட்டிலிருந்து இங்கே பெரியவர் ஒருவர் சிறிய மில்லை வாங்கி விரிவு படுத்தி நடத்த ஆரம்பித்தார். ஆனால் இப்போது அவரது பேரன் தான் பொறுப்பேற்று நடத்துகிறார். இருவருமே நல்லவர்கள் தான். தொழிலாளர்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவதால் நிர்வாகம் சீராக நடக்கிறது. ''

'' உனக்கு வேலை ஒன்றும் கடினமாக இல்லையே? ''என்றாள் வேணி கவலையுடன்.

'' அம்மா என்னம்மா நீ கஷ்டமாக இருந்தால் நான் போவேனா? நீ ஏன் வீணாக கவலைப்படுகிறாய்? '' என்றாள் வானதி.

மேற்கொண்டு அவளது வேலை பற்றி வானதி தெரிவித்த தகவல்
களால் சங்கரன் திருப்தியடைந்தார்.
வானதி வேலை பார்க்கும் ராஜு ஸ்பின்னிங் மில்ஸ் பொள்ளாச்சி
யிலிருந்து கோவை செல்லும் சாலையில் கோவை நகர நுழைவாயிலி
லேயே அமைந்திருந்தது. வானதி சில சமயம் ஸ்கூட்டரிலும் பஸ்ஸிலு
மாய் போய் வந்து கொண்டிருந்தாள். வேலை முடிந்ததும் வீடு வந்து விடு
வாள் என்றாலும் என்றாவது வேலை மிகுதியால் தாமதமாகும் சமயங்க
ளில் சங்கரனும், வேணியும் சாலையில் விழி வைத்து வாயிலிலேயே காத்
துக் கிடப்பார்கள்.
'' நான் சின்னக்குழந்தையா? சிறுவயதிலிருந்து நான் பழகிய ஊர்.
எனக்கு போய்வரத் தெரியாதா?'' என்பாள் வானதி. '' எங்களைப் பொறுத்
தவரை நீ இன்னும் சின்ன குழந்தை தான். எத்தனை வயதானாலும் எங்
கள் கவனம் பிள்ளைகள் மீது இருக்கத்தான் செய்யும்.'' என்பார்கள் இரு
வரும்.
எதிரே விரிந்திருந்த பேப்பரைக் காட்டி வேகமாக விலகிக் கொண்டு
போகும் வானதியை புன்சிரிப்புடன் பார்த்தார் வரதராஜ். தொழிற்சா
லைக்கு வாங்கவிருக்கும் புதிய இயந்திரங்கள் பற்றியும் அதன் செயற்பா
டுகளையும் அதனால் ஏற்படப்போகும் பலன்களையும் தெளிவாக சுட்
டிக்காட்டினாள். எப்போதும் சுறுசுறுப்புடன் மலர்ந்த முகமுமாய் இருக்
கும் இந்த பெண்ணை நேர்முகத்தேர்வில் அவர் தான் தேர்ந்தெடுத்தார்.
முதல் பார்வையிலேயே அவருக்கு பிடித்துப் போனது. அவரது தேர்வை
பொய்யாக்காமல் அவளும் நல்ல முறையில் வேலை செய்கிறாள்.
'' சார் இந்த கம்பெனிக்கு ஆர்டரை மெயில் பண்ணி விடலாமா? ''
என்றாள் வானதி.
'' செய்யலாம். ஆனால் என்ன தான் எனக்கு திருப்தி என்றாலும்
தொழிலில் இறுதி முடிவெடுப்பது என் பேரன் தான். அவன் தான் ஓ.கே.
சொல்ல வேண்டும். ''
'' உத்சவ் சார் தான் இந்த மெஷின்களை வாங்கப் போவது பற்றி முத
லில் விசாரித்தார். பிறகு தான் நான் அதுபற்றிய விபரங்களையும் இது
போன்ற தொழிற்சாலைகளில் அவற்றின் பயன்பாடு பற்றிய தகவல்களை
யும் சேகரித்தேன். ''
'' வெரிகுட். '' என்றார் வரதராஜு. '' வானதி நீ இதற்கு முன்பு
பிரான்ஸ் வந்திருக்கியா? '' என்றார் யோசனையுடன்.
இரு நிமிடம் திகைத்த வானதி பின் சிரித்தாள், '' நான் தமிழ்நாட்
டையே தாண்டியதில்லை. ''
'' இங்கு வருவதற்கு முன்பு எங்கே வேலை பார்த்தாய்? ''
'' இந்த வருடம் தான் படிப்பை முடித்தேன். என் முதல் வேலை,
முதல் அலுவலகம் இது தான். எதற்கு கேட்கிறீர்கள்? ''
'' உன்னை மிகவும் தெரிந்த மாதிரி. எங்கோ பார்த்த மாதிரி இருக்கி
றது. எங்கே என்று தான் நினைவில்லை. '' என்றார் யோசனையிலிருந்து
விடுபடாதவராய்.
வானதிக்கு மீண்டும் சிரிப்பு வந்தது. அவள் பார்த்த சினிமாக்களில்
கதாநாயகன், கதாநாயகியை முதலில் சந்திக்கும் போது இதே போலத்தான்





தொடங்குவான். அவளிடம் ஹீரோ பேச வேண்டிய வசனத்தை தாத்தா பேசுகிறார். புன்னகை மாறாத முகத்துடன் பேப்பர்களை அடுக்கிக் கொண்டு வானதி எழுந்து நின்றாள். '' உத்சவ் சாரிடம் சொல்லி விடுங்கள் '' எழும் போதே உள்ளே வந்த உத்சவ் 'ஹலோ' என்றான் இருவருக்கும் பொதுவாக.

'' சார் மெஷினரிஸ் பற்றிய கொட்டேஷன் '' என வானதி தன் கையிலிருந்த பேப்பர்களை கொடுக்கவும், '' நீ கம்ப்யூட்டரில் பீட் பண்ணியிருந்த விவரங்களைப் பார்த்து விட்டேன் வானதி. திரும்ப பிரிண்ட் அவுட் எடுத்து தர வேண்டிய அவசியமில்லை. நேரத்தையும், உழைப்பையும் தேவையின்றி விரயமாக்க வேண்டியதில்லை. '' என்றான் கண்டிப்பான குரலில்.

'' சரி சார் நினைவில் வைத்துக் கொள்கிறேன். '' என குரலோ முகமோ மாறாது விடைபெற்று சென்றவளை தாத்தாவும், பேரனும் புன்சிரிப்புடன் பார்த்தனர்.

'' இந்த பெண்ணை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது'' என்றார் வரதராஜு பேரனிடம்.

'' எனக்கும் தான். '' என்றான் உத்சவ்.

வரதராஜு வியப்பாக பார்க்கவும் '' இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை தாத்தா. உங்களுக்கு பிடித்திருக்கிறது என்று எப்படி சொன்னீர்களோ, அதே அர்த்தத்தில் தான் நானும் சொன்னேன். '' என்றான் உத்சவ்.

'' அவ்வளவு தானா? நான் என்னவோ நினைத்தேன். ''

'' உங்கள் வயசுக்கு தகுந்த மாதிரி நினையுங்கள் ''

'' என் வயசுக்குஎன் பேரனின் எதிர்காலத்தை தவிர வேறு என்ன நினைவிருக்கும்? உங்கம்மா பிரான்ஸிலிருந்து கிளம்பும் போது என்ன சொன்னாள் தெரியுமா? 'அப்பா உத்சவ்வை நான் உங்களுடன் அங்கே அனுப்பி வைக்க காரணமே அவன் மனதளவில் திருமணத்திற்கு தயாராக வேண்டும் என்பதற்காகத் தான். அவன் அங்கிருந்து திரும்பி வருவது அவன் திருமணத்திற்காகத்தான் என்றிருக்க வேண்டும் ' என்றாள். ''

'' நீங்கள் என்னை இங்கே அழைத்து வந்ததற்கு பின்னணியில் இப்படியொரு சதி நடந்திருக்கிறதா? அம்மா மறுப்பு சொல்லாமல் இருக்கும் போதே எனக்கு கொஞ்சம் சந்தேகம் தான். '' என்றான் உத்சவ் சிரித்தபடி.

"இன்றைக்கு என் மனைவி போதும், போதும்ன்னு அளவுக்கு கொடுத்தாள்..."

"முத்தமா"?

"மொத்தமா வீட்டு வேலைகளை"

-சிவ. இராமலிங்கம்,
தூத்துக்குடி மாவட்டம்.





'' பெற்றவர்கள் செய்யும் சதி கூட பிள்ளைகளின் நன்மைக்காகத்தான் இருக்கும் உத்சவ் '' என்றார் வரதராஜு விடாமல்.

'' எனக்கு தெரியும் தாத்தா. நானே ஒருநாள் சொல்வேன் இந்த பெண்ணை திருமணம் செய்து வையுங்கள் என்று. அதுவரை பொறுத்திருங்கள். '' என்றான் உத்சவ்.

'' பொறுத்திருக்கத்தான் வேண்டும். வேறு வழியில்லை. '' என்றபடி சுழற்நாற்காலியில் பின்னால் சாய்ந்து அமர்ந்தார் வரதராஜு.

சுதா முகத்தில் பெருகிய வியர்வையை துடைத்தபடி கட்டிலின் மீது சாய்ந்தாள். இயல்பிலேயே சோம்பேறியான அவளை பழக்கமற்ற வேலைகள் பயமுறுத்தின. கூட உதவிக்கு ஒரு பெண்ணும், மோகனும் இருந்த போதும் மூன்றுவேளையும் டிபனும், சாதமும் சமைக்க முடியாமல் திணறினாள். படிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு நாள் முழுவதும் புத்தகமும், அது இல்லாதபோதும் டி.வி.யும், வாக்மேனுமாக அமர்ந்திருக்கும் பெண்ணிடம் எரிந்து விழுந்தாள்.

'' மம்மி என் கிரீன் கலர் டாப்ஸ் எங்கே? நெய்ல் பாலிஷை பார்த்தாயா? ''என வழக்கம் போல அம்மாவை அவள் அழைக்கவும் '' இத்தனை பெரிய பெண்ணுக்கு தன் வேலையை செய்து கொள்ளத் தெரியாதா? '' என்றாள் கோபமாக.

'' நான் கல்லூரிக்குப் போகிறேன். நீ வீட்டில் தானே இருக்கிறாய். நீ செய்தால் என்ன? '' என்றாள் ப்ரீத்தி பதிலுக்கு.

'' நீ கல்லூரிப் படிப்பை முடிக்கப்போவதும் இல்லை. அதற்கு வேலை கிடைக்கப்போவதுமில்லை. பேசாமல் எனக்கு உதவியாய் வீட்டில் இரு. '' என்றாள் சுதா சத்தமாக.

ப்ரீத்தி டேபிள் மீதிருந்த அலாரம் டைம்பீஸை கோபத்துடன் சுவற்றில் விட்டெறிந்தாள். சத்தம் கேட்டு அங்கே வந்த மோகன் '' அடடே எப்படி உடைந்தது? '' என்றான் மனைவியிடம்.

'' எல்லாம் உங்களால் தான். '' ப்ரீத்தியும், சுதாவும் ஒரே குரலில் அவனிடம் கத்தத் தொடங்கினர். அவர்களை சமாதானப்படுத்த முயற்சித்து முடியாத மோகன் தன் வழக்கப்படி கப்போர்டை திறந்து விஸ்கி பாட்டிலுடன் அறையிலிருந்த நாற்காலியில் சென்று அமர்ந்தான். உத்சவ் வந்ததிலிருந்து அந்த வீட்டில் அலறும் ஸ்டீரியோக்களின் ஓசையும், நண்பர் கூட்டத்தின் கூச்சலும் நின்று போய் இருந்தாலும் சுதாவுக்கும், ப்ரீத்திக்குமான போர் தினமும் நடந்து கொண்டு தான் இருந்தது.

ஒரே பெண்ணாக பெற்றோர்களின் செல்ல மகளாக தான் நினைத்தவை அனைத்தையும் அவர்கள் மூலமாக நிறைவேற்றிக் கொண்டு பழகிவிட்டிருந்ததால் வீட்டில் உண்டான புதிய மாற்றத்திற்கு அவளால் மாற முடியவில்லை.

அம்மாவிடம் கேட்கிற போதெல்லாம் பணம் கிடைத்ததால் அந்த பணம் எங்கிருந்து வந்தது என அவள் யோசிக்க தேவையே ஏற்படவில்லை. இப்போது மாதம் பிறந்ததும் உத்சவ்விடம் பணத்திற்கு கையேந்தி நிற்பதும், அந்த பணத்தில் செய்யும் செலவுகளுக்கு கணக்கு தருவதும் அவளுக்கு கொடுமையான தண்டனையாக தோன்றியது. 'எல்லாம் இந்த தாத்தாவால் வந்தது. அவர் தானே உத்சவ்வை அழைத்து வந்

தார். ' என மனதிற்குள் அம்மா, அப்பாவுடன், தாத்தாவையும் சேர்த்து திட்டத் தொடங்கினாள்.

மோகன் நாற்காலி ப்ரீத்தி கோபத்துடன் தன் அறைக்கு சென்று விட யிலேயே தன்னிலை மறந்து சரிந்து கிடக்க, சுதா ஏ.சி.யை ஆன் பண்ணி விட்டு தன் மதிய தூக்கத்திற்கு தயாரானாள்.

## 5

இரவு வெகு நேரமாகிவிட்டிருந்தது. தெருவில் சந்தடிகள் அடங்கிப் போயிருந்தன. அவ்வப்போது ஊளையிட்டுக் கொண்டிருந்த தெரு நாய்கள் கூட விளக்கு கம்பத்தின் கீழே சுருண்டு படுத்தன. ஊர் மொத்தமும் துயிலில் ஆழத் தொடங்கிய அந்த சமயம் இருவர் மட்டும் தூக்கம் வராமல் புரண்டனர்.

இலவம் புரவிபாளையத்தில் மச்சுவீட்டில் தேக்குமரக் கட்டிலில் பஞ்சு மெத்தையில் புரண்ட பாஸ்கரனும், கோயம்புத்தூரின் சொகுசு பங்களாவில் ஏ.சி. அறையில் போர்ம் மெத்தையில் படுத்திருந்த வரதராஜுலும் கண்களை மூட முடியாமல் எழுந்து அமர்ந்தார்கள். கணவனின் அருகில் படுத்திருந்த மலர்க்கொடி அவனிடம் அசைவை உணர்ந்து கண்களை திறக்காமலே '' என்னங்க? '' என்றாள்.

''எதுவுமில்லை மலர் நீ தூங்கு '' கருக்கல் மறைந்திருக்கிறதா என எழுந்து வெளியே வந்தான் பாஸ்கரன். களத்தில் கிடந்த நெற்கதிர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு முற்றத்தில் கால்நீட்டி அமர்ந்தான். பாக்கெட்டைத் தேடி சிகரெட்டை எடுத்து பற்ற வைக்கையில் மலர்க்கொடி வந்து அவன் எதிரில் அமர்ந்தாள்.

'' தூங்காம இந்த நேரத்தில் சிகரெட் குடிக்கிறீங்களே! ஏதாவது பிரச்சனையா? சொல்லுங்க. '' என்றாள் கணவரிடம்.

மனைவியின் குரலில் தென்பட்ட கவலைக்கு பாஸ்கரன் சிரித்தான். ''பிரச்சனை இருந்தால் தான் சிகரெட் குடிக்கணுமா? ''

'' நீங்க அதிகமா குடிக்க மாட்டீங்களே! ''

'' மாட்டேன் தான். இன்னிக்கு ஏனோ தூக்கம் வரல. நெல் கதிர் அறுத்து களத்துல கிடக்கு. சாயங்காலம் வானம் மப்பாக இருந்தது. மழை வந்தா வீணாயிடுமேன்னு தூக்கமே பிடிக்கலை. ''

'' இதுக்கா கவலைப்படறீங்க? விவசாயம் நமக்கு புதுசா என்ன? பயிர் வளர வேண்டிய தருணத்தில் மழை இல்லாம வரண்டு போறதும் விளைச்சலை அனுபவிக்கப்போற சமயத்தில் மழை பெய்து கெடுக்கிறதும் நடப்பவை தானே. ''

'' நடப்பது தான். என்றாலும் கவலைப்படாமல் இருக்க முடியுமா? ஒரு தூறல் அடித்தாலும் போதும். இத்தனை மாசம், இத்தனை ஆட்கள் உழைத்த உழைப்பும் செலவழித்த பணமும் விரயமாகி விடும். ''

மலர்க்கொடி சமாதானத்துடன் கணவனின் தோளைப் பற்றினாள். நமக்காவது பொள்ளாச்சி டவுனில் உரக்கடையும், வீட்டு வாடகையுமாய் நிரந்தர வருமானம் இருக்கிறது. இந்த நிலத்தை நம்பி வட்டிக்கு கடன் வாங்கி நகைகளை அடகு வைத்து பயிர் செய்யும் விவசாயிகளின்



நிலையை நினைத்துப் பாருங்கள்.''

பாஸ்கரன் பதிலே பேசாமல் அமர்ந்திருக்க மலர்க்கொடி அவன் கைகளைப் பற்றி எழுப்பினாள். '' நம் வேலையை நாம் செய்கிறோம். பலன் கிடைப்பது அதிர்ஷ்டத்தை பொறுத்துதான். எத்தனை முறை யோசித்தாலும் நடப்பது தான் நடக்கும். இன்னும் சிறிது நேரத்தில் விடிந்து விடும். கதிர் அடிக்க ஆட்கள் வந்து விடுவார்கள். அதற்குள் சிறிது நேரமாவது தூங்குங்கள். ''

பாஸ்கரன் எழுந்து மனைவியுடன் நடந்தபடியே சொன்னான். '' நீ கூட ரொம்ப பக்குவப்பட்ட மாதிரி பேசற மலர். ''

'' ஆமாம். இப்போது நான் ஒரு குழந்தைக்கு அம்மாவாகி விட்டேனே. '' என்றாள் மலர்க்கொடி சிரித்தபடி.

பாஸ்கரன் திடீரென்று நினைவு வந்தவனாக சொன்னான். '' வானதி கூட ரொம்ப மாறிட்டா இல்ல. ''

'' எப்படி சொல்றீங்க? ''

'' ரெண்டு நாள் முன்னே நடந்த உறவினர் குடும்ப திருமணவிழாவில் அவள் உற்சாகமாய் பேசிக் கொண்டிருந்ததைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. நம் திருமணமானதிலிருந்து இதுவரை அவள் இப்படி பேசி நான் கேட்டதே இல்லை. ''

'' உண்மையில் வானதி பெரிய வாயாடி. ஏனோ உங்களை பார்த்தால் மட்டும் மாமா என்ற மரியாதையுடன் ஒதுங்கி விடுகிறாள். ''

'' அப்படியானால் வேலை பார்க்கும் முதலாளியிடம் ஏன் அந்த மரியாதையை காண்பிக்கவில்லை? அவர்களிடம் சரிக்கு சரியாய் பேசினாளே! அந்த திருமண வீட்டில் ஏதோ ஒரு உறவு முறையில் வந்திருந்த அவள் முதலாளி உத்சவ், அவர் தாத்தா வரதராஜுலுவை நமக்கு அறிமுகம் செய்தாளே?''

ஒரு நிமிடம் திகைத்த மலர்க்கொடி பிறகு சொன்னாள். '' என்னதான் முதலாளியாக இருந்தாலும் அந்த உறவு அலுவலகத்துடன் நின்று விடும். மாமா உறவு முறை எப்போதும் தொடர்வதாயிற்றே. அதனால் தான் முதலில் மதிக்கப்பட வேண்டியவர் நீங்கள் தான். ''

பாஸ்கரன் சிரிப்புடன் மனைவியின் தோளை அணைத்துக் கொண்டான். '' எப்படியிருந்தாலும் உன் தங்கையை விட்டுக்கொடுக்க முடியாது உன்னால். ''

'' உங்களால் மட்டும் முடியுமா? ''

'' என்னாலும் முடியாதது தான். '' என்றவன் அதற்கு மேல் எதுவும் பேசவில்லை. கண்களை மூடி உறங்க முற்பட்டான்.

அதே நேரத்தில் வரதராஜ் டேபிள் மீதிருந்த கடிகாரத்தைப் பார்த்தார். மணி மூன்று என்றது. அந்த திருமண விழாவுக்கு போய் வந்ததிலிருந்து அவர் அதிகம் சிந்தனை வயப்பட்டார். அன்றும் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாய் நடக்கத் தொடங்கினார். கால்கள் அறைக்குள் சுற்றி வர மனம் பழைய நினைவுகளை சுற்றி சுற்றி வந்தது.

வரதராஜுலுவின் சொந்த ஊர் கோயம்புத்தூர் தான். அவரது பெற்றோர் ஊரிலுள்ள பெரும் பணக்காரர்களில் ஒருவர். பெற்றோருக்கு இரண்டு பெண்களுக்கு பிறகு பிறந்த ஒரே மகன் என்பதால் செல்லமும் செல்வ

கும் அதிகம் இருந்தது. வரதராஜ் பி.எஸ்.ஜி. கல்லூரியில் பி.ஏ. முடித்து விட்டு முதல் வருட படிப்பை முடித்து விட்டு விடுமுறையில் இருந்த போது அவன் அப்பா அவனை ஆழியாறு போய் வரச் சொன்னார்.

ஆழியாறுக்கு அருகே அவர்களுக்கு டீத்தூள் தயாரிக்கும் பேக்டரி ஒன்றிருந்தது. ரொட்டிக்கடை எனும் இடத்திலிருந்த அந்த பேக்டரியை பார்வையிட சென்ற போது தான் வரதராஜு அவளை சந்தித்தான். அவள் பெயர் லட்சுமி. வரைந்து வைத்தது போன்ற முகமும், சிரிப்பும், உடற்கட்டுமாய் ரவிவர்மாவின் தெய்வ படங்களில் வரும் லட்சுமியைப் போலவே இருந்தாள். வரதராஜு முதல் பார்வையிலேயே அவளிடம் மயங்கிப்போனான். டீ பாக்டரியில் வேலை செய்யும் கூலித்தொழிலாளியின் பெண் அவள். தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவள் என்றறிந்த போதும் அவன் ஆர்வம் சிறிதும் குறையவில்லை.

தேயிலை துளிர் பறிக்க அவள் போகும் போது பேச்சு கொடுத்தபடி அவனும் கூடவே போவான். ஆரம்பத்தில் முதலாளி என்ற மரியாதைக்காக நின்று பதில் பேசிய லட்சுமி அவன் நெருங்கிப் பழக முற்பட்டதும் விலகிப்போகத் தொடங்கினாள். வரதராஜு விடாப்பிடியாக அவள் பின்னால் சுற்றினான். பேசி பேசி மனதை கரைத்தான்.

சினிமாவில் கதாநாயகர்கள் எஸ்டேட்டில் வேலை பார்க்கும் கதாநாயகியுடன் திரையில் ஆடிப்பாடுவதை பார்த்த லட்சுமி அவன் வார்த்தைகளில் மயங்கினாள். ''ஆயுசுக்கும் நீ தான் என் மனைவி என் பெற்றோர் ஆரம்பத்தில் எதிர்த்தாலும் இறுதியில் ஒத்துக்கொள்வார்கள். அவர்களை என்னால் சம்மதிக்க வைக்க முடியும். '' என அவன் செய்த சத்தியத்தை முழுதாக நம்பினாள். ஆழியாறு அணையின் பூங்காவிலும் மங்கி பால்ஸிலும் டாப் ஸ்லிப்பின் பசுமையான காடுகளிலும் தங்கள் காதலை வளர்த்தார்கள். மலை உச்சியில் அமர்ந்திருந்த பாலாஜி கோயிலின் கிருஷ்ணன் சாட்சியாக அந்த பளிங்கு தரைகளும், தூண்களும் ஆசிர்வதிக்க தோட்டத்து மலர்கள் தலையசைத்து பூத்தூவ வரதராஜு லட்சுமிக்கு தாலி கட்டினான்.

''இது நம் இருவருக்காக கட்டிய தாலி தான். ஊர் அறிய உலகம் அறிய பெரிய மண்டபத்தில் நம் பெற்றோர் முன்னிலையில் மறுபடி ஒரு முறை நம் திருமணம் நடக்கும் என்றான் நம்பிக்கையுடன். இருவருக்கும் மட்டுமே தெரிந்த திருமணத்தில் அடுத்து முதலிரவும் நடந்தது. தாலி கட்டிய கணவனிடம் மறுக்கத் தோன்றாத சராசரி பெண்ணாய் லட்சுமியும்

''நல்ல பிள்ளைன்னு பெயர் எடுக்கணும்''

''எங்கக் கொட்டிக்கிடக்குன்னு சொல்லு. உடனே போய் எடுத்துட்டு வந்திடறேன்''

-சிவ.இராமலிங்கம்,
தூத்துக்குடி மாவட்டம்.





பணிந்து போனாள். டீ பேக்டரியை பார்வையிட வந்த வரதராஜு அதை மறந்து போய் லட்சுமியுடன் ஒரு மாதம் முதலிரவு கொண்டாடினான். லட்சுமியின் பெற்றோர்களுக்கு விஷயம் தெரிந்தது. அவர்கள் அவளை கண்டித்த போது வரதராஜு அவர்களை சமாதானப்படுத்தினான்.

''லட்சுமிதான் என் மனைவி. என் பெற்றோரை அழைத்து வந்து முறைப்படி அழைத்துப் போகிறேன். '' என்றான்.

'' இதெல்லாம் நடக்குமா? '' என நம்பிக்கையின்றி தலையாட்டி மறுத்தவர்களிடம் உடனே அதற்கான ஏற்பாடுகளை செய்வதாகக்கூறி கோபமாக கிளம்பினான்.

அவன் போய் சேர்ந்த சமயம் வீடு பரபரப்பாக இருந்தது. மேனேஜர் யாருடனோ போனில் பேசிக்கொண்டிருந்தார்.

'' உங்களுக்குத்தான் எஸ்டேட்டிற்கு போன் செய்து கொண்டிருந்தேன். நீங்களே வந்து விட்டீர்கள். '' என்றார் அவனைப் பார்த்ததும்.

'' என்ன விஷயம்? அப்பா, அம்மாவெல்லாம் எங்கே? '' என்றான் வரதராஜு.

மேனேஜர் உடனே சொல்லாமல் தயங்க, '' சொல்லுங்கள் '' என்றான் பதட்டத்துடன்.

'' அப்பாவிற்கு இரவு ஹார்ட் அட்டாக் வந்து ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறது. நிலமை கொஞ்சம் சீரியஸ்தான் என்று டாக்டர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். ''

'' எந்த மருத்துவமனை? '' பெயரைக் கேட்டுக் கொண்டு வரதராஜு வந்த காரிலேயே திரும்பி மருத்துவமனைக்கு விரைந்தான். அம்மாவும் சகோதரிகளும் அவனைப் பார்த்ததும் முகத்தில் அறைந்து கொண்டு அழ ஆரம்பித்தார்கள். புரியாமல் அவன் பார்க்க, உறவினர் ஒருவர் அவன் கைகளைப் பற்றி ''அப்பாவின் கதை இப்படி முடிஞ்சுப்போச்சே'' என்றார் அனுதாபத்துடன்.

வரதராஜு பிரமை பிடித்தாற்போல் நின்றான். அவன் கிளம்பும் போது சிரித்த முகத்துடன் வழியனுப்பி வைத்த அப்பா இப்போது இல்லை என்பதை அவனால் நம்பவே முடியவில்லை. அழக்கூட நேரமின்றி அடுத்தடுத்து செய்ய வேண்டிய காரியங்கள் காத்திருந்தன. இயந்திரமாய் அப்பாவின் ஈமகாரியங்களை செய்துமுடித்து உறவினர்கள் எல்லாம் கலைந்து வெறிச்சோடிய வீட்டில் அம்மாவும், அவனும் சகோதரிகளுமாய் அமர்ந்திருந்த நேரம் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கியவர் தன்னை ஒரு பைனான்சியர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு சொன்னார், '' உங்கள் அப்பா பிஸினெசிற்காக என்னிடம் ஐந்து லட்சம் கடன் வாங்கியிருந்தார். இதோ அதற்கான டாக்குமென்ட்ஸ். '' என அவர் பத்திரங்களை எடுத்துக்காட்டவும் எல்லோரும் திடுக்கிட்டு எழுந்து நின்றார்கள்.

அப்பாவின் வரவு செலவு பற்றி இதுவரை எதையும் அறிந்திராத வரதராஜு மேனேஜரை அழைத்து விசாரித்தான். அவர் அப்பா பணம் வாங்கியது உண்மை தான் என தெரியவந்தது பேங்கில் எவ்வளவு பணம் இருக்கிறது என்று விசாரித்தான். அவர் தலையை சொறிந்தபடி ''கொஞ்சநாளாகவே நிதிநிலமை சரியில்லாததால் பேங்கில் பணம் எதுவும் இல்லை. ''

என்றார்.

வரதராஜு பைனான்சியரிடம் இரண்டு மாத தவணை கேட்டு அவரை அனுப்பி வைத்தான். உடனடியாக அப்பாவின் கணக்குகளை சரி பார்க்கத் தொடங்கினான். பார்க்க, பார்க்க மிகவும் சோர்ந்து போனான். வரவு, லாபம் என்று எதுவுமில்லை. கொடுக்கப்பட வேண்டிய தொகை தான் அதிகம் இருந்தது. ''அப்பா ஏன் இத்தனை கடன் வாங்கினார்? நஷ்டம் என்று தெரிந்ததும் மேலும் மேலும் ஏன் அதே தொழிலில் முதலீடு செய்தார்? ''

மேனேஜரிடம் கேட்ட போது அவர் சொன்னார் '' இரு அக்காக்களின் திருமணத்திற்காக வாரி இறைத்து இதுவரை சம்பாதித்ததை எல்லாம் கரைத்து விட்டார். பிறகு எதிர்பாராமல் நஷ்டம் வந்துவிட்டது. எப்படியும் அதில் இருந்து மீண்டு விடலாம் என்று நம்பினார். ''

அந்த நம்பிக்கையை பொய் என்று சொல்லிவிட முடியாது. எந்த தொழிலிலும் லாபமும், நஷ்டமும் மாறிமாறித்தான் வரும். நம் துரதிஷ்டம் நஷ்டத்திலிருந்து மீண்டு வருவதற்குள் அப்பா போய் விட்டார்.

வரதராஜு அடுத்து என்ன செய்வதென்று யோசித்தான். ஒரு நிமிடம் எதுவும் புரியாமல் மருட்டியது.

வரிசையாய் கடன்காரர்கள் தினமும் ஒவ்வொருவராய் வர ஆரம்பித்தனர். வீட்டிலுள்ளவர்கள் மிரண்டு போனார்கள். வரதராஜு அம்மாவிடம் நிலைமையை எடுத்துச் சொன்னான். பிழைப்பதற்காக வழியை தேடிக் கொள்வதற்கு முன் கடனை அடைத்தாக வேண்டிய நிர்பந்தத்தை விளக்கினான். அம்மாவின் சம்மதத்துடன் அலுவலகத்தையும், வீட்டையும் விற்றான். கடனை வட்டியுடன் தீர்த்தான். வீட்டிலிருந்த பணியாட்களையும் அனுப்பி வைத்த போது ரொம்ப நாட்களாக இருந்து பழகிய மேனேஜர் மட்டும் துக்கத்தில் கண்கள் கலங்க விடைபெற்றார்.

அக்காக்கள் இருவரும் அம்மாவையும், தம்பியையும் வைத்துக் கொள்ள நேர்ந்துவிடுமோ என்ற பயத்தில் ஒதுங்கிப்போனார்கள். வரதராஜு கோவையின் புறநகர் பகுதியான வடவள்ளியில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்தான். அடுத்து குடும்ப செலவிற்கு பணம் வேண்டும். டிகிரி கூட முடிக்காத நிலையில் என்ன வேலை கிடைக்கும்? என இரவு பகலாய் சிந்தனையில் மூழ்கிப்போய் இருந்தவனிடம் அம்மா கேட்டாள்.

''நம்ம ரொட்டிக்கடை எஸ்டேட் டீத்தூள் பேக்டரியை என்ன செய்தாய் வரதராஜு? இப்போது யார் பார்த்துக் கொள்கிறார்கள்? ''

வரதராஜுவுக்கு சுரீரென்றது. லட்சுமியை அவன் எப்படி மறந்து போனான்? அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாய் ஏற்பட்டதில் அவள் நினைவே வரவில்லையே? அம்மாவிடம் சொல்லிக்கொண்டு அன்றே ஆழியாறு கிளம்பினான். கசங்கிய சட்டையும், சோர்ந்த முகமுமாய் பஸ்சில் வந்திறங்கிய தங்கள் முதலாளியை சூழ்ந்து கொண்ட பேக்டரி தொழிலாளர்கள் அவன் அப்பாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தார்கள்.

அவர்களிடம் பேசிக்கொண்டிருந்த பின்னர் பேக்டரியை விற்கப்போவதாக தெரிவித்து விட்டு வரதராஜு, லட்சுமியை தேடிப் போனான். லட்சுமி அவனைப் பார்த்ததுமே ஓடிவந்து கைகளைப் பிடித்துக் கொண்டு அழுகையில் கரைந்து போனாள். அவன் அப்பாவின் திடீர் மறைவு பற்றி



விசாரித்தாள். தங்கள் உறவைப்பற்றிய பயத்தை தெரிவித்தாள். வரதராஜு அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

''எந்த நிலையிலும் உன்னை நான் கைவிடமாட்டேன். '' என்று ஆறுதல் சொன்னதும் அவள் சற்று அமைதியானாள். முகம் வெளுத்தது. கண்கள் குழிவிழுந்து இருந்தவளுக்கு ஆறுதல் சொல்லி விட்டு வரதராஜு அன்றே கோவை திரும்பினான்.

அவனுக்கு தெரிந்தவர்கள் மூலம் வெளிநாட்டில் வேலைக்கு முயற்சி செய்தான். சிறிது நாட்களிலேயே பிரான்சில் வேலை கிடைக்கவும் டீத்தூள் பேக்டரியை விற்று விட்டு பிரான்ஸ் கிளம்ப ஏற்பாடு செய்தான்.

என்னைத் தனியே விட்டுவிட்டுப் போகிறாயா? என்ற தாயாரை சமாதானப்படுத்தி அவர்களுக்காகவே தான் போவதாகவும் தாயை பழையபடி சொந்தவீட்டில் நகை, கார் என ஆடம்பரங்களுடன் வாழவைக்கப் போவதாக உறுதி கூறினான்.

திரும்ப எஸ்டேட் போய் லட்சுமியை சந்தித்தான். பேக்டரி விற்ற பணத்தில் ஒரு நல்ல தொகையை அவள் மறுத்தும் கேட்காமல் அவள் மீது டெபாசிட் செய்தான்.

'' பணம் வேண்டாம். உங்களுடன் அழைத்துப்போங்கள் '' என்று அழுதவளிடம் வீட்டு நிலைமையை எடுத்துக் கூறினான்.

'' வெளிநாட்டிற்கு நினைத்தமாதிரி போய்விட முடியாது. முதலில் நான் போய் வேலையில் செட்டில் ஆக வேண்டும். உன்னை என் மனைவி என ரிஜிஸ்டர் செய்து பாஸ்போர்ட் எடுத்தப்புறம் தான் அழைத்து செல்ல முடியும். அதுவும் அங்கே தங்குமிடம், குடும்பத்துடன் வசிக்க அனுமதி உண்டா என்று பார்க்க வேண்டும். என் அம்மாவைக் கூட இங்கே தனியாத்தான் விட்டு விட்டு போறேன் லட்சுமி. பெரிய வேலையோ, நிரந்தர வருமானமோ இல்லாதவர்கள் குடும்பத்துடன் போனால் அங்கெல்லாம் சமாளிக்க முடியாது. அதை விட பல்லைக்கடித்துக் கொண்டு சில வருடங்கள் பொறுத்திரு. பணத்துடன் நானே திரும்பி வருவேன். ''

லட்சுமி கண்களில் நீர் வழிய சொன்னாள் ''எத்தனை வருடங்கள் வேண்டுமானாலும் நான் பொறுத்திருப்பேன். ஆனால் என் வயிற்றில் வளரும் உங்கள் குழந்தை அதுவரை பொறுக்காதே! ''

வரதராஜு அடிவாங்கினாற் போலானான். இதுபோல் ஒரு விஷயம் நடக்கக்கூடும் என்று அவன் நினைத்துப் பார்க்கவில்லை. இப்போது

''துப்பாக்கியை காட்டினா நான் பயப்படவே மாட்டேன்''

''நிஜமாவா''

''ஆமாம்... துப்பாக்கியால சுட்டாதான் பயப்படுவேன்''

-பாலாஜி கணேஷ்,
கோவிலாம்பூண்டி.



என்ன செய்வதென்றே புரியவில்லை. லட்சுமியை அழைத்துப் போய் அம்மாவிடம் விட்டு விட்டு போனால் என்ன? அதுவும் லட்சுமியின் குடும்பம், குலம் எல்லாவற்றையும் விசாரித்து அவமானப்படுத்தவே செய்வாள். நான் போன பிறகு வெறுப்பில் விபரீதமாக ஏதாவது நடந்து விட்டால்? இங்கேயே விட்டுவிட்டுப் போனாலும் லட்சுமி பெற்றோர், உறவினர்களின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளாக வேண்டிவரும். அதை விட....

நீண்ட யோசனைக்கு பின் வரதராஜு சொன்னான். ''லட்சுமி இது நம் முதல் குழந்தை எனக்கு சொல்லவே வாய் வரவில்லை. ஆனாலும் வேறு வழியில்லை. நான் பல வழிகளிலும் யோசித்துப் பார்த்த பிறகு தான் இதை சொல்கிறேன். இந்த கருவை அபார்ஷன் செய்துகொள். திருமணமான புதிதில் பல பேர் தங்கள் எதிர்கால திட்டங்களுக்காக குழந்தையை தவிர்க்கத்தான் செய்கிறார்கள். அதுபோலத்தான் இதுவும். நமக்கு இன்னும் காலம் காத்திருக்கிறது. வாழ்க்கையில் கால் ஊன்றி நின்று விட்டால் யாரைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை. ஒன்றென்ன ஒன்பது குழந்தை பெற்றுக்கொள்ளலாம்.

வழிந்த கண்ணீரை துடைத்தபடி மௌனமாய் அமர்ந்திருக்க வரதராஜு நயந்தும், பயந்தும் அவளுக்கு சொல்லிக்கொண்டிருந்தான். லட்சுமி அரைகுறை மனதுடன் சரியென தலையசைத்ததும் தான் அவன் முகத்தில் நிம்மதி தோன்றியது.

''உடம்பை பார்த்துக் கொள். அடிக்கடி நான் கடிதம் எழுதுகிறேன். நீயும் பதில் போடு. கவலைப்படாதே. விரைவில் வந்துவிடுவேன்.'' என அவளிடமிருந்து விடைபெற்றான். அதுதான் அவன் லட்சுமியை கடைசி முறையாகப் பார்த்தது.

திட்டமிட்டபடி பாரிஸ் வந்து சேர்ந்ததும் அவன் வாழ்க்கையே மாறிப் போனது. செல்வந்தர் வீட்டு மகனாய் நகத்தில் அழுக்கு படாமல் வளர்ந்தவன் கான்ராக்ட் லேபராய் மிகவும் கஷ்டப்பட்டான். சேர்ந்த புதிதில் உடல்வலியும் மனவேதனையும் அவனை வாட்டி எடுத்தது. பழையபடி ஊருக்கே திரும்பி விடலாமா? என்று கூட தோன்றும். அம்மாவின் நகைகளை விற்று வெளிநாடு செல்வதற்கென்று செலவழித்த பணத்தை திரும்ப சம்பாதிக்காமல் எப்படி செல்வது? எத்தனை சிரமப்பட்டாலும் செலவழித்த பணத்தை சேமிக்காமல் போவதில்லை என்ற உறுதியுடன் நாட்களை ஓட்டினான். மூன்று வருட கான்ட்ராக்ட் முடிகையில் சேமிப்பு உயர்ந்ததைப் போலவே மன வலிமையும் பெருகியிருந்தது. முட்டி மோதினால் முன்னேறிவிடலாம் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது. பிரான்ஸ் வருவதற்காக வாங்கிய கடனை அடைத்து விட்டு அம்மாவுக்கும் கணிசமானதொரு தொகையை அனுப்பி வளையலும், கழுத்துக்கு செயினும் செய்து கொள்ளச் சொன்னான். கான்ட்ராக்ட் எதிர்பாராத விதமாய் சில மாதங்கள் முன்பே முடிந்து விட்டதாகவும் விசா தீரும் வரை நண்பர்களுடன் சேர்ந்து சிறிய அளவில் சில்லறை வியாபாரம் செய்யப் போவதாகவும் அம்மாவுக்கும், லட்சுமிக்கும் தனித்தனியே கடிதங்கள் எழுதிப்போட்டான். அம்மாவிடமிருந்து உடனே பதில் வந்தது. லட்சுமி பதிலே போடவில்லை.



முதலில் அவள் பதில் போடாமல் இருப்பதை வரதராஜு பொருட்படுத்தவில்லை. அப்போதெல்லாம் மழைகாலத்தில் எஸ்டேட்டில் கடிதங்கள் மிக மிக தாமதமாகத் தான் செல்லும். தபால் பெட்டியில் சேர்க்கப்படும். பதில் கடிதங்களும் கூட சில சமயம் சாரலில் நனைந்து முகவரி அழிந்து போகும் அல்லது மலை மீதிருந்து உருண்டு வரும் பாறைகள் விழுந்து வீடுகள் மனிதர்கள் சேதமடைவது போல தபால்பெட்டியும் நொறுங்கிப்போவதுண்டு. பல எஸ்டேட்டுக்கள் சைக்கிளில் கூட செல்ல முடியாத அளவு அடுத்தடுத்து குன்றுகளாக இருப்பதால் தபால்காரர் ஒரு கடிதத்திற்காக வெகுதூரம் செல்ல சோம்பல் பட்டு ஒழுங்காக டெலிவரி செய்ய மாட்டார்கள். எனவே வரதராஜு லட்சுமிக்கு இரண்டொரு கடிதம் எழுதிவிட்டு பதில் வரவில்லை என்றதும், அத்துடன் கடிதம் எழுதும் முயற்சியை கைவிட்டான். இன்னும் சில மாதங்களில் நேரிலேயே போய்விடப் போகிறோம் என்ற சமாதானத்துடன் தன் வேலையில் மும்முரமானான். மாதங்கள் ஓடிய போதும் அவனால் கிளம்ப முடியாமல் போக அம்மா ஒரு நாள் உடல்நிலை சரியில்லை என்று கடிதம் எழுதியிருந்தாள்.

மூன்று பேர் இருந்தும் அநாதையாய் கிடக்கிறேன். நேரத்துக்கு சமைக்கக்கூட முடிவதில்லை என்ற வரிகள் மனதைத் தொட வரதராஜு அக்காக்களுக்கு போன் செய்து பேசினான். நான் வரும் வரை அம்மாவை யாராவது கூட வைத்துக் கொள்ளுங்கள். மாதாமாதம் பணம் அனுப்பி விடுகிறேன் என்ற போது இருவருமே முடியாது என்று மறுத்தார்கள்.

கூட்டுக் குடும்பத்தில் இருக்கிறோம். குடும்பத்திலுள்ள மற்றவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள் என பெரிய அக்காவும், ''டெல்லி, பீகார் என டிரான்ஸ்பராகி ஒவ்வொரு மாநிலமாக போய்க் கொண்டிருக்கிறோம். உடல்நிலை சரியில்லாதவர்களை எப்படி அழைத்துச் செல்ல முடியும்? என சின்ன அக்காவும் நிராகரித்ததும் வரதராஜு நொந்துபோனான். அடுத்து என்ன செய்வது என்று அவன் யோசிக்கையிலேயே மகனுக்கு அதிகம் சிரமம் கொடுக்க விரும்பாமல் அம்மா மரண படுக்கையில் இருப்பதாக தகவல் வந்தது. இதே போன்ற ஒரு சூழ்நிலையில் மருத்துவமனைக்கு ஓடி அப்பாவின் இறந்த உடலை பார்த்தது நினைவுக்கு வர, அம்மாவாவது பிழைத்திருந்து தன்னுடன் இருக்க வேண்டும் என கடவுளை வேண்டியபடி வரதராஜு உடனே கிளம்பினான். மகன் வருவதற்கென்றே காத்திருந்தாற்போல் அவனைப் பார்த்ததும் மகிழ்ச்சியுடன் புன்னகைத்து, அவன் கைகளைப் பற்றிய படியே அம்மா உயிரை விட்டாள்.

அம்மாவை பழையபடி சிறப்பாக வாழவைத்துப் பார்க்க வேண்டும் என்ற வைராக்கியத்தில் அவளுடன் இருக்கும் நாட்களையும் இழந்து விட்டு அநாதையாக நின்றான் வரதராஜு.

சில நாட்கள் கழித்து லட்சுமியைத் தேடி ரொட்டிக்கடை எஸ்டேட் போன போது அவள் குடும்பமே அந்த ஊரை விட்டு போய் விட்டிருந்தது. அருகில் இருந்த வீட்டில் விசாரித்த போது ஒரு வயதான பெண்மணி சொன்னாள். ''அந்த பொண்ணு லட்சுமி பார்க்கத்தான் சாதுவா இருந்துச்சி.

உண்மையில் அது நடவடிக்கை சரியா இல்ல. கல்யாணமே ஆகாம

கருத்தரிச்சி போச்சு. யார் காரணம்னு எத்தனையோ கேட்டும் பதில் சொல்
லல. சரி கலைச்சிடுன்னா அதுக்கும் ஒத்துக்க மாட்டேன்னு ரகளை. சோத்
துக்கு இல்லாத குடும்பம். தாழ்த்தப்பட்ட இனம். கல்யாணமாகாம பெத்த
குழந்தையை நல்ல படியா வளத்துட முடியுமா என்ன? அத்தனை பேரும்
எடுத்து சொன்ன போதும் கேட்கல. குழந்தையை வளர்க்கவும், ஆளாக்க
வும் பணத்துக்கு என்ன செய்வோம் என்று அவள் அப்பா கவலைப்பட்ட
போது, தேவையான பணத்தை தன் குழந்தையின் அப்பாவே தந்திருப்ப
தாக சொன்னாள். 'ஏதோ சின்னப் பெண், எவனிடமோ ஏமாந்து விட்
டான் என்றிருக்க! பணம் வாங்கிக் கொண்டு இந்த வேலை செய்தாயா?'
என்று அவள் அப்பன் அடித்து தீர்த்து விட்டான். அடி உதையும், அரைப்
பட்டினியுமாய் நாட்களை ஓட்டி விட்டு பிரசவ சமயம் பொள்ளாச்சிக்கு
அழைத்துப் போனார்கள். பிறகு இந்த பக்கம் வரவே இல்லை. என்ன
குழந்தை பிறந்ததென்று கூட யாருக்கும் தெரியாது.''

லட்சுமி ஏன் இப்படி செய்தாள் என்று வரதராஜுக்கு வருத்தமாக
இருந்தது. இத்தகைய அவமானமும், வேதனையும் ஏற்படக்கூடாது
என்று தான் அவளை அபார்ஷன் செய்து கொள்ள சொன்னான். அவளும்
சரி என்று தான் தலையசைத்தாள். பிறகு ஏன் இப்படி செய்தாள்? இப்
போது அவளை எங்கே போய் தேடுவது?

வரதராஜு அங்கிருந்து கிளம்பி பொள்ளாச்சி வந்து சில மருத்துவம
னைகளில் விசாரித்தான். லட்சுமி என்ற பெயரில் பிரசவித்த பெண்கள்
ஒவ்வொரு மருத்துவமனையிலும் நிறைய பேர் இருந்தார்கள். தேதி,
மாதம் சொன்னால்தான் சரியான தகவல் கிடைக்கும் என்றார்கள். மேற்
கொண்டு என்ன செய்வதென்று புரியவில்லை. அடுத்தடுத்து நடந்த எதிர்
பாராத சம்பவங்களில் வரதராஜு இடிந்து போனான். பாரிசிலிருந்து
கிளம்பி வரச் சொல்லி நண்பர்கள் போன் செய்யவும் உடனே கிளம்பி
போனான்.

அம்மாவும் இல்லை, லட்சுமியும் இல்லை என்றானதும் வரதராஜு
நூல் அறுந்த பட்டம் போலானான். வெறுமையை மறக்க கடுமையாக
உழைக்கத் தொடங்கினான். உழைத்து களைத்த சமயங்களில் சத்தமின்றி
உறங்கிப்போனான்.

அப்போது தான் அவனுடன் சேர்ந்து ஸ்டோர் ஆரம்பித்த நண்பர்கள்
இந்தியா போய் விடப் போவதாக சொன்னார்கள். வரதராஜுக்கு இந்தி
யாவில் யாருமில்லை என்ற நிலையில் அங்கேயே குடியுரிமை பெற்று தங்
கவேண்டிய சூழ்நிலையில் சரளாவை மணந்தான். வரதராஜுக்கு அதிர்ஷ்
டம் கொஞ்சமாவது இருந்ததால் சரளா குணசாலியாக இருந்தாள். ஒரு மக
ளும், மகனும் பிறந்து அவர்கள் வளர்ப்பிலும், படிப்பிலும் நாட்கள் ஓடி
மறைந்த ஒரு சந்தர்ப்பத்தில் வரதராஜு லட்சுமியைப் பற்றி சரளாவிடம்
சொன்னான்.

''இத்தனை நாளாய் நீங்கள் என்னிடம் சொல்லவே இல்லையே!''
என்றாள் சரளா திகைப்புடன்.

''மறைக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. முடிந்து போன விஷ
யத்தைப் பற்றி பேசி பலனில்லை என்றிருந்தேன்''

''முடிந்து போனது என்று எப்படி விட முடியும்? லட்சுமி நீங்கள் தாலி



கட்டிய மனைவி. அதற்கு சாட்சியாய் உங்கள் ரத்தமாய் குழந்தை வேறு
இருக்கிறது?''

''அதற்காக இப்போது என்ன செய்ய முடியும் சரளா?'' ''அவர்களைத்
தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.''

''எங்கே இருக்கிறார்கள் என்றே தெரியாதவர்களை எப்படி கண்டு
பிடிப்பது?''

''பொள்ளாச்சி பெரிய நகரம் அல்ல. அவர்கள் பொள்ளாச்சியிலேயே
வசித்தால் இத்தனை நாளில் தெரிந்தவர்கள் யார் கண்ணிலாவது பட்டி
ருக்கலாம். நாம் மீண்டும் விசாரிக்கலாம்?''

விசாரிக்க ஆரம்பித்தார்கள். முதலில் ரொட்டிக்கடை எஸ்டேட்டின்
போன் நம்பர் வேண்டும். யோசித்த போது வரதராஜுடன் முதன் முத
லாய் பாரிசுக்கு வந்த நண்பர்களில் ஒருவன் இப்போது பொள்ளாச்சியில்
செட்டில் ஆகியிருந்தது நினைவு வந்தது. அவன் மூலமாய் விசாரிக்கத்
தொடங்கினார்கள். மூன்று மாதம் விடாது முயற்சித்த பின் ஒவ்வொரு
தகவலாய் கிடைத்தது. லட்சுமிக்கு திருமண வயதில் ஒரு மகன் இருப்ப
தாகவும், அம்மாவும் மகனும் ஆற்றோரமாய் நிலம் வாங்கி விவசாயம்
செய்வதாகவும், இத்தனை நாளும் அவர்களுக்கு துணையாய் இருந்த லட்
சுமியின் பெற்றோர் சமீபத்தில் தான் ஒருவர் பின் ஒருவராக இறந்து விட்
டதாகவும் கேள்விப்பட்டார்கள்.

சரளா ''போய், அவர்களை அழைத்து வந்து விடலாம்'' என்றாள்.

''அது அத்தனை சுலபமில்லை சரளா. லட்சுமி முதலில் வருவாளா
என்பது சந்தேகம் தான். அவ்விடம் வளர்ந்த மகன் இருக்கிறான். இங்
கும் நம் குழந்தைகளும் வளர்ந்து விட்டார்கள். மைதிலிக்கு நாம் மாப்
பிள்ளைப் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த சமயத்தில் புதிய பிரச்சனை
கள் எதுவும் வேண்டாம். இத்தனை வருடங்கள் இருக்கிறார்களா என்பதே
தெரியாமல் கழிந்து விட்டது. இன்னும் சிறிது நாளில் எதுவும் ஆகிவி
டாது. மைதிலி திருமணத்தை முடித்து விட்டு நாமே இந்தியா போக
லாம்.''

சரளாவுக்கு அது சரியென்றே தோன்றியது. பிறகு மைதிலிக்கு ராமச்
சந்திரனை திருமணம் செய்து வைத்து அவர்களுக்கு வீடு வாங்கிக்
கொடுத்து குடித்தனம் அமைத்தார்கள். திருமணமான மூன்றாம் மாதமே
மைதிலி கர்ப்பமானாள். பின் மசக்கை, வளைகாப்பு, பிரசவம், குழந்தை
பராமரிப்பு என சில வருடங்கள் இருவருக்கும் எதையும் நினைக்கக்கூட
முடியவில்லை.

உத்சவ் சற்று வளர்ந்த சமயம் மோகனுக்கு திருமணம் நடந்தது. வரத
ராஜு மகனை ஸ்டோரில் புகுத்தினார். பிரீத்தி பிறந்ததும் தாத்தாவும்,
பாட்டியும் மகள் வீட்டிற்கும் தங்கள் வீட்டிற்குமாய் ஓடி ஓடி பேரப்பிள்
ளைகளை சீராட்டினார்கள்.

இடையில் ஒரு நாள் வரதராஜுவின் பொள்ளாச்சி நண்பர் போன்
செய்து லட்சுமி இறந்து விட்டதாக சொன்னதும் தான் இருவருக்கும் சுரீ
லென்றது. ''ஒரு மன்னிப்புக்குக் கூட வழியில்லாமல் போயிற்றே'' என்
றார் வரதராஜு துக்கத்துடன்.

''லட்சுமியைத்தான் பார்க்க முடியவில்லை. அவன் மகனையாவது

பார்ப்போம்'' என்றாள் சரளா.

இந்தியா போய் வருவதாக மட்டும் சொல்லி விட்டு இருவரும் கிளம்பி வந்து வரதராஜுவின் நண்பர் மூலமாய் லட்சுமியின் வீட்டிற்கு சென்றனர். பசுமையான வயல்களுக்கு நடுவே மிக அழகிய வீடு. அந்த வீட்டில் லட்சுமியையே உரித்து வைத்தாற் போன்ற தோற்றத்தில் உயர மும், கம்பீரமுமாய் இருந்த மகனைப் பார்த்ததும் அவரையும் அறியாமல் மனம் பூரித்தது.

இவர்களை யார் என்று புரியாமல் புன்னகையுடன் பார்த்தவன், விப ரம் தெரிந்ததும் இறுகிப் போனான். ''நான் யாரையும் பார்க்க விரும்ப வில்லை. எனக்கு அப்பா என்று யாருமே இல்லை. அம்மா மட்டும் தான் இப்போது அவளும் போய் விட்டாள். எனவே தயவு செய்து எனக்கு தொல்லை தராமல் கிளம்புங்கள்'' என்றான் எங்கோ பார்த்தபடி.

''சங்கரா, என்ன இருந்தாலும் உன் அப்பா'' என்றார் அப்போது அங்கே இருந்த முத்துகவுண்டர்.

''அப்பாவா? இவரா? இத்தனை நாள் எங்கே போயிருந்தார்? இப் போது எதற்காக திடீரென்று வந்து நிற்கிறார்? சிறு வயதிலிருந்து நான் போட்டோவில் கூட பார்த்திராத ஒருவர் எதிரில் வந்து நான் தான் உன் அப்பா என்றால் எப்படி நம்புவது? நீங்களே சொல்லுங்கள்!''

''ஏதோ விதி சதி செய்திருக்கிறது. லட்சுமிக்கு கொடுப்பினை இல்லை. என்ன இருந்தாலும் சொந்தம் விட்டுப்போகுமா?'' என்றார் வர தராஜுவின் நண்பர்.


''மனிதர்கள் செய்யும் சதிக்கு விதிமேல் பழிபோடுவது நியாயம் இல்லை. இதற்கு மேல் இதைப் பற்றி பேசுவது கூட அநாவசியம்.'' என சங்கரன் எழுந்து செல்ல, சரளா அவசரமாய் அவன் கைகளைப் பற்றி னாள். ''உன் அப்பா மீது கோபப்பட உனக்கு நியாயமான காரணங்கள் நிறைய இருக்கலாம். ஆனால் என்னிடம் கோபத்தையோ வருத்தத் தையோ காண்பிக்காதே. ஏனென்றால் நானும் உன் அம்மாவைப் போலத் தான்'' என்றாள் நெகிழ்ந்த குரலில்.

ஒரு கணம் அமைதியாய் நின்ற சங்கரன் கலங்கி விட்ட கண்களை யாரும் பார்க்கும் முன் அங்கிருந்து நகர்ந்தான்.

அதற்கு பிறகு சரளா பலமுறை போய் சங்கரனைப் பார்த்து விட்டு வந்து அவரிடம் விபரம் சொன்னாள். வரதராஜு கொடுத்த பணத்தில் நிலம் வாங்கி லட்சுமி மகன் பெற்றோர் துணையுடன் பாடுபட்டு பெருக் கியதை, மகள் மீது கோபம் இருந்தாலும், லட்சுமியின் பெற்றோர் கடைசி வரை அவளுக்கு துணையாய் நின்றதை, தகப்பன் இல்லாமல் பிறந்தவன் என முத்திரை குத்தப்பட்ட சங்கரன் பள்ளியில் அவமானப் படுத்தப்பட்டு பள்ளிக்கு போவதையே நிறுத்தி விட்டதை எல்லாம் சொன்னாள்.

இப்போது சங்கரனின் அயராத உழைப்பால் வசதியில் உயர்ந்து விட்ட போதிலும் உள்ளூர்காரர்கள் தாழ்த்தப்பட்ட தாய்க்கு பிறந்தவன் என ஒதுங்கியே பழகியதையும், பெண் கொடுக்கக்கூட முன் வரவில்லை என் பதையும், கடைசியில் மிக ஏழை குடும்பத்துப் பெண்ணை மணந்திருப் பதையும் விவரித்தாள். இத்தனை நாளில் சரளாவின் நல்ல குணத்தை புரிந்து கொண்டதால் சங்கரன் அவளிடம் முகம் திருப்பவும் முடியாமல்





ஒட்டிப் பழகவும் முடியாமல் தவிப்பதையும் கூறினாள்.
ஓட்டிப் பழகவும் முடியாமல் தவிப்பதையும் கூறினாள்.

வெகுநாள் கழித்து மகனை சந்தித்த மகிழ்ச்சியும், அவன் முகம்
கொடுத்து பேச மறுத்ததால் ஏற்பட்ட துக்கமுமாய் அவர்கள் திரும்ப
பாரிஸ் போய் சேர்ந்தார்கள். வரதராஜு வெளிப்பார்வைக்கு எப்போதும்
போல் இருந்தாலும், ஏதோ கவலை அவர் மனசை அரிப்பதை உணர்ந்த
சரளா ஒரு நாள் சொன்னாள்.

''நம் இரண்டுபிள்ளைகளுக்கும் இங்கே தேவையானதை செய்து விட்
டோம். சங்கரனுக்குத் தான் பிறந்ததிலிருந்து எதுவுமே செய்யவில்லை.
இப்போது நாமாக ஏதாவது செய்தாலும் அவன் ஏற்றுக் கொள்ள மாட்
டான். ஆனால் அவன் மனதில் அப்பாவிற்கான ஏக்கம் நிறைய் இருக்கி
றது. எனவே நாளடைவில் அவன் நம்மிடம் வந்து விடுவான். எனக்கு
அந்த நம்பிக்கை இருக்கிறது. இனி நாம் இங்கே இருந்து செய்யப்போ
வது எதுவுமில்லை. பேசாமல் இந்தியா போய் விடலாமே! நீங்களும் அங்
கேயே ஏதாவது தொழில் கூட செய்யலாம்?'' வரதராஜுக்கு அந்த
யோசனை மிகவும் பிடித்திருந்தது. அப்பாவின் ஸ்பின்னிங் மில் அடிம
னதில் இருந்ததால், விட்ட இடத்திலேயே சம்பாதிக்க வேண்டும் என்ற
வேகத்தில் இந்தியா வந்ததும் ஒரு ஸ்பின்னிங் மில்லை தொடங்கினார்.
தன் வயதை மறந்த சுறுசுறுப்புடன் அதில் ஆழ்ந்து போனார். தொழிலில்
ஏற்பட்ட ஈர்ப்பால், ஆரம்பத்தில் சுறுசுறுப்பாய் இருந்த சரளா பிறகு உற்
சாகம் குறைந்து காணப்படுவதையும், சோர்ந்து போவதையும் கூட அவர்
கவனிக்கவில்லை. சரளா படுக்கையில் விழுந்த போது தான் நிலைமை
யின் விபரீதம் புரிந்து அதிர்ந்து போனார்.

''என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். உங்களுடன் நிறைவான
வாழ்க்கை வாழ்ந்து விட்டேன். உங்களையும் இருக்க வேண்டிய இடத்
தில் கொண்டு வந்து சேர்த்துவிட்டேன்'' என்றாள் சரளா புன்னகையுடன்.

வரதராஜு கலக்கத்துடன் தன் டாக்டர் மருமகனை தொடர்பு கொண்
டார். அவருடைய ஆலோசனைப்படி பாரிஸ், லண்டன் எல்லாம்
அழைத்து சென்று காட்டி டாக்டர்கள் கையை விரித்த பின்பு சரளா இந்தி
யாவிற்கே போய் விடலாம் என்று அடம்பிடித்தாள். கணவன், மகன்,
மகள், பேரன், பேத்திகள் அனைவரும் பாரிசில் இருக்கையில் எதற்காக
அங்கே போக வேண்டும் என்று எல்லோரும் கேட்ட போதும் ''கடைசி
நாட்களை இந்தியாவில் தான் கழிப்பேன்'' என்றாள் உறுதியாக. அதன்
படி இந்தியாவிற்கே மறுபடி வரதராஜு அழைத்து வந்தார்.

இறப்பதற்கு சிலநாள் முன்பு சரளா தன் அருகில் அமர்ந்திருந்த கண
வனிடம் சோர்ந்த குரலில் சொன்னாள்.

''நீங்கள் என்னை மணந்து கொள்ளாமல் இருந்திருந்தால் எப்படியும்
லட்சுமியைத் தேடி கண்டுபிடித்திருப்பீர்கள். லட்சுமி, சங்கரனின் சந்தோ
ஷமான வாழ்க்கைக்கு என்னையறியாமல் நானும் தடையாக இருந்திருக்
கிறேன். சங்கரனுக்கு என் மீது கோபம் இல்லை. நான் இறந்து விட்டது
தெரிந்தால் நிச்சயம் துக்கத்திற்கு வருவான். அப்பா மகன் உறவுக்கு அது
ஆரம்பமாக இருக்கும்''.

சரளா இந்தியா வந்ததன் காரணம் புரிந்து வரதராஜுவின் கண்களில்
நீர் வழிந்தது.



அடுத்த சில நாட்களிலேயே சரளா போய் சேர்ந்து விட்டாள். தகவல்
தெரிவித்தும் சங்கரன் வரவில்லை. என்றாவது இணையும் என்ற சரளா
வின் நம்பிக்கையில் ஊசலாடிக் கொண்டிருந்த தகப்பன், மகன் உறவும்
அவளுடனே சோர்ந்து போய் விட்டது. வரதராஜுவும் ஒரு நாள் போய் விடு
வார். அத்துடன் எல்லாம் முடிந்து போகும். கண்களில் துளிர்த்த நீரை
துடைக்கையில் விடிகாலை பால்காரனின் குரல் கேட்டது.

6

ஈச்சனாரி விநாயகர் கோவில் பூஜை முடிந்து
வானதியும், வேணியும் வெளியே வந்தார்கள். அன்று
வானதிக்கு விடுமுறை தினம். வேணி கோவிலுக்கு
போக வேண்டும் என சில வாரங்களாகவே சொல்லிக்
கொண்டிருந்தாள் அன்று வானதி அம்மாவை
அழைத்து வந்திருந்தாள். மழையும் இல்லாமல், வெய்
யிலும் அடிக்காமல் அந்த காலை நேரம் இதமாக இருந்தது.

இன்னும் கான்கிரீட் கலாச்சாரம் முழுதாக ஆக்ரமிக்காததால்
கோவை -பொள்ளாச்சி சாலை இருபுறமும் தென்னை மரங்களுடன் பசு
மையாக இருந்தது. அவ்வப்போது அதன் அமைதியை கிழித்துக் கொண்டு
வண்டிகள் விரைந்தன.

''அம்மா, அப்பா வருவார்களா?'' என்றாள் வானதி.

''அப்பா, பொள்ளாச்சி சந்தைக்கு வந்திருக்கிறார். மலர் மாப்பிள்ளை
யும் கோயம்புத்தூருக்குத் தான் போயிருக்கிறார். அவருக்கு போன் செய்
தால் திரும்பி வருகையில் நம்மை அழைத்துப் போவார்.''

''எதற்கு எல்லோருக்கும் சிரமம்? பேசாமல் நாமே போய் விட்டால்
என்ன?'' என்றாள் வானதி.

''இரு. வருகிறேன்'' என வேணி பூஜைக்கு வாங்கிய மூங்கில் கூடை
களை பூக்கடையில் கொடுத்து விட்டு வரப்போக, வானதி மெதுவாக
நடந்தாள். அன்று கோவில் திருமண மண்டபத்தில் ஏதோ திருமணம்
போலும். வரிசையாய் கார்கள் அணிவகுத்திருந்தன. அவற்றை கடக்கை
யில் ஒரு காரிலிருந்து வெளிப்பட்ட உத்சவ் ''ஹலோ'' என்றான் சிரித்த
படி. வியப்புடன் அவனைப் பார்த்த வானதி, ''கோவிலுக்கு வந்
தீர்களா?'' என்றாள்.

''இல்லை. கல்யாணத்துக்கு வந்தேன்.''

''நீங்க பிரான்சிலிருந்து வந்ததிலிருந்து தொழிற்சாலைக்கு போவதை
விட கல்யாணத்திற்கு தான் அதிகமா போவீங்க போலிருக்கே!''

அவளது வெள்ளை நிற சுடிதாரின் துப்பட்டா காற்றில் படபடப்பதை
யும் அதற்கு போட்டியாக சுருண்ட முடிகள் காற்றில் பறந்து அவள்
முகத்தை மறைப்பதையும் ரசித்தபடி, ''கல்யாணங்களுக்கு போவதால்
தானே எதிர்பாராமல் தேவதைகள் கண்ணில் படுகிறார்கள்'' என்றான் உத்
சவ்.

''தேவதைகளா? யாரது? பாவம் இங்குள்ள விநாயகருக்குக் கூட கல்
யாணம் ஆகவில்லையே!'' என்றாள் வானதி.

''அதனால் என்ன? அவரைத் தேடி தினமும் அழகான பெண்களும்,

அவரது சந்நிதியில் நிதம் ஒரு திருமணமும் நடக்கிறதே!''

''அப்படியானால் உங்கள் கண்ணில்பட்ட தேவதை உங்களைத் தேடி வந்தவளா? கடவுளைத் தேடி வந்தாளா?''

''எனக்காக பிறந்தவள், கடவுளைப் பார்க்க வந்தாள்?''

''இங்கே வந்த இத்தனை பெண்களில் உங்கள் தேவதையை எங்கே போய்த் தேடுவேன்?'' என்றாள் வானதி சுற்றிலும் பார்வையைஓட்டி.

''எங்கேயும் தேட வேண்டாம். உனக்கே அவளைத் தெரியும்?''

''சான்ஸே இல்லை. எனக்கும் உங்களுக்கும் தெரிந்த பெண் என்று யாருமே இல்லை?''

''இருக்கிறாள். அவளை நான் கண்டு கொண்டது போல் நீயும் ஒரு நாள் கண்டு கொள்வாய்.''

''ம்.. என வானதி தலைசாய்த்து யோசித்த பாவனையில் யோசனையின்றி அவன் மனம் கழண்டு கொள்ள, அவளை விட்டு கண்களைத் திருப்ப முடியாமல் நின்றிருந்தவனின் அருகில் வந்தாள் வேணி. திரும்பி அம்மாவைப் பார்த்த வானதி உத்சவ்விற்கு அறிமுகப்படுத்தி வைத்தாள்.

''வணக்கம் ஆன்டி. உங்களை சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சி'' என்றான் உத்சவ் பளீரென்ற சிரிப்புடன்.

ஒரு நிமிடம் திகைத்து பின் புன்னகைத்த வேணி ''உங்களை எங்கோ பார்த்திருக்கிறேன்'' என்றாள் உத்சவ்விடம்.

''ஒருவேளை போன ஜென்மத்து உறவாக இருக்குமோ?'' என்றார் வானதி கிண்டலாக.

''ஏன் இந்த ஜென்மத்திலேயே கூட உறவாகக் கூடும். இல்லையா ஆன்டி?'' என்றான் உத்சவ்.

வேணி புரிந்தும் புரியாமலும் தலையசைக்க, மரியாதை நிமித்தம் மேலும் சில நிமிடங்கள் பேசிவிட்டு இருவரும் கிளம்பினர்.

''எப்படிப் போகப் போகிறீர்கள்?'' என்றான் உத்சவ் அவர்களிடம்.

''பாஸ்கர் மாப்பிள்ளை வருவார்'' என வேணி சொல்ல, ''இல்லை. நாமே போய் விடலாம்'' என்றாள் வானதி.

''நான் உங்களை டிராப் பண்ணுகிறேனே ''என்றான் உத்சவ்.

''எதற்கு வீணாய்? நாங்கள் போய்க் கொள்வோம்'' என்றாள் வானதி.

''இதில் வீணாவது என்ன இருக்கிறது? உங்கள் வீட்டிற்கு வந்தால் ஒரு காபி கொடுக்க மாட்டீர்களா ஆன்டி?'' என்றான் உத்சவ்.

''காபி என்ன, சாப்பாடே சாப்பிடலாம்'' என்றாள் வேணி உற்சாகத்

''பேஷன்ட் என்ன சொன்னார், டாக்டர் ஆபரேஷன் பண்ணாம கோவிச்சண்டு கிளம்பிட்டார்...''

''அப்ப அடுத்த ஜென்மத்தில் சந்திப்போம்... டாக்டர்னு... கிண்டல் அடிச்சார்!''

-ராஜிராதா, பெங்களூர்.





துடன்

''அம்மாவின் சாப்பாட்டை சாப்பிட யாராவது கிடைத்தால் விடவே மாட்டார்கள் ''என்றாள் வானதி தாயை கிண்டலுடன் நோக்கி ''அம்மாகைச் சமையலின் அருமை அவர்களை விட்டுப் பிரிந்து வந்த பின் தான் தெரியும்'' என்றான் உத்சவ் தன் தாயின் நினைவில். ''சரியாக சொன்னீர்கள்'' என வேணி ஆமோதிக்க, ''எனக்கு அந்த அருமை தெரிய சான்ஸே இல்லை. ஏனென்றால் நான் அம்மாவை விட்டுப் பிரியப் போவதே இல்லை'' என்றாள் வானதி.

'வருங்காலத்தைப் பற்றி எதையுமே உறுதியாக சொல்ல முடியாது வானதி ''என்றான் உத்சவ்.

''என்னால் முடியும். ஏனென்றால் என் எதிர்காலம் என் கையில் தான் இருக்கிறது?''

உத்சவ் அவள் கையைப் பார்த்தான். சாமி பிரசாதமாய் கிடைத்த ரோஜா பூவைப் பற்றியிருந்த அவள் விரல்கள் ரோஜாவின் மென்மையுடன் போட்டியிடுவதை கவனித்தவன். ''உன் எதிர்காலம் மிக அழகாக இருக்கிறது'' என்றான் அவளிடம்.

வானதியின் வீட்டுக்கு சென்ற உத்சவ், ஒரு புதிய இடத்தை பார்க்கிற உற்சாகத்துடன் இருந்தான். பச்சை பசேலென்ற வயல்களையும், அவற்றில் தவமிருக்கும் நாரைகளையும் சலசலக்கும் அம்பராம்பாளையம் ஆற்றையும், அதில் வெள்ளைபடகுகளாய் நீந்திவரும் வாத்துக்களையும் பார்க்க பார்க்க அவன் ஆர்வம் அதிகரித்தது. சற்று தொலைவில் ஆற்றின் நடுவே கட்டப்பட்டிருந்த சிறிய பாலத்தில் ஏறி நின்று சிறுவர்கள் ஆற்று நீரில் டைவ் அடிப்பதை தன் செல்போனில் பதிவு செய்தான். சுற்றிக் காட்டும் பொருட்டு கூடவே வந்த வேணியையும், வானதியையும் கூட மறந்துவிட்டு அவன் அந்த இடத்துடன் ஒன்றிப் போனதைப் பார்த்த இரு பெண்களுக்கும் சிரிப்பு வந்தது.

''நீ அவரை வீட்டிற்கு அழைத்து வா வானதி. அதற்குள் நான் சாப்பிட ஏதாவது தயார் செய்து வைக்கிறேன்'' என வேணி சொல்லவும் வானதி உத்சவ்வின் பின்னே சென்றாள்.

புல்மேய்ந்து கொண்டிருந்த பசுக்களையும், ஆடுகளையும் குறுக்கே பாய்ந்தோடிய முயலையும் ரசித்தபடி நடந்தவன் வயலுக்கு நடுவே நிறுத்தியிருந்த பொம்மையைப் பார்த்ததும் அதன் அருகே சென்று தொட்டு பார்த்தான். இந்த பொம்மையை அவன் ஹிட்டான ஒரு தமிழ் படத்தில் சமீபத்தில் தான் பார்த்தான். உள்ளே வைக்கோல் வைத்து தைக்கப்பட்டிருந்த பொம்மையை அவன் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த சமயம் அவனைத் தேடிக் கொண்டு வந்த வானதி ''சாரி சார்'' என்றாள் அவனிடம்.

''எதற்கு?''

''உங்களை தப்பாக நினைத்ததற்கு தூரத்திலிருந்து பார்க்கையில் உங்களுக்கும் இதற்கும் வித்தியாசம் தெரியாததால் உங்களை பொம்மை என்றே நினைத்து விட்டேன்''

''இத்தனை அழகான ஆண்மகன் உனக்கு வெறும் பொம்மையாக தெரிய வேண்டுமென்றால் வானதி, உன் பார்வையில் ஏதோ கோளாறு இருக்கணும்.''

''உண்மையை சொன்னால் என் பார்வையையே குறை சொல்வீர்களா?''

''உண்மையைக் கூட எல்லா இடத்திலும் சொல்லக் கூடாது வானதி. என்ன இருந்தாலும் நான் உன் பாஸ்''

''அது அலுவலகத்தில் மட்டும் தான்'' என்றாள் வானதி லேசான குரலில். ''நைஸ். அப்போ இப்ப நான் யார் வானதி'' அந்த மென்மையான குரலும் கனிவான பார்வையும் தடுமாற வைக்க, வானதிக்கு முதன் முறையாக உடனே பதில் சொல்ல முடியாமல் தயக்கம் ஏற்பட்டது.

''சொல்லு வானதி, நான் யார்?'' என்றான் உத்சவ் விடாமல்.

உங்களுக்கு அம்னிஷியாவா? நீங்க யார்னு என்னை கேட்கிறீர்களே!'' என்றாள் வானதி தன்னை சமாளித்துக் கொண்டு.

''அலுவலகத்துக்கு வெளியே உனக்கு நான் யார்னுதான் கேட்டேன்''

''நாம பிரண்ட்ஸா இருப்போமே!'' என்றாள் வானதி அவனை கேள்வியாய் பார்த்து.

''இருப்போமே!'' என்றான் உத்சவ் அவளைப் போலவே புன்னகைத்து இருவரும் திரும்பி நடக்கையில், ''சுற்றியிருக்கும் பசுமைக்கு நடுவே வெள்ளை நிறத்தில் உங்கள் வீடு அழகாக இருக்கிறது'' என்றான் உத்சவ்.

''எப்போதுமே எங்கள் வீடு நன்றாகத் தான் இருக்கும் என்றாலும் இப்போது மிக அழகாக தென்படுகிறது'' என்றாள் வானதி பெருமையுடன்.

''அதன் காரணம் எனக்குத் தெரியும்?''

''என்ன காரணம்?''

''நான் இங்கே வந்திருப்பதால்?''

''அதெல்லாம் இல்லை. நான் இங்கு பிறந்ததால் தான்''

''ஒருவேளை இரண்டுமே காரணமாய் இருக்கலாம் வானதி. நீ இங்கே பிறந்து, நான் இங்கே வந்து இருவரும் சேர்ந்து வீட்டின் அழகை அதிகமாக்கி விட்டோம் என்று நினைக்கிறேன்.''

''இப்போது அபத்தம்தான் அதிகமானாற் போலிருக்கிறது'' வானதி சொல்ல, இருவரும் சிரித்தபடி வீட்டிற்குள் நுழைந்தனர். சமையலறையில் வேலையாய் இருந்த வேணி திரும்பிப் பார்த்த போது இருவரும் சிரித்த முகத்துடன் வரும் காட்சி அழுத்தமாய் மனதில் பதிந்தது.

வேணி தந்த குழிபணியாரத்தையும், அடையையும் உத்சவ் ரசித்து சாப்பிட்டான்.

''ரொம்ப நல்லா இருக்கு ஆண்டி. எங்கம்மா கூட சூப்பரா சமைப்பாங்க'' என்றான் வேணியிடம்.

''உங்கம்மா உங்களுடன் வரவில்லையா?'' என்றாள் வேணி.

''நீங்க எங்கம்மா வயதில்' இருப்பவர்கள். என்னை வாங்க போங்கன்னு பேசினால் என்னால் சகஜமாக பேச முடியவில்லை. என்னை பெயர் சொல்லி கூப்பிடுங்கள் ஆண்டி'' என்றான் உத்சவ்.

''சரி தம்பி'' என்றாள் வேணி உடனடியாக.

ஒருமையிலும் பண்பாடு மாறாத அந்த கிராமியத்தனம் உத்சவ்வை வெகுவாக கவர்ந்தது.



வேணியின் கேள்வி நினைவு வந்தவனாக ''அம்மா என்னுடன் வரவில்லை. ஆண்டி. இங்கே தாத்தா, அத்தை மாமாவுடன் நான் தங்கியிருப்பதால் அப்பாவைப் பார்த்துக் கொள்ளவென்று அங்கேயே தங்கிவிட்டார்கள்'' என்றான்.

உத்சவ்விற்கு உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்? அம்மா வேலை பார்க்கிறார்களா? மாமாவுக்கு குழந்தைகள் இருக்கிறதா என்ற வேணியின் பொதுவான கேள்விகளுக்கு பதிலளித்து விட்டு கிளம்பினான். அவன் கிளம்பி வெளியே வருகையில் சந்தையிலிருந்து திரும்பி வந்த சங்கரன் தன் வீட்டிலிருந்து வெளியே வரும் புதிய விருந்தாளியை வியப்புடன் பார்த்தார்.

வானதி அறிமுகப்படுத்தியதும் ''அப்படியா? நீங்கள் வீட்டிற்கு வந்ததில் ரொம்ப சந்தோஷம்'' என்றார் முகம் மலர்ந்து.

நல்ல உயரமும் களையான முகமுமாய் இயல்பாகவே பெரிய மனிதத்தனத்துடன் காணப்பட்ட சங்கரனிடம் உத்சவ்விற்கு சட்டென்று ஒரு மரியாதை ஏற்பட்டது.

''வீட்டு மனிதர்களில் உங்களை மட்டும் சந்திக்கவில்லையே என்று நினைத்துக் கொண்டிருந்தேன். நல்லவேளையாய் இப்போது பார்க்க முடிந்தது. நான் கிளம்புகிறேன். அங்கிள். ஆண்டி, வானதியுடன் ஒரு நாள் நீங்கள் எங்கள் வீட்டிற்கு வரவேண்டும்'' என்ற அழைப்புடன் உத்சவ் கிளம்பிச் சென்றான்.

''ரொம்ப நல்ல பையனாக தெரிகிறான்'' என்றார் சங்கரன்.

''ஆமாம். கொஞ்சமும் ஆடம்பரமே கிடையாது'' என்றாள் வேணி.

''வெளிநாட்டில் வளர்ந்தவர்கள் எல்லோரும் அப்படித்தான் இருப்பார்கள். அம்மா. அங்கெல்லாம் என்ன பிடித்தாலும், எந்த வேலை செய்தாலும் எல்லோருக்கும் ஒரே மரியாதைதான். பாகுபாடே கிடையாது'' என்றாள் வானதி.

''இருந்தாலும் எல்லோரும் அப்படி இருப்பதில்லை தெரியுமா? போன வருடம் அமெரிக்கா போய் படித்து விட்டு வந்தானே நம் கண்ணப்பனின் மகன். ஒரு வருடம் அங்கே போனதற்கே எப்படி அலட்டிக் கொண்டான் தெரியுமா? நம்ம முத்துகவுண்டரின் தம்பி மகன் லண்டனிலிருந்து நாலைந்து வருடங்களுக்கு ஒருமுறை வரும்போதெல்லாம் இந்தியா ஒரே தூசு, குப்பை வெயில் என்று ஆர்ப்பாட்டம் செய்வான். இந்த பிள்ளை வெளிநாட்டிலேயே பிறந்து வளர்ந்திருந்தாலும் பழக்கமற்ற இடத்தில் முணுமுணுப்பின்றி பொருந்திக் கொண்டதை நினைத்தால் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது''

அம்மாவுக்கு உத்சவ்வை பிடித்து விட்டது என்பது வானதிக்கு ஒரு புறம் மகிழ்ச்சியாக இருந்தாலும் வேண்டுமென்றே வேணியை சீண்டினாள். ''அப்பா, அம்மாவிற்கு ஒருவரை பிடித்து விட்டால் போதும். அவர்களை பாராட்ட இல்லாத காரணங்களை தேடிக் கண்டுபிடிப்பார்கள்.'' என்றாள் தன் அப்பாவிடம்.

''ஆமாம் நீ சொல்வது உண்மைதான் வானதி'' என்ற சங்கரன் ''ஆனால் இரண்டு நாள் முன்பு உன்னைக் கூட எதற்காகவோ புகழ்ந்து கொண்டிருந்தாள் போலிருக்கிறதே!'' என்றாள் விளையாட்டாக.

''அப்பா''.. என சிணுங்கிய படி செல்லமாக அவர் தோளில் குத்தினாள் வானதி.

உத்சவ் மெலிதாக விசிலடித்தபடி காரை போர்டிக் கோவில் நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்தான். உள்ளே பெரிய குரலில் சண்டையிடும் சத்தம் வாயில் வரை கேட்டது.

''உங்களைப் போல சாமர்த்தியமில்லாத மனுஷனை நான் பார்த்ததே இல்லை. என் அக்கா, அண்ணன் எல்லோரும் எப்படி இருக்கிறார்கள்! என் தலையெழுத்து உங்களைக் கட்டிக் கொண்டு அழுகிறேன்'' சுதாவின் உரத்தகுரல் தெளிவாக கேட்டது.

''என்னை என்ன செய்ய சொல்கிறாய்? இப்போது உன்னை என்ன சொல்லி விட்டேன் நான்?'' மோகனின் குரல் கெஞ்சியது.

''ஓகோ, என்னை எதுவும் சொல்வதற்கு வாய் இருக்கிறதா உங்களுக்கு வெளிநாட்டில் கோடீஸ்வரியாய் வாழப்போவதாக நினைத்து திருமணம் செய்து கொண்டு கடைசியில் சொந்த நாட்டில் வேலைக்காரியாய் நிற்கிறேன்.''

''கோடீஸ்வரர்களாகத்தானே வாழ்ந்தோம்! ஆடம்பரத்திற்காக செய்த வீண் செலவுகளை செய்யாமல் இருந்திருந்தாலே இப்போதும் வசதியாக வாழ்ந்திருக்கலாம்.''

''யார் நானா வீண் செலவு செய்தேனா? நான் செய்தேன்?'' டமாரென்று கீழே ஏதோ விழுந்து உடையும் சத்தம் கேட்டது. அதை தொடர்ந்து பிரீத்தியின் குரலும் கேட்டது. ''இது என்ன உங்களோடு பெரிய தொல்லையாய்ப் போய் விட்டது. ஒரு விடுமுறை நாளில் கூட நிம்மதியாய் தூங்க விட மாட்டீர்களா?''

''இங்கே வாழ்க்கையே போச்சுன்னு கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். உனக்கு தூக்கம் போனது தான் பெரிய விஷயமா?''

''சே! உங்களைப் போல பொறுப்பில்லாத பெற்றோரை நான் பார்த்ததே இல்லை''

''பொறுப்பைப் பற்றி நீ பேசுகிறாயா? மகளாய் இதுவரை எப்படி பொறுப்பாய் நடந்து கொண்டாய் என்று சொல் பார்க்கலாம்!''

''என்னைப் பற்றி நீங்கள் பேச வேண்டியதில்லை''

''பேசத்தான் செய்வேன். எனக்கு அதற்கு உரிமையிருக்கிறது''

''பெற்ற குழந்தையை வசதியாக வாழ வைக்க முடியாமல் குறுக்கு வழி தேடுபவர்களுக்கு எதையும் சொல்ல உரிமையில்லை.''

''ஷட்டப் பிரீத்தி..'' என்றாள் சுதா மூச்சுவாங்க.

''இவர் போலி ஆர்.டி.ஓ.வா எப்படி சொல்றே...?''

''கார் லைசென்ஸ்க்கு 16 போட்டுக் காண்பிங்கன்னு சொல்றாரே''

-ராஜிராதா, பெங்களூர்.





''அப்பா வீட்டில் தான் இருக்கிறார்'' என்றான் மோகன் அவர்களை அடக்கும் வழி தெரியாமல்.

''தெரியட்டுமே, இந்த வீட்டில் நடப்பது எல்லோருக்கும் தெரியட்டும்'' என பிரீத்தி கத்த, ''வாயை மூடு'' என சுதா அவளை விட உரத்த குரலில் கத்த, வீடு ஒரே இரைச்சலாய் இருந்தது.

ஹாலில் சூனியத்தை வெறித்த படி அமர்ந்திருந்த வரதராஜுவைப் பார்க்க உத்சவ்விற்கு பாவமாக இருந்தது. அவர் அருகே சென்று ''தாத்தா'' என்றான் அவர் தோள் மீது கை வைத்து.

வரதராஜு முகத்தில் தெரிந்த வேதனையை மறைத்துக் கொண்டு பேரனைப் பார்த்துப் புன்னகைத்தார். ''காலையில் கட்டாயப்படுத்தி திருமணத்திற்கு அனுப்பி வைத்தேன். மாலையில் திரும்பி வந்திருக்கிறாய். இத்தனை நேரம் திருமண வீட்டிலா இருந்தாய்?'' என்றார் வியப்புடன்.

''கோவிலில் வானதியையும், அவள் அம்மாவையும் பார்த்தேன் தாத்தா. அவர்களை அவர்கள் வீட்டில் டிராப் பண்ணிவிட்டு பேக்டரிக்கு போய் பார்த்து விட்டு வருகிறேன்'' என்ற உத்சவ் ஒரு நிமிட யோசனைக்கு பின் சொன்னான். ''தாத்தா இந்த வீட்டிற்குள் நுழைந்ததும் ஏனோ அவர்கள் வீடு தான் நினைவு வந்தது. ஒருவருக்கொருவர் அன்பும் ஆதரவுமாக மகிழ்ச்சி நிறைந்திருக்கும் குடும்பம் அது. வெளிநாடுகளில் இருப்பது போல் கட்டித்தழுவி வார்த்தைகளால் பிரியத்தை வெளிப்படுத்தவில்லை என்றபோதும் அவர்களுக்கிடையே நிலவும் பரஸ்பர அன்பு பார்த்தவுடன் மனதை நிறைக்கிறது?''

வரதராஜுடம் மெல்லிய பெருமூச்சு எழுந்தது. சில வாரம் முன்பு சொக்கலிங்கம் வீட்டு திருமணத்தில் வானதியையும் அவள் அக்காவையும் பார்த்த போதே நினைத்தேன். நல்ல குடும்பம் அமைந்து அதில் எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ்வதைப் பார்க்கும் பாக்கியம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அந்த வகையில் வானதியின் வீட்டு பெரியவர்கள் அதிர்ஷ்டசாலிகள்'' என் கையில் அவர் குரல் தழுதழுத்தது.

''தாத்தா, அம்மாவும், அப்பாவும் உங்களுக்காகத்தான் என்னை இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள். நீங்கள் எதற்காகவும் வருந்தக் கூடாது'' என்றான் உத்சவ் அவருக்கு ஆறுதலாக.

''நீங்கள் மூவரும் தான் எனக்கு ஒரே ஆறுதல்'' என்றார் வரதராஜு.

உத்சவ் பிறகு தொழிலைப் பற்றி பேச ஆரம்பிக்கவும், வரதராஜும் இயல்பு நிலைக்கு வர ஆரம்பித்தார். தாத்தாவிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு உத்சவ் எழுந்து கொள்கையில் நினைவு வந்தவராக கேட்டார்.

''வானதியின் பெற்றோர் எங்கேயிருக்கிறார்கள்? என்ன செய்கிறார்கள்? அவர்கள் பெயர் என்ன?'' உத்சவ் பதில் பேசுமுன் செல்போன் சிணுங்கியது. ''உத்சவ் எப்படிடா இருக்க?'' என்றாள் மைதிலி போனில்

''நன்றாக இருக்கிறேன். நீங்க?''

''உனக்கென்னப்பா, நீ நினைத்ததெல்லாம் நிறைவேற்றி வைக்கும் பெற்றோர் இருக்கிறார்கள். நன்றாக இருக்கிறாய். அதே போல என் பேச்சை கேட்டு நடக்கும் மகன் கிடைத்திருந்தால் நானும் கவலைப்படாமல் இருந்திருக்கலாம்.''

''அடடா, நீங்கள் இப்படி கவலைப்படும் அளவிற்கு உங்கள் மகன்

என்ன செய்தான்? தினமும் குடித்து விட்டு ரகளை செய்கிறானா? ஒழுங் காக படிக்கவில்லையா? அல்லது நீ சம்பாதித்த பணத்தை எல்லாம் செல வழித்து விட்டு உங்களை கைவிட்டு விட்டானா?'' ''அதெல்லாம் செய் திருந்தால் கூட பரவாயில்லையே! பெற்ற மகன் என்பதற்காக சகித்துக் கொண்டிருப்பேன். என் மகன் அதை விட மோசம்?''

''அத்தனை மோசமாய் என்ன தவறு செய்தான்?''

''திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்கிறான்''

''இது ஒரு தவறா?''

''இல்லையா பின்னே, வயதான காலத்தில் எங்களை தாத்தா, பாட்டி என்று அழைத்து விளையாட ஒரு குழந்தை வேண்டாமா?''

''மம்மி, அப்படி என்ன வயதாகி விட்டது உங்களுக்கு? திருமணமே வேண்டாம் என்று சொல்லவில்லையே. சற்று அவகாசம் கேட்டேன். அவ் வளவு தான்.''

''நீ போனவேலை கிட்டத்தட்ட முடிந்துவிட்டதாக தாத்தா சொன் னார். நான் ஆன் வீட்டில் பேசட்டுமா? நீ வந்ததும் திருமணம் வைத்துக் கொள்ள சரியாக இருக்கும்?''

''அம்மா நான் ஏற்கனவே சொன்ன மாதிரி ஆனை என்னால் திரும ணம் செய்து கொள்ள முடியாது''.

''சரி உன் விருப்பம். நாம் வேறு இடம் பார்க்கலாம்'' என்றாள் மைதிலி.

''யாரையும் பார்க்க வேண்டாம். நானாக சொல்வேன். பொறுத்திருங் கள்.''

''அப்படியானால் பெண்ணை நீயே பார்த்துவிட்டாயா?'' என்றாள் மைதிலி ஆவலுடன்.

''நான்தான் பொறுத்திருக்க சொன்னேனே'' என்றான் உத்சவ் சிரித் தபடி.

''ஏய்! என்னவோ விஷயம் இருக்கிறது. என் பிள்ளையை எனக்கு தெரியாதா? சொல்லுடா'' என்றாள் மைதிலி கெஞ்சலாக.

''சரி, உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள். டாடியிடம் நாளை பேசு வதாக சொல்லுங்கள்'' என்றான் உத்சவ்.

''உத்சவ்... எனக்கு பதில் சொல்லிவிட்டு போனை வை'' என்ற மைதி லிக்கு பதிலாக சிரிப்பை தந்துவிட்டு போனை அணைத்தான் உத்சவ். அது வரை அவனையே கவனித்திருந்த வரதராஜு ''உன் அம்மா என்ன சொல் கிறாள்?'' என்றார் பேரனிடம்.

''வேறென்ன சொல்வார்கள். கல்யாணம் பண்ணிக்கோ என்பதைத் தவிர?''

''பாவம், மைதிலிக்கு ஒரு நல்ல பதிலாக சொல்லு உத்சவ்?''

''சொல்லுகிறேன் தாத்தா'' என சிரித்தபடி தன் அறைக்கு வந்து கட் டிலில் விழுந்தவனுக்கு வானதியின் நினைவு வந்தது. சிடிபிளேயரை ஒட விட்டான். புல்லாங்குழலின் மெல்லிய இசை அறையெங்கும் பரவியது. அதில் ஆழ்ந்து கண்கள் தானாய் மூடின. மூடிய கண்களுக்குள் பச்சைவ யல்கள் மரகதப் போர்வை விரித்தன. வெள்ளை நாரைகள் கூட்டத்திலி ருந்து இறங்கி வந்தவளைப் போல் ஒரு பெண் வயல்களுக்கு நடுவே தெரிந்



தாள். நாரைக் கூட்டங்களை துரத்திக் கொண்டு ஓடினாள். ஆற்றின் நடுவே படகில் மிதந்து சென்றாள். துள்ளிக்குதிக்கும் மீன்களை கையில் பிடித்து மீண்டும் ஆற்றில் விட்டாள். நெற்பயிர்களை கொத்தவந்த பச்சைகிளி ஒன்று பறந்து வந்து அவள் தோள்களில் அமர, தன் சிவந்த இதழ்களை குவித்து அதனுடன் பேசினாள்.

அவள் நடந்து வந்த பாதையோரம் இருந்த சாமந்திப் பூக்கள் அவளைக் கண்ட மகிழ்ச்சியில் தலையசைத்து வரவேற்க அவற்றை தன் மென்கரங்களால் வருடினாள். பூக்களோடு தெரிந்த அவள் முகத்தை பூவென்று நினைத்தோ என்னவோ ஒரு பட்டாம்பூச்சி அவள் மீது அமர அவள் கலகலவென சிரித்தபடி திரும்பினாள். அவள் முகம் தெளிவாக தெரிந்தது.

''வானதி!வானதியா இந்த தேவதை?

உத்சவ் எழுந்து அவளிடம் சென்றான். அவள் திரும்பிப் பார்க்காமல் வேகமாக சென்றாள். அவன் அவள் பின்னால் ஓடினான். அவள் மேகங் களிடைய மறையத் தொடங்கவும், உத்சவ் வேகத்துடன் அவள் கைக ளைப் பற்றி இழுத்தான்.

பட்டென்று ஒரு சத்தம் கேட்டது.

உத்சவ் வானதியின் முகத்தைப் பார்க்க முயற்சிக்க, தொடர்ந்து பட படவென்று ஓசை கேட்டது. உத்சவ் லேசாக அசைந்தான். விடாது சத்தம் கேட்கவும் கண்விழித்து சுற்றிலும் பார்த்தான்.

வயலும், காற்றும், பூக்களும் தேவதையும் எங்கே? எப்படி இந்த அறைக்குள் வந்தான்?

தொடர்ந்து கதவைத் தட்டும் ஓசையும் யாரோ அவனை கூப்பிடுவ தும் கேட்டது. அத்தனையும் கனவு என்று நம்பமாட்டாத வியப்புடன் எழுந்துபோய் கதவைத் திறந்தான். மோகன் வெளியே நின்று கொண்டி ருந்தான்.

''நல்ல தூக்கமா? வெகுநேரமாக கூப்பிடுகிறேன்.''

''ஆமாம், தூங்கிவிட்டேன் போலும்.''

''சாப்பிட வருகிறாயா? அப்பா கூட உனக்காக காத்திருக்கிறார்.''

''நான் சாப்பிட்டுவிட்டேன் மாமா. நீங்களும் தாத்தாவும் சாப்பிடுங் கள்'' என்றதும் மோகன் கீழே இறங்கிச் சென்றான். மீண்டும் கட்டிலில் வந்து அமர்ந்த உத்சவ்வை இதுவரை உணர்ந்தறியாத புதிய உணர் வொன்று ஆட்கொண்டது.

மழை விடாது பெய்து கொண்டிருந்தது. கேரளாவின் எல்லையை ஒட்டி இருக்கும் ஊர் என்பதால் கேரளத்து பருவ மழையும், தமிழ்நாட் டின் மழை பருவத்திலும் மழை பொழிந்து வருடத்தின் பெரும்பகுதி நாட் கள் ஈரமாகவே இருக்கும். சில சமயம் வாரக்கணக்கில் மழைபெய்து வீட்டு சுவர்களில் எல்லாம் பாசிபடர்ந்திருக்கும்.

நல்ல வேளையாக அறுவடையை முடித்து நெல்லை விற்று காசாக் கிக் கொண்ட தெம்பில் சங்கரன் உற்சாகமாகவே மழையை வேடிக்கை பார்த்தார். பள்ளி விடுமுறையில் தாத்தா வீட்டிற்கு வந்திருந்த மலர்க்கொ டியின் மகனுடன் வானதி காகிதத்தில் கப்பல் செய்து மிதக்க விட்டுக் கொண்டிருந்தாள்.

வேக வைத்த சூடான சோளக்கதிர்களை மகளிடமும் பேரனிடமும் கொடுத்துவிட்டு கணவனிடம் தந்த வேணி சற்றுதள்ளி அமர்ந்து சோளம ணிகளை உதிர்க்கலானாள்.

''வேணி மாட்டை பிடிச்சி கட்டிட்டியா?'' என்றார் சங்கரன் நினைவு வந்தவராக.

''ஓ! கட்டிட்டேனே!''

''அய்யாசாமி பால்பணம் கொண்டு வந்து கொடுத்தானா?''

''கொடுத்துட்டான்''

''முத்துக்கவுண்டருக்கு வாதமாம். நடக்க முடியலையாம். போய் பார்த்தியா?''

''தினமும் பாத்துட்டுதான் இருக்கேன்''

''பசங்க அவரை சரியா கவனிக்கறதில்லைன்னுதான் நமக்கு தெரி யுமே! அவருக்கு டீயோ சாப்பாடோ நேரத்துக்கு கொடுத்தனுப்பு. கூடப் பிறக்காட்டியும் கவுண்டருக்கு என் மீது பாசம் அதிகம்?''

''அதெல்லாம் தெரியாமயா உங்களோடு இத்தனை வருஷம் குடும் பம் நடத்தறேன். நீங்க சொல்றதுக்கு முன்னாடியே சாப்பாடெல்லாம் கொடுத்தனுப்பிட்டேன். ஆனா ஒரு விஷயத்திற்கு மட்டும் பதில் சொல் லுங்க.''

''என்ன விஷயம்?''

''ஊர் விஷயம் எல்லாம் நினைவிருக்கு. நம்ம வீட்ல வயசுக்கு வந்த பொண்ணு இருக்கே, அதுக்கு எப்ப கல்யாணம் பண்ணப்போறீங்க?''

''என்னடி புதுசா கேட்கற. அன்னிக்குதானே வானதி கொஞ்சநாள் வேலை பாத்துட்டு கல்யாணம் பண்ணிக்கறேன்னதுக்கு சரின்னு சொன் னோம்.''

''அதுக்காக, அவள் தலையாட்டின உடனே மாப்பிள்ளை கிடைத்து விடுவானா? இப்போதிலிருந்து பார்த்தால் தானே முடியும்?''

''சரி சரி பார்க்கலாம்''

''என்ன இப்படி அலட்சியமாய் சொல்கிறீர்கள்?'' என்றாள் வேணி குறையுடன்.

''என் பெண் வாழ்க்கை எனக்கு அலட்சியமாய் இருக்குமா வேணி? நாளைக்கே தரகரைப் போய் பார்க்கிறேன். சரியா?''

சரிதான்? என்ற வேணி பிறகு சொன்னாள். ''அன்னிக்கு வந்த அந்த பையன் மாதிரி யதார்த்தமா கர்வமில்லாம பழகற பையனா பாருங்க?''

''எந்த பையன்?''

''உத்சவ்''

''அத்தனை பெரிய இடமா?'' என்றார் சங்கரன் வியப்புடன்.

''நான் வசதியை சொல்லவில்லை. தோற்றத்தையும், குணத்தையும் தான் சொன்னேன். பெரிய இடம் என்னங்க பெரிய் இடம்! நம்ம வானதி யின் அழகும் சமர்த்தும் யாருக்கு வரும்?''

''உன் கற்பனை ரொம்ப உயரத்தில் பறக்கிறது வேணி'' என்ற சங்க ரன் ''வானதி அந்த பையனைப் பற்றி உன்னிடம் எதாவது சொன்னாளா?'' என்றார் யோசனையுடன்.

''சேச்சே! அவள் எதுவும் சொல்லவில்லை. திருமணவயதில் பெண்



உள்ளவர்களுக்கு பொருத்தமான பையனைப் பார்த்தால் வரும் எண்ணம் தான் எனக்கு?''

''அதானே பார்த்தேன்! பொண்ணுதான் ஆசை வைச்சிட்டா ளோன்னு ஒரு நிமிஷம் பயந்துபோனேன்?''

''எதுக்கு பயப்படணும்?''

''மலருக்கு மாப்பிள்ளை பார்க்கும் போது நாம் பட்ட கஷ்டம் நினை
விருக்கிறதா? அவ்வளவு ஏன் நம் திருமணத்தின் போதே நான் ஓரளவு
வசதியாக இருந்தும் என் அம்மாவை காரணம் காட்டி யாரும் பெண்
கொடுக்க முன்வரவில்லையே! கடைசியாய் நான்கு பெண்களை பெற்று
கரையேற்ற கஷ்டப்பட்டதால் உன் அப்பாதான் சம்மதித்தார்.
மலருக்கு திருமணம் செய்ய முடிவெடுத்த போதும் உன் அம்மாவின்
ஜாதியில் பார்க்கிறாயா? உன் மனைவியின் ஜாதியில் பார்க்கிறாயா? உன்
அப்பா எந்த இனம் தெரியுமா என்றெல்லாம் கேலி பேசவே செய்தார்
கள். கடைசியில் நாமே எதிர்பாராமல் பாஸ்கரன் மலரை ஒரு திருமணத்
தில் பார்த்ததாக சொல்லி பெண் கேட்டு வந்தார். அப்போதும் அவர் பெற்
றோர் முதலில் எதிர்த்து விட்டு பிறகு ஆண் பிள்ளை இல்லா சொத்தில் சரி
பாதி மலருக்கு வரும் என்பதால் தானே சம்மதித்தார்கள். ஏதோ நம்
அதிர்ஷ்டம் பாஸ்கரன் நல்லவனாக இருந்ததுதான். வானதிக்கும் பாஸ்க
ரனைப் போலவே குணமுள்ள படித்த மாப்பிள்ளையாய் தேடுவோம்''
என்றார் சங்கரன்.

உள்ளே போகும்போது எதேச்சையாக தன் பெயர் காதில் விழவே அங்கே நின்றுவிட்டிருந்த வானதி அந்த இடத்தை விட்டு அகன்றாள். அப்பா சொன்ன செய்தி அவளுக்கு புதிதாக இருந்தது.

## 7

**வ**ரதராஜு மாலை காபிக்கு பிறகு பால்கனியில் வந்து அமர்ந்தார். கோவிலுக்கும், காய் கறி வாங்கவும் சலசலத்தபடி செல்லும் பெண்களை யும், பந்து விளையாட்டில் மும்மரமாய் ஈடுபட்டு பந்து அடுத்த வீட்டு ஜன்னலில் பட்டதும் ஓடி ஒளியும் பையன்களையும், அலுவலகம் முடிந்த களைப்புடன் வீடு திரும்பும் ஆண்களையும் சுவாரஸ்யத்துடன வேடிக்கைப் பார்த்தார். இத்தனை வருடங்களில் இந்த நகரத்தின் அன்றாட அலுவல்களில் பெரிய மாற்றம் எதுவுமில்லை என்று தோன்றியது.

காம்பவுண்டு சுவர் வளைந்து தெருவை மறைக்கும் இடத்தில் ஒரு ஆணும், பெண்ணும் பள்ளி சீருடையில் வெகுநேரமாய் பேசி சிரிப்பதைப் பார்த்தவர், காலசக்கரம் எப்பவும் ஒரே மாதிரித்தான் சுழல்கிறது என்றார் தமக்குள். யோசனையில் மூழ்கியிருந்தவர் எதிரே நிழலாடுவதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தார்.

மோகன் நின்றிருந்தான். சற்று தள்ளி மரியாதையுடன் புடவையை இழுத்து விட்டபடி சுதாவும் நிற்பதைப் பார்த்தவர், ஏதோ விஷயம் பெரி தாக இருக்கும் போலிருக்கு என்ற நினைவுடன் தலையசைத்தார்.

''அப்பா உங்ககிட்ட ஒரு விஷயம் பேசணும்?'' என்றான் மோகன்.

தன் வழக்கமான தயக்கத்துடன்.

''தொழிற்சாலை விஷயம்தானே, நான் முதலில் சொன்ன முடிவில் மாற்றம் எதுவுமில்லை'' என்றார் வரதராஜு.

''மாற்றம் செய்யத் தேவையில்லை'' என்றான் மோகன் அவசரமாக ''உத்சவ் யார், என் அக்கா மகன்தானே! என்னிடமிருந்தால் என்ன? அவனிடமிருந்தால் என்ன, எல்லாம் ஒன்றுதான்?''

''என்னப்பா இது திடீர் ஞானோதயம்?'' என்றார் வரதராஜு கிண்டலாக. மோகன் திரும்பி சுதாவைப் பார்க்க, சுதா சொன்னாள்.

''நாங்கள் பிரீத்தி விஷயமாய் உங்களிடம் பேச வந்தோம். அவளுக்கும் திருமண வயது வந்துவிட்டது. சீக்கிரமாக செய்துவிட்டால் நன்றாக இருக்கும்''

''நீ சொல்வது சரிதான். இப்போதுதான் பொறுப்புள்ள பெற்றோராய் யோசித்திருக்கிறீர்கள். நம் உறவிலும், நண்பர்களிடையேயும் சொல்லி வைக்கலாம். பிரீத்தி என்ன சொல்கிறாள்?'' என்றார் வரதராஜு.

''பெரியவர்கள் சொன்னால் அவள் எப்படி கேட்காமலிருப்பாள்?'' என்றாள் சுதா பவிசாக.

''அப்படியா?'' என்றார் வரதராஜு. குரலின் கேலியை உணர்ந்து சுதாவின் முகம் சிவந்து போக மோகன் அவசரமாக குறுக்கிட்டான்.

''வீட்டிலேயே மாப்பிள்ளை இருக்கும் போது எதற்கு வேறு இடத்தில் தேட வேண்டும்?''

''வீட்டிலா யார்?'' என்றார் வரதராஜு புரியாமல்.

''நம் உத்சவ்விற்கும் பிரீத்திற்கும் திருமணம் செய்யக் கூடிய முறை தானே?''

''நீ எந்த காலத்தில் இருக்கிறாய் மோகன்? உறவுமுறை திருமணங்கள் எல்லாம் தடம்மாறி ரொம்ப நாள் ஆகிறது?''

''இருக்கலாம். ஆனால் இப்போதும் சில குடும்பங்களில் நடக்கத் தானே செய்கிறது?''

''ஒருவேளை மணமக்கள் விரும்பினால் நடக்கலாம். நான் அறிந்த வரை உத்சவ்விற்கோ பிரீத்திக்கோ அப்படிப்பட்ட விருப்பம் எதுவும் இருப்பதாக தெரியவில்லை.''

''திருமணம் நடந்தால் விருப்பம் தானாய் வரும். நம்முடைய கலாச்சாரமே அப்படித்தானே'' என்றாள் சுதா.

''ஆனால் உத்சவ் நம் கலாச்சாரத்தில் வளர்ந்தவன் அல்ல'' என்றார் வரதராஜு.

பிரீத்தி கூடத்தான் பாரிசிலேயே பிறந்து வளர்ந்தவள். அதனால் இருவரின் பழக்க வழக்கங்களும் நன்றாக ஒத்துப் போகும்'' என்றாள் சுதா விடாமல்.

வரதராஜு வெகுநேரம் யோசனையில் ஆழ்ந்தார். உத்சவ் பிரீத்தியை மணந்து கொள்வானா என்பதை அவரால் நம்ப முடியவில்லை. அதே சமயம் மனதின் ஒரு ஓரத்தில் இது நடந்தால் நல்லது என்றும் தோன்றியது. மோகனின் பொறுப்பற்ற தனத்தாலும் சுதாவின் பொறுமையின்மையாலும் சிதைந்து கிடக்கும் இந்த குடும்பத்திற்கு உத்சவ் பெரிய பக்கபலமாய் இருப்பான். தொழிற்சாலை சீரடைந்தது போல் குடும்பமும் சீரடைந்



துவிடும். வீட்டில் அமைதி நிலவும், முக்கியமாய் அவர் பாடுபட்டு சம்பாதித்த பணம் அவர்கள் குடும்பத்திற்குள்ளேயே இருக்கும். மைதிலியோ ராமச்சந்திரனோ வரவேற்பார்களோ இல்லையோ, மறுப்பு சொல்லப் போவதில்லை. தனக்குள் ஏதோ கணக்கிட்டார். பேரனின் துணிச்சலிலும், விடாமுயற்சியுடன் சாதிக்கும் குணத்திலும் எப்போதும் அவருக்கிருக்கும் பெருமை சற்றே பயங்கொள்ள வைத்தது. எனவே இருவரிடமும் பொதுவாக சொன்னார்.

''உத்சவ் தன்னிச்சையாய் செயல்பட்டு பழகியவன். எந்த விஷயமானாலும் தகவல் தெரிவிப்பானே தவிர அனுமதி கேட்டதில்லை. நேர்மையானவன் என்பதால் இதுவரை அவனது சுதந்திரமனப்பான்மைக்கு அவன் பெற்றோர் குறுக்கே நின்றதில்லை. என் மீது பாசம் உள்ளவன் தான் என்றாலும் நான் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்வான் என்று எதிர்பார்க்க முடியாது. அவன் சரி சொன்னால் உடனே திருமணத்திற்கு ஏற்பாடு செய்யலாம். எந்த வகையிலாவது உங்கள் குடும்பம் தழைப்பது எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால் அவன் முடியாது என்றால் அதன்பிறகு அவனை சம்மதிக்க வைக்க யாராலும் முடியாது''

சுதா அருகில் வந்து மாமனாரின் காலருகே அமர்ந்தாள். ''மாமா எங்களுக்கு உங்களை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்? பிரீத்தியை எங்கோ ஓரிடத்தில் திருமணம் செய்து கொடுத்துவிட்டு கவலையுடன் காலத்தை கழிப்பதை விட நாம் அனைவரும் ஒரே குடும்பமாய் இருப்பது எத்தனை மகிழ்ச்சியாய் இருக்கும்? உங்களுக்கு வயதான காலத்தில் மகனது குடும்பம், மகள் குடும்பம், பேரன் பேத்தி அவர்களின் குழந்தைகள் என ஒரு கூட்டமே அருகில் இருக்கும்'' என்றாள் நயந்த குரலில்.

''நான் வாழ்ந்து முடித்தவன். எனக்காக வாழவேண்டியவர்கள் வாழ்நாள் முழுவதும் சிரமப்படும்படி நான் நிர்பந்திக்க மாட்டேன்'' என்றார் வரதராஜு.

மனம் கடுத்ததை வெளியே காண்பிக்காமல் ''எதற்கு சிரமப்படணும்? பிரீத்திக்கோ உத்சவ்விற்கோ அழகிலும் அந்தஸ்த்திலும் எந்த குறையும் இல்லை'' என்றாள் சுதா.

''மகிழ்ச்சியான இல்வாழ்க்கைக்கு அடிப்படை எது தெரியுமா? இரு மனங்களின் பிரியமும், அதன் அடிப்படையில் உண்டாகும் சகிப்புத்தன்

''அவளுக்கு லவ் லெட்டர் எழுதிக் கொடுத்தியே என்னடா ஆச்சு?''

''உன் கையெழுத்து சூப்பரா இருக்கு. எனக்கும் என் லவ்வருக்கும் நோட்ஸ் எழுதித்தா முடியுமான்னு கேக்கறாடா!''

-முத்து ஆனந்த், வேலூர்.



மையும் விட்டுக் கொடுத்தலும் தான்'' வரதராஜின் பார்வை மோகனை துளைக்க, மோகன் பதில் பேசமுடியாமல் தலைகுனிந்தான்.

''கிழடுக்கு வயசானாலும் திமிர் போகல'' என வாய்க்குள் முணுமுணுத்த சுதா ''உங்களைத்தான் மாமா நம்பியிருக்கோம். நடக்க வேண்டிய நல்லகாரியத்தை நீங்கதான் முன்னிருந்து நடத்தி வைக்கணும்'' என்றாள் வாய்விட்டு.

தொழிற்சாலையில் இரவு ஷிப்ட் வேலை அப்போதுதான் தொடங்கியிருந்தது. ஒரு வாரமாக மார்க்கெட்டிங் மேனேஜருடன் அலைந்து கொண்டிருந்த உத்சவ் அப்போதுதான் பார்த்துவிட்டுப் போக வந்திருந்தான். வராண்டாவில் தொழிலாளர்கள் கும்பலாய் நின்றிருந்தார்கள். யாரையோ, திட்டுவதும், வாக்குவாதம் செய்வதும் கேட்டது. உத்சவ்வைப் பார்த்துவிட்டு ஓடிவந்த மேனேஜரிடம் என்ன விஷயம்? என்றான் உத்சவ்.

''பெரிசா எதுவும், இல்ல சார். இந்த பசங்க சின்ன விஷயத்திற்கெல்லாம் இப்படித்தான் குதிப்பாங்க'' என்றார் அவர்.

அவரை ஒரு பார்வை பார்த்த உத்சவ், தொழிலாளர்களில் ஒருவனை அழைத்து ''என்ன விஷயம்? நீங்க சொல்லுங்க'' என்றான்.

முதலாளி மரியாதை கொடுத்து பேசியதில் குளிர்ந்து போனவனாய் அவன் சொன்னான். ''நைட் தர்ற டீ எப்பவும் ஆறிப்போய் ஜில்லுன்னு இருக்கு. டீ குடிக்கறதே தூக்கம் வராம சுறுசுறுப்பா வேலை செய்யணும்னும்னுதான். சூடா குடிசாத்தானே சுறுசுறுப்பா இருக்கும். நீங்களே சொல்லுங்க'' என்றான்.

''தொழிற்சாலைக்கு டீ சப்ளை செய்வது யார்?'' என்றான் உத்சவ்.

''பக்கத்து டீக்கடையிலிருந்துதான் வாங்குகிறோம்'' என்றார் மேனேஜர்.

''அந்த கடையில் மேனேஜருக்கு கமிஷன் தருகிறார்கள்'' என்றான் ஒருவன்.

மேனேஜர் அவனை முறைக்க, உத்சவ் சொன்னான், ''இங்குள்ள கிளைமேட்டிற்கு டீயை டிரம்மில் கொண்டு வந்து ஒவ்வொரு செக்ஷனாக போய் கடைசியாக வரும்போது ஆறிப்போய்தான் இருக்கும். இனி தொழிற்சாலையின் உள்ளேயே கேண்டீன் தொடங்கலாம். நீங்களே போய் பிஸ்கெட் சாப்பிட்டு விட்டு சூடாய் டீ குடித்துவிட்டு வரலாம்'' உத்சவ் சொல்லவும் தொழிலாளர்களின் முகங்கள் மலர்ந்து போனது. ''ஆனால் ஒரு விஷயம் டீ குடிக்கிறேன் பேர்வழி என்று கேண்டீனே கதியென்று கிடக்கக் கூடாது'' உத்சவ் பொதுவான எச்சரிக்கையாக சொல்ல எல்லோரும் சரியென தலையசைத்தனர்.

உத்சவ் தொழிற்சாலை முழுவதையும் பார்வையிட்டு அலுவலகத்திற்குள் வந்தபோது வானதி எதிரே வந்தாள்.

''நீ இன்னுமா வீட்டிற்கு போகவில்லை?'' என்றான் உத்சவ் அவளிடம்.

''கிளம்புகிற நேரம் கோடவுனில் ஸ்டாக் ஸ்டோர்பண்ண வேண்டியிருந்தது.''

''கோடவுன் டியூட்டி உன்னுடையதில்லையே கோடவுன் இன்சார்ஜ்



ரமா எங்கே போனாள்?'' என்றான் கடுமையான குரலில். அந்த குரலில் துணுக்குற்ற வானதி, ''ரமாவுக்கு ஜுரம். அதனால் நான் உதவி செய் தேன்'' என்றாள்.

''ஜுரம் என்றால் வீட்டிற்கு போக வேண்டியதுதானே!''

''வீட்டிற்கு போனால் லீவில் சம்பளம் கட்டாகிவிடும். அதனால்''

''அதனால் உதவிக்கு உன்னைக் கூப்பிட்டாளா? நான் சென்ஸ். கொடுக்கிற விடுமுறைகளை எல்லாம் வீணடித்துவிட்டு முடியாதபோது வேலை செய்வதாக பாவ்லா காட்டுகிறாள். அதற்கு நீயும் உடந்தையா? உன் வேலையை மட்டும் செய். தேவையின்றி அடுத்தவர் வேலையில் தலையிடாதே?''

''தலையீடு என்றில்லை. என் வேலை விரைவில் முடிந்துவிட்டதால் உதவலாம் என்றுதான்...?''

''ரமாவுக்கு முடியவில்லை என்றால் அந்த வேலை தெரிந்தவர்களை நிர்வாகமே ஏற்பாடு செய்யும். உன்னைப் போன்றவர்கள் உள்ளே நுழைந்து குளறுபடி செய்ய வேண்டியதில்லை''

சந்தித்த நாளிலிருந்து உத்சவ் தான் முதலாளி என்பதை குரலிலோ, முகத்திலோ கூட காட்டியதில்லை. அவளிடம் ஒரு நண்பனை போலவே பழகியிருந்தான் என்பதால் இந்த காரணமற்ற கடுமை அவளை பாதிக்கவே செய்தது. அதை வெளிக்காட்டாமல் 'ஸாரி சார்' என்றவள் அதற்கு மேல் அங்கு நிற்காமல் அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

செக்ஷன் ஆபிசர்களை அழைத்து பேசிவிட்டு உத்சவ் கிளம்புகையில் வானதி தோளில் பேகை மாட்டியபடி கேட்டருகே நிற்பது தெரிந்தது.

காரை ஸ்டார்ட் செய்து அவள் சென்றதும் ''என்ன வானதி வாட்ச்மேனுக்கு உடம்பு சரியில்லையா? நீ வாட்ச்மேன் டியூட்டி பார்க்கப் போகிறாயா?'' என்றான் அவளிடம்.

திரும்பி அவன் முகத்தைப் பார்த்த வானதி அதிலிருந்த கேலியை கண்டதும் பதில் எதுவும் சொல்லாமல் தலையசைத்தாள். உத்சவ்வைப் பார்த்ததும் ஓடிவந்து சல்யூட் அடித்த வாட்ச்மேனிடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டு, இவளிடம் திரும்பி ''உன் வீட்டிற்கு எப்படிப் போவாய் வானதி? ஸ்கூட்டர் எங்கே?'' என்றான் அவளிடம். அவனுக்கு பதிலாக வானம் ஒருமுறை மின்னி மறைந்தது. உத்சவ் பதிலுக்காக காத்திருப்பதைப் பார்த்ததும் வானதி சொன்னாள். ''மழை வரும் போலிருப்பதால் ஸ்கூட்டரை தொழிற்சாலையிலேயே நிறுத்தி விட்டேன். பஸ்சில் பொள்ளாச்சி போய்விட்டால் அங்கிருந்து அப்பாவை வர சொல்லி போய் விடுவேன்?''

''சரி காரில் ஏறு. பொள்ளாச்சியில் விடுகிறேன்.''

''இந்த நேரத்தில் நீங்கள் எதற்கு அத்தனை தூரம் வரவேண்டும்? நானே போய்க் கொள்வேன் ''என்றாள் வானதி மறுப்புடன். வெகுநேரமாய் திரண்டிருந்த வானம் பொழிய ஆரம்பித்தது. வேகமாய் மழைத்துளிகள் மேலே விழுந்தன. வாட்ச்மேன் தன் கூண்டிற்குள் ஓடினான். அங்குமிங்குமாய் நின்றிருந்தவர்கள், தெருவில் நடந்து கொண்டிருந்தவர்கள், எல்

லோரும் ஒதுங்க இடம் தேடி விரைய, ''சீக்கிரம் ஏறு வானதி'' என்றான் உத்சவ்.

வானதி மறுக்க வாயெடுக்கும் முன் பெரிய ஓசையுடன் இடி இடிக்கவும் புறம் திரும்பி பொள்ளாச்சி சாலையில் செல்லத் தொடங்கியது. வழியெங்கும் மழை விடாது பெய்தது. காரின் முன்புற கண்ணாடி வழியே தெரு புகைமூட்டமாய் தெரிய, உத்சவ் காரை செலுத்த சிரமப்பட்டான். வண்டியின் ஹெட்லைட் வெளிச்சம் மழை இருளை ஊடுருவ முடியாமல் திணறியது. மழைநீரில் ஊர்ந்து கொண்டிருந்த கார் கிட்டத்தட்ட மூன்று கிலோ மீட்டர் தூரம் சென்றதும் நின்றது. முன்னால் வரிசையாய் நின்றிருந்த வண்டிகளைப் பார்த்த உத்சவ், ''எதாவது பிரச்சனையா?'' என்றான் அருகிலிருந்த காரில் இருந்தவர்களிடம் ''சாலையின் குறுக்கே பெரிய மரம் சாய்ந்துவிட்டது சார். அதை கிளியர் பண்ணிய பிறகுதான் வண்டிகள் போக முடியும்'' என்றார்கள் அவர்கள். ''எப்போது கிளியர் ஆகும்?''

''யாருக்குத் தெரியும். இந்த மழையின் இடி மின்னலில் தகவல் தெரிவித்து ஆட்கள் வந்து அப்புறப்படுத்த எத்தனை நேரமாகுமோ? ஒரு வேளை விடிந்த பிறகு, நாளை காலையில் ஆட்கள் வந்தாலும் வரலாம்?'' நின்றிருந்த வண்டிகள் ரிவர்ஸ் எடுத்து திருப்பவும் ''இப்போது என்ன செய்வது? ''என்றாள் வானதி கவலையுடன்.

''எதாவது செய்துதான் ஆக வேண்டும். இந்த மழையிலும், இருட்டிலும் காருக்குள்ளேயே அமர்ந்திருப்பதும் நல்லதல்ல?'' உத்சவ் யோசித்தான் ''என்னால் உங்களுக்கு சிரமம்'' என்றாள் வானதி சங்கடத்துடன்.

''அதை தாமதமாக கிளம்பும் முன் யோசித்திருக்க வேண்டும்'' என்றான் முகத்திலடித்தாற்போல்.

அம்மாவும் அப்பாவும் கூட கவலைப்படுவார்கள் என்று நினைக்கும் போதே செல்போன் சிணுங்கியது. ''வானதி எங்கேயிருக்கிறாய்?'' என்ற அப்பாவின் குரலில் கவலை தெரிந்தது.

''அப்பா இங்கே சாலையில் மரம் சாய்ந்து விட்டிருப்பதால் வண்டிகள் நகராமல் நிற்கின்றன. மழை வேறு''... என்றாள் வானதி.

''இங்கும் நம் வயலுக்கு வரும் வழியெல்லாம் மரக்கிளைகள் முறிந்து கிடக்கின்றன. நான் பாஸ்கரை வரச் சொல்கிறேன். நீ மலர் வீட்டிற்கு போ'' என்றார் சங்கரன்.

''இல்லப்பா. வேண்டாம்'' என்றாள் வானதி உடனடியாக.

''என்ன வேண்டாம்'' பிறகெப்படி வருவாய்?''

''அங்கும் மழையாகத்தானே இருக்கும். இத்தனை தூரம் வண்டியை ஓட்டி வருவது மாமாவுக்கும் சிரமம். அக்காவும் இரவில் தனியாக வீட்டில் இருக்க பயந்துபோவாள். இன்னும் சிறிது நேரத்தில் போக்குவரத்து சரியானதும் நானே வந்துவிடுகிறேன்'' என்றாள் வானதி.

''பொள்ளாச்சி வந்ததும் பாஸ்கரனுக்கு போன் பண்ணு'' என்றார் சங்கரன்.

உத்சவ்வும் வானதியும் மேலும் சிறிது நேரம் காரிலேயே காத்திருந்தார்கள். வரிசையில் நின்றிருந்த வண்டிகளில் லாரிகளைத் தவிர மற்றவை திரும்பி சென்றிருக்க சாலை வெறிச்சோடியது. மழை நின்று விட்டிருந்



தாலும் மின்னல் கண்ணைப் பறித்தது. உத்சவ் சொன்னான்.

''இனிமேலும் இங்கு காத்திருப்பதில் அர்த்தம் இல்லை. எங்கள் வீட்டிற்கு போய்விடலாம். நாளை உன் ஸ்கூட்டியிலேயே உன் வீட்டிற்கு போய்விடலாம்.''

''ஆனால் வெளியே தங்குவதற்கு என் பெற்றோர் அனுமதிக்க மாட்டார்கள்'' என்றாள் வானதி.

''அனுமதிக்கவோ, மறுக்கவோ முடியாத சூழ்நிலை இது. இப்போதைக்கு நீ பாதுகாப்பாக இருக்கக் கூடிய இடம் என் வீடுதான்''.

''ஆனால் உங்கள் வீட்டில் நான் எப்படி?'' வானதி வெகுவாக தடுமாறினாள்.

''வானதி இக்கட்டான சமயத்திலும் என்னுடன் வர நீ காட்டும் தயக்கம் என்னை அவமானப்படுத்துகிறது'' என்றான் உத்சவ் கோபத்துடன். ''நான் படிக்கும்போது பிக்னிக் சென்ற சமயங்களில் ஆண்களும், பெண்களும் ஒரே அறையில் தங்கியிருக்கிறோம். என் வீட்டில் கூட சமயத்தில் என்னுடன் படித்த தோழிகள் தங்கியிருந்ததுண்டு. யாரும் எதையும் வித்தியாசமாக நினைத்ததில்லை.''

அன்று மாலையில் உத்சவ்வை சந்தித்ததிலிருந்தே அவன் அடிக்கடி தன் மீது கோபப்படுவதால் ஏற்பட்ட வருத்தமும், தன்னை தோழியாக நினைத்து தங்க அழைத்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சியுமாய் வானதி சொன்னாள். ''இது இந்தியா சார். பாரிஸ் அல்ல. இங்கே ஒரு பெண் தனியாக வெளியே சென்று தங்கினால் பெற்றோருக்கு, ஊருக்கு, உறவுகளுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டியிருக்கும்.''

''இந்தியாவும் நிறைய மாறிவிட்டது வானதி. கலாச்சாரத்தை காப்பாற்றுவதற்கு தங்கள் மகிழ்ச்சியை கொடுக்க இப்போது யாரும் தயாராக இல்லை. அதுவும் சரியோ, தவறோ இன்றைய பெண்கள் தாங்கள் எடுத்த முடிவுகளை செயல்படுத்துவதில் எந்த தயக்கமும் காட்டுவதில்லை.''

''நீங்கள் சொல்வது உண்மைதான்'' என்றாள் வானதி. பெற்றோரிடம் எத்தனையோ அன்பும், மரியாதையும் இருந்த போதிலும் தான் முடிவெடுத்தபடியே படிப்பை முடித்ததும், வேலை பார்ப்பதும் நினைவுவந்தது.

உத்சவ் வீடுபோய் சேரும் வரை அவளிடம் பொதுவாக நிறைய விஷயங்கள் பேசிக் கொண்டு வந்தான். தன் படிப்பு, பாரிஸ் பற்றி எல்லாம் சொன்னான். ''பிரஞ்ச் மக்கள் மிகவும் கன்சர்வேட்டிவ் வானதி. இந்தியாவைப் போலவே தொன்மையான கலாச்சாரம் கொண்ட நாடு அது. பிரெஞ்சுக்காரர்கள் மிகுந்த கலாரசனையும் கலையுணர்வும் கொண்டவர்கள். சிற்பகலையிலும் ஓவியத்திலும் அவர்களுக்கு ஆர்வமும் பக்தியும் அதிகம். டாவின்ஸி, ரபேல், பிக்காசோவின் படங்களுக்கு முன்னால் எப்போதும் ஒரு விசுவாச கும்பல் நின்று கொண்டிருக்கும். மோமார்ட் என்ற புகழ்பெற்ற கிராமம் ஒன்று மலை உச்சியில் இருக்கிறது. ஓவியர்களும், பல விதமான நூற்றாண்டு காலமாக பல எழுத்தாளர்களும், ஓவியர்களும் பல விதமான கலைஞர்களும் தன்னிச்சையாக அங்கே வாழ்ந்து வருகிறார்கள். அங்கே தெரு முழுக்க ஓவியர்கள் படம் வரைந்து கொண்டிருப்பார்கள். சுற்றுலா பயணிகளை நிற்க வைத்து அவர்களை உடனுக்குடனே

'போர்ட்ரெய்ட்' வரைந்து தருவார்கள். சிரிப்பும் பாட்டுமாய் மிக உற்சாக மான கிராமம் அது''

உத்சவ் சொன்னதை வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்த வானதி கேட்டாள். ''ஓவியத்தையே தொழிலாக கொண்டால் அவர்கள் எதிர்கா லம் எப்படியிருக்கும்? அதில் வரும் வருவாயில் என்ன சம்பாதித்து எதை சேமிக்க முடியும்?''

''சேமிக்க வேண்டிய அவசியம் இல்லை வானதி. அங்கெல்லாம் இளைஞர்களுக்கு குடும்ப பாரத்தை சுமக்கும் வழக்கம் இல்லை. ஆணோ, பெண்ணோ யாராக இருந்தாலும் ஒரு வயதுக்கு பிறகு அவர்கள் தனி பிர ஜை. கல்லூரியில் படிக்கும் போது கூட தனியாக அறை எடுத்துதான் தங் கியிருக்கிறார்கள். அவரவர் எதிர்காலத்துக்கு அவரவரே பொறுப்பு''.

''நீங்கள் இதில் எந்த ரகம்?''

''தாத்தாவின் தொழிலில் பொறுப்பேற்க வந்திருக்கும்போதே நீ என் னைப் பற்றி தெரிந்து கொண்டிருக்க வேண்டும். என் எதிர்காலம் மட்டு மல்ல என்னை சார்ந்துள்ளவர்களின் எதிர்காலத்திற்கும் நானே பொறுப்பு''

''அப்படியானால் உங்கள் குடும்பத்தினர் அதிர்ஷ்டசாலிகள்''

''உனக்கு புரிந்தால் சரி''

வானதி கேள்வியுடன் திரும்பிப் பார்க்க கார் ஒரு அழகிய பங்களா முன் நின்றது.

''இறங்கு வானதி. இதுதான் வீடு'' என்றான் உத்சவ். வானதி கார் கதவை திறக்கையில் செல்போன் ஒலித்தது. ''வானதி சாலை சரியாகி விட்டதா? பஸ் கிளம்பி விட்டதா?'' என்றாள் வேணி தவிப்புடன்.

உத்சவ்வுடன் பேசிக் கொண்டு வந்ததில் பெற்றோருக்கு தகவல் சொல்ல மறந்து போனதை நினைத்து தன்னையே நொந்தபடி அம்மா வுக்கு விபரம் சொன்னாள்.

''பெண்பிள்ளை இரவில் வெளியே தங்கினால் பார்ப்பவர்கள் என்ன சொல்வார்கள்? இந்த சின்ன ஊரில் வதந்திகள் பரவ எத்தனை நேரமா கும்? உனக்கு இது புரிய வேண்டாமா?'' என்றாள் கடிந்த குரலில்.

''ஊருக்கு வர வழியே இல்லாத போது நான் என்ன செய்ய முடியும் அம்மா? மழையில் பஸ்ஸில் அமர்ந்தபடி நடுரோட்டில் இரவை கழிப்

''நம்ம முன்னோர்கள் ரொம்ப புத் திசாலிகள்''

''எப்படி?''

''பின்னாலே சாமியார்களால் இப்ப டியெல்லாம் சங்கடம் வரும்னு தெரிஞ்சு அப்பவே ஆ'சிரமம்'னு பேர் வைச்சிருக்காங்களே...''

-மு.மதிவாணன், அரூர்.





பதை விட, இவர்கள் வீட்டில் தாத்தா, மாமா, அத்தை என குடும்பத்தின ரின் பாதுகாப்பில் இருப்பது மேல் அல்லவா?''

''இது நீயே ஏற்படுத்திக் கொண்ட பிரச்சனை தான். வழக்கம்போல் வேலை முடிந்ததும் நேரத்துக்கு வீட்டிற்கு வந்திருந்தால் இந்த தொல்லை இருந்திருக்காது. இதற்காகத்தான் பெண்ணை வேலைக்கு அனுப்ப வேண் டாம் என்று உன் அப்பாவிடம் சொன்னேன்''.. வேணி என்ன செய்வ தென்று புரியாமல் புலம்ப உத்சவ் வானதியிடமிருந்து போனை வாங்கி னான். சரியாக இருபது நிமிடம் வேணியிடம் ஏதோ பேசினான். அவன் திருப்பி கொடுத்த போது ''சரி நாளை வீட்டிற்கு வந்துவிடு வானதி. ஜாக் கிரதையாக இரு'' என்றாள் வேணி.

வானதி ஆச்சரியத்துடன் பார்க்க, உத்சவ் பெருமையுடன் சிரித்தபடி முன்னே நடந்தான். காலிங்பெல்லில் கை வைக்கும் முன்பே கதவு திறந் தது.

''தாத்தா நீங்க இன்னும் தூங்கலையா?'' என்றான் உத்சவ்.

''கார் வந்து நேரமாச்சே! உள்ளே வரலையேன்னு பார்த்தேன்'' என்ற வரதராஜு ''கூட யாருப்பா'' என்றார் வியப்புடன்.

ஹாலின் பெரிய விளக்கை எரிய விட்ட உத்சவ் ''நல்லா பாருங்க தாத்தா நம்ம வானதி'' என்றான்.

''வானதியா? என்னம்மா இந்த நேரத்தில்?'' என்றார் வியப்பு மாறாத குரலில்.

உத்சவ் விபரத்தை சொன்னதும், ''சரிதான். ஆபத்தான வேலையில் எதற்காக தனியாக போக வேண்டும்? நீ இங்கேயே இரு'' என்றார் வரத ராஜு.

''வீடு ரொம்ப அமைதியாக இருக்கிறதே! மாமா வீட்டினர்எங்கே?'' என்றான் உத்சவ்.

''சுதாவின் பெரியப்பா பெண் வந்திருந்தாள். அவளுடன் ஊட்டி போய் வருவதாக சொல்லி காலையிலேயே கிளம்பிவிட்டார்கள்''

''நீங்கள் தனியாகவா இருக்கிறீர்கள்? எனக்கு சொல்லியிருக்கலாமே! ஏதாவது சாப்பிட்டீர்களா தாத்தா?''

''நான் உனக்காக காத்திருந்தேன். பிரிஜ்ஜில் பிரெட்டும், பழங்களும், பாலும் இருக்கிறது. நீயும் சாப்பிட்டுவிட்டு நம் புதிய விருந்தாளிக்கும் கொடு'' வரதராஜு சாதாரணமாய் பேசினாலும் குரலின் அயர்வை உணர்ந்து'' உடம்பு சரியில்லையா தாத்தா?'' என புறங்கையால் அவர் நெற்றியை தொட்டான் உத்சவ். உடல் சூடாக இருந்தது.

''இந்த நிலையில் மோகன் மாமாவையாவது உங்களுடன் துணைக்கு இருக்க சொல்லியிருக்க வேண்டும். அல்லது எனக்கு ஒரு போனாவது செய்திருக்கலாம். மாத்திரை ஏதாவது சாப்பிட்டீர்களா?'' என கபோர்டை திறந்தான்.

''இப்போதுதான் மாத்திரை சாப்பிட்டேன்'' என்றார் வரதராஜு.

''வெறும் வயிற்றிலா?'' என உத்சவ் கேட்க, வானதி சுற்றிலும் பார்த் தாள். உணவு மேஜையில் காலையில் சாப்பிட்டவை அகற்றப்படாமல் இருந்தது. சமையலறையும் ஒரே களேபரமாக இருக்க, தாத்தாவும் பேர னும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நிற்க, வானதி இயல்பாக உதவ முன்

வந்தாள். முதலில் சாதமும் ரசமும் செய்து சூடாக சாப்பிடக் கொடுத்தாள். காய்கறி கூடையை தேடி உருளைங்கிழங்கை வறுத்து பருப்பு மசியலுடன் உத்சவ்வும் அவளும் சாப்பிட்டார்கள். சிங்கில் கிடந்த பாத்திரங்களை துலக்கி சமையல் மேடையில் சிதறி இருந்த உணவுப்பொருட்களை அகற்றி டைல்களை சோப்பு நீரில் சுத்தம் செய்து, கீழே கொட்டி காய்ந்து விட்டிருந்த சாம்பார், கறைகளையும் எண்ணெய் பிசுக்கையும் பிளீச்சிங் வாட்டரால் சுத்தம் செய்து என இரண்டு மணி நேர போராட்டத்திற்கு பின் சமையலறை பளிச்சிட்டது. ஹால் சோபாவில் கிடந்த துணிகளை அகற்ற முற்படுகையில் தாத்தாவை தூங்க வைத்துவிட்டு வந்த உத்சவ்வும் உதவி செய்தான்.

இருவரும் பேசியபடியே வேலையை முடித்துவிட்டு தூங்க செல்கையில் நடுநிசியாகி விட்டிருந்தது. பிரீத்தியின் அறையில் அவளை தூங்கும்படி சொன்ன உத்சவ், ''என்னால் உனக்கு வேலை அதிகம்'' என்றான் அவளிடம்.

''எனக்காக நீங்கள் உதவவில்லையா? அதுபோலத்தான்'' என்ற வானதி அறைக்கதவை தாழிட்டு விட்டு வந்து முகம் கை கால்களை கழுவி படுக்கையில் விழுந்தவள் அலுப்பில் அப்படியே தூங்கிப் போனாள்.

காலையில் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டதும் எழுந்து அமர்ந்த வானதிக்கு ஒரு நிமிட யோசனைக்கு பிறகே தான் எங்கிருக்கிறோம் என்பது நினைவு வந்தது. அவசரமாய் எழுந்து போய் கதவைத் திறந்தாள். கையில் காபி கப்புடன் நின்றிருந்த உத்சவ் ''குட்மார்னிங்'' என்றான் தன் வரிசையான பற்களின் வெண்மை நிறம் மின்ன தன் வாழ்வில் முதல் முறையாக கண் விழித்ததும் பார்க்கும் இந்த முகமும் சிரிப்பும் தனக்கு என்றும் மறக்காது என்று தோன்றியது வானதிக்கு.

''என்ன வானதி, காபியை பார்த்ததும் திகைத்துவிட்டாயா? பயப்படாமல் குடிக்கலாம். என் காபி நன்றாகவே இருக்கும்'' என்றான் உத்சவ்.

''நானே வந்திருப்பேனே, நீங்கள் எதற்காக எடுத்து வர வேண்டும்?'' என்றாள் வானதி லேசான கூச்சத்துடன்.


''நீ இந்த வீட்டில் இப்போது கெஸ்ட் இல்லையா? அதனால் தான்'' என்ற உத்சவ், ''சீக்கிரம் குடி, சூடு ஆறிவிட்டால் டேஸ்ட்க்கு நான் உத்திரவாதம் இல்லை'' என்றான் காபி கப்பை கொடுத்தபடி.

''தேங் யு'' என காபியை வாங்கி கொண்ட வானதி, பல்துலக்கி விட்டு வந்து காபியை குடித்து முடித்து விட்டு கீழே வந்தாள். டைனிங் டேபிளில் அமர்ந்து ரொட்டிக்கு வெண்ணெய் தடவிக் கொண்டிருந்த உத்சவ் ''எப்படியிருந்தது என் காபி? ''என்றான் ''சூப்பர், தாத்தா எப்படியிருக்கிறார்?'' என்றாள் வானதி.

''ஜுரம் குறைந்திருக்கிறது. ஆனால் சோர்வாக இருக்கிறார்''. வானதி இட்டிலியும், சாம்பாரும் செய்தாள். வரதராஜு இரண்டுவாய் உணவுடன் ஒதுக்கி வைக்கவும். வானதி எழுந்து அவர் அருகில் சென்றாள்.

''உணவை மறுத்தால் பலகீனம்தான் அதிகமாகும். உங்களுக்கு தெரியாததில்லை. நன்றாக சாப்பிட்டால்தானே விரைவில் குணமடைய முடி





யும்?'' என குழந்தையிடம் பேசுவதுபோல் பேசி அவரை உண்ண வைத் தாள். வரதராஜு கண்களை மூடி பின்னால் சாய்ந்து அமர்ந்தார். அவரைத் தொட்டுப் பார்த்த வானதி ''ஜுரம் இன்னும் இருக்கிறது. டாக்டரிடம் காட்டினால் தேவலை என்றாள்உத்சவ்விடம். உத்சவ் டாக்டருக்கு போன் பண்ண போகவும் வரதராஜு அலுப்புடன் தலையசைத்தார். '' வயதான பின் ஒவ்வொரு நாளும் போகும்போது ஆயுளில்ஒரு நாள் கழிவதாகத்தான் அர்த்தம். போகிற உயிரை எத்தனை நாள் பிடித்து வைக்க முடியும்? உயிர் இருக்கும் வரைதான் இது உடம்பு இந்த உடம்புக்கு இத்தனை சொகுசும். போஷாக்கும், வேண்டியிருக்கிறது. உயிர் போன பிறகு வெறும் பிணம். விதவிதமாய் ஜோடித்தாலும் தூக்கி எறியத்தான் வேணும்.''

'' நீங்கள் இப்படியெல்லாம் யோசிக்கக் கூடாது'' என்றாள் வானதி ''நீங்கள் வெகுநாட்கள் நலமுடன் இருக்க வேண்டும். அப்போதுதான் உங் கள் குடும்பத்தையும் உங்களையே நம்பியிருக்கும் தொழிலாளர்களையும் கவனிக்க முடியும்''

வானதி சமாதானப்படுத்த முயல, அவர் மறுப்புடன் தலையசைத் தார். ''நானா நம்பியிருப்பவர்களை காப்பாற்றுபவன்? இல்லை. நம்பிய வர்களை நடுவழியில் விட்டவன். விரும்பி வந்தவளையும் வாழ வந்தவ ளையும் கூட ஏமாற்றியவன்.''

வானதிக்கு அவர் பேச்சின் பொருள் புரியவில்லை என்றாலும் உட லின் சுகவீனம் மனதை பலவீனமாக்கும் என்பதை அறிந்தவளாய் அவர் கைகளைப் பற்றி ஆறுதலாக பேச முயன்றாள்.

உடலும் மனதும் தளர்ந்து போக, வரதராஜின் நினைவுகள் வசமிழந்து போயின. ''லட்சுமி என்னை மன்னித்து விடு'' என்றார் கண்களை மூடிய படி

''நான் உனக்கு துரோகம் செய்யவில்லை.''

''மோகன்''.

'' மைதிலி.. அப்பா தவறு செய்யவில்லை''

'' உத்சவ்''.

'' சங்கரா மன்னித்து விடு''

'' இந்த உயிர் போவதற்குள் உன் முகத்தை காட்டிவிட்டு போ..''

'' லட்சுமி.. லட்சுமி இருந்திருந்தால்..''

மூடிய இமைகளிலிருந்து வழிந்த நீரை ஒற்றியெடுத்த வானதி திடுக்

**''டாக்டர் வர வர ரொம்ப கஞ் சத்தனம் பண்றாரு!''**

**''என்னாச்சு''**

**''பேஷண்ட்டுங்களுக்கு மயக்க மருந்து தர்றதுக்கு பதிலா அவங்க முன்னாடி நர்சுங்களை நிக்க வச்சிடறாரு!'**

**'-முத்து ஆனந்த், வேலூர்.**





இட்டாள். லட்சுமி, சங்கரன்.. என்ற பெயர்கள் அவளை குழப்பின.

'' தாத்தா.. அமைதியாய் இருங்கள். டாக்டர் இப்போது வந்து விடு வார்'' அவரைப் பற்றியிருந்த கைகள் நடுங்கின. சிறிது நேரத்தில் வந்த டாக்டர்''வைரஸ் காய்ச்சல் போலத்தான் தெரிகிறது. மருந்தை கொடுங் கள். நாளை வருகிறேன்'' என விடைபெற்றுப் போனார்.

இருவரும் வரதராஜுவை மருந்தை சாப்பிட வைத்து மறுபடி படுக் கையில் படுக்க வைத்தார்கள்.

வானதி குளிக்க வேண்டும் என்றதும் உத்சவ் அவள் இருந்த அறையி லிருந்த கப்போர்டை காண்பித்தான். '' இந்த உடைகளில் உனக்கு பொருத் தமானதை எடுத்து பயன்படுத்திக் கொள்'' என்றான்.

''இவை யாருடையவை?''

'' என் மாமா பெண் ப்ரீத்தியுடையது. அவளும் இந்த வீட்டுப் பெண் தான் என்பதால் நீ தயக்கமே பட வேண்டியதில்லை.''

உடைகளிலிருந்து ஒரு லஸ் ஸ்கர்ட்டும், டாப்சும் தேடி எடுத்துக் கொண்டு கதவை மூடினாள். குளித்து முடித்துவிட்டு வந்து தலை வாறு கையில் கண்ணாடியில் தெரிந்த வானதி அவளுக்கே புதியவளாக இருந் தாள்.

சமையலறைக்கு சென்றவள் வரதராஜுக்கு கஞ்சி தயார் செய்து உத் சவ்விற்கும் அவளுக்கும் மதிய உணவு தயாரித்து வீட்டை ஒதுக்கி வைத்து விட்டு தன்வீட்டிற்கு புறப்படத் தயாரானாள்.

## 8

அப்பா கொடுத்துவிட்டுப் போயிருந்த கணக் கின்படி அந்த வாரக் கூலியை வேலையாட்களுக்கு கொடுத்துக் கொண்டிருந்தாள் வானதி. கடைசியாக பணம் வாங்க வந்த மாணிக்கம் ''பாப்பா இன்னும் நூறு ரூபா அதிகமா தா. அடுத்தவார கணக்கில் கழிச் சிடலாம்''என்றான்.

''போனவாரமும் அப்பாவிடம் இதையேதான் சொன்னாய் சாராயக் கடை பக்கமாய் உன்னை அடிக்கடி பார்ப்பதாய் கேள்விப்படுகிறோமே?'' என்றாள் வானதி.

'' நாள் முழுசும் வெய்யில், மழை பார்க்காம வேலை செய்கிறோம். ராவு மேல் வலிக்கு மருந்து மாதிரி குடிச்சிட்டு தூங்கறதுதான். அதுக்காக குடும்பத்தை கவனிக்காத ஆளாநான்? என் பொண்டாட்டியை வேணும்னா கேட்டுப் பாரு கண்ணு? ''நீ என்னதான் சொன்னாலும் அட் வான்ஸ் எல்லாம் இப்பதர முடியாது'' என கறாராக பேசி அவன் கூலியை கொடுத்த வானதி '' உன் மகளுக்கு இது எத்தனையாவது மாசம்?'' என விசாரித்தாள்.

'' ஏழு மாசம் ஆச்சி கண்ணு. பிரசவத்துக்கு வந்திருக்கு'' என்றான் மாணிக்கம்.

'' இந்தா, என் சம்பளத்திலிருந்து ஐ நூறு ரூபாய். உன் மகளுக்கு சத் துள்ளதாய் சாப்பிட வாங்கிக் கொடு'' என அவனிடம் ஐ நூறு ரூபாயைக் கொடுத்தாள் வானதி. முகம்மலர அவளிடம் பணத்தை வாங்கிய மாணிக்

கம் '' எந்தாயி, அப்படியே உன் பாட்டி மாதிரி குணம்'' என்றான் வாஞ்சையுடன். ''பாட்டியா?''

'' ஆமாம். உங்க அப்பாவை பெத்தவங்க. லட்சுமி அம்மா எத்தனை கண்டிப்போ அத்தனை கருணையும் உள்ளவங்க. உழைக்கவும் சரி, கொடுக்கவும் சரி தயங்கவே மாட்டாங்க.''

'' என் தாத்தா?''

மாணிக்கம் ஒரு நிமிடம் யோசித்தான். '' உன் தாத்தாவை நான் பார்த்ததே இல்லை கண்ணு. அந்த காலத்திலேயே அயல் தேசம் போய் வேலை பார்க்கறதா பேசிக்குவாங்க.''

'' என்பாட்டிக்கு சொந்த ஊர் இதேதானா?''

'' இல்லை வால்பாறைக்கு மேலே மலை பக்கமிருந்து இங்கு வந்து நிலம் வாங்கி இப்படியே தங்கிட்டதா பேச்சு''

'' என் பாட்டிக்கு உடன் பிறந்தவர்கள் இருக்கிறார்களா? தாத்தாவுக்கு சொந்த ஊர் எது?''

இதையெல்லாம் உங்கப்பாவிடம் கேட்டால்தான் தெரியும். இங்கு சிறிய நிலத்தை வாங்கி குடிசை போட்டு குடியேறியது எனக்கு தெரியும். அசராத உழைப்பால் உன் பாட்டி அருகேயிருந்த நிலங்களையும் வாங்கினார்கள். உன் அப்பா அத்துடன் திருப்தியடையாமல் டவுனில் வியாபாரம் எல்லாம் செய்து குடிசைவிட்டை மாடி வீடாக்கினார். அவ்வளவுதான் தெரியும் எனக்கு'' என்ற மாணிக்கம் ''வரட்டுமா பாப்பா? பொழுது இறங்கிடிச்சு'' என கிளம்பினான்.

சில நிமிடங்களில் வாயிலில் மாணிக்கத்தின் குரல் உற்சாகத்துடன் கேட்டது. '' மாப்பிள்ளை முதலாளியா? நம்ம பெரிய பாப்பா வரலையா?'' என்ற அவன் கேள்விக்கு பாஸ்கரன் பதில் சொல்வதை கேட்டதும் வானதி உள்ளே போக எழுந்தாள். அதற்குள் அவள் அருகே வந்துவிட்ட பாஸ்கரன் ''வானதி அடுத்த பண்ணைக்காரம்மா வாகிவிட்டாயா.....!'' என்றான் அவள் கையிலிருந்த கணக்கு நோட்டைப் பார்த்ததும்.

வானதி பதில் பேசாமல் இருக்கவும். ''உன்னை இந்த வேலை செய்யவிட்டு மாமா எங்கே போனார் வானதி?'' என்றான் அவளிடம். வானதி தன் அம்மாவை அழைத்தபடி உள்ளே செல்ல முற்படவும் '' வானதி'' என்றான் பாஸ்கரன் குரலில் அழுத்தத்துடன். அந்த குரலுக்கு பழக்கப்பட்டிராத வானதி வியப்புடன் திரும்பிப் பார்த்தாள். '' ஏன் பதில் சொல்லாமல் போகிறாய் வானதி? உன் படிப்பால் நீ கற்றுக் கொண்டது இதுதானா? அல்லது என் மீது நீ வைத்திருக்கும் அபிப்பிராயம் இவ்வளவுதானா? நான் அக்காவின் கணவன், புதிதாக அறிமுகம் ஆனவர்களிடம் கூட எளிதில் பழகிவிடும் நீ என்னிடம் மட்டும் ஏன் எப்போதும் விலகிச் செல்கிறாய்? சொல்லு வானதி!''

பாஸ்கரன் கேள்வியிலிருந்த நியாயம் மனசைத் தொட என்ன சொல்லுவதென்று புரியாமல் விழித்தாள். இன்னதென்று அவளுக்கே தெரியாத ஒரு விஷயத்தை என்ன சொல்லி விளக்குவது என்று வானதி திணறிக் கொண்டிருந்த போது அவளை விடுவிக்க வந்தது போல் வேணி வந்தாள்.

'' மாப்பிள்ளையா? வாங்க. மலர் வரலையா? குழந்தை எப்படியி



ருக்கிறான்?'' என மருமகனிடம் நலம் விசாரிக்கத் தொடங்கினாள்.

''யாரும் வரவில்லை அத்தை. நடவுக்கு நாற்று வாங்க இந்தப் பக்கமாய் வந்தேன். மாமா இருந்தால் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்'' என்றான் பாஸ்கரன்.

'' மாமா ஊத்துக்குழி வரை போயிருக்கிறார்கள். வருகிற நேரம்தான் அதற்குள் நீங்கள் சாப்பிட்டு விடுங்கள்'' என்ற வேணி '' வானதி மாமாவுக்கு வாழை இலை எடுத்துப் போடு'' என மருமகனை உபசரிக்க தொடங்கினாள்.

பாஸ்கரன் சாப்பிட்டு கிளம்பிப் போகும்வரை வானதி தன் அறையை விட்டு வெளியிலேயே வரவில்லை. கிளம்பும் போது பாஸ்கரன் கேட்டான் '' ஏன் வானதி வேலைக்கு போகவில்லை?''

'' ஒரு வாரம் விடுமுறை என்று சொன்னாள்'' என்றார் சங்கரன். ஏதோ யோசனையில் ஆழ்ந்து '' சரிதான்'' என்று பாஸ்கரன் கிளம்பி போனான்.

எப்போதும் உற்சாகமும் துடிப்புமாய் இருக்கும் பெண் அதிகம் பேசாமல் அமர்ந்து விடுவதைக் கண்ட வேணி வானதியை துளைத்தெடுத்தாள்.

'' நான் நன்றாக இருக்கிறேன்.'' என்றாள் வானதி.

'' பிறகு ஏன் வேலைக்கு போகல? நேத்து உத்சவ்வின் தாத்தா கூட போன் செய்து வானதியை அனுப்பி வையுங்கள் என்றார். அப்படியும் நீ ஏன் போகவில்லை?''

ஒரு நிமிடம் மகளை உற்றுப் பார்த்த வேணி '' அங்கு எதுவும் பிரச்சனை இல்லையே வானதி! அம்மாவிடம் சொல்'' என்றாள் மகளின் முகவாயைப் பற்றி.

'' அம்மா கவலைப்படும் படியா! எதுவும் இல்லை'' எனக்கூறி சமாளித்தாளே தவிர உத்சவ்வின் தாத்தா வரதராஜ '' ஜ ''ரத்தால் உடல் பலஹீனமான நிலையில் லட்சுமி... லட்சுமி என்று மனம் மருகியதும், சங்கரா மன்னிச்சுடுங்க என்றெல்லாம் புலம்பியும் அவள் நெருங்கி கொண்டிருந்தது.

விவசாயி கூலிபட்டு வாழ்வின் போது தன் பாட்டி லட்சுமி அம்மாவை பற்றி வெகுவாக புகழ்ந்தாலும். இன்னும் பல நிகழ்ச்சிகளை கோர்வையாக்கி பார்த்தபோது தன் தந்தை சந்திரனுக்கும், வரதராஜ'' குடும்பத்திற்கும் ஏதோ தொட்டும், தொடராமலும் ஏதோ உறவு ஊசல் ஆடுவதை படித்த பெண்ணான அவளால் யூகிக்க முடிந்தது.

அப்போது அங்கே சங்கரன் '' வானதி! இத்தனை பணத்தை வேணு கொடுத்ததாக முத்துக்கவுண்டர் மாமாவிடம் கொடுத்து விட்டு அவர் உடல் நிலை விசாரித்து வா ''என முத்துக்கவுண்டருக்கு அவரது குத்தகைக்காரர் கொடுத்தனுப்பிய பணத்தை மகளிடம் கொடுத்தார்.

'' கவுண்டர் மாமா தினமும் ஒருமுறையாவது இங்கே வந்துவிடுவார் பாவம் இப்போது நடக்கவே சிரமப்படுகிறார்'' என்றாள் வானதி அனுதாபத்துடன்.

அவள் போனபோது வீட்டு தாழ்வாரத்தில் படுத்திருந்த முத்துக்கவுண்டர் அவளைப் பார்த்ததும் உற்சாகத்துடன் எழுந்து அமர்ந்தார்.

'' வானதியா? வா கண்ணு வா. வந்து பாக்க முடியலேன்னு கவ

லையா இருக்குது. நீயே வந்துவிட்டாய். இப்படி உட்காருடா'' என்றார் பிரம்பு நாற்காலியைக் காட்டி.

''இப்ப எப்படியிருக்கீங்க மாமா?'' என்றாள் வானதி பிரியத்துடன் அவர் கைகளைப் பற்றி.

'' நடக்கத்தான் முடியல. ஏற்கனவே கவனிக்காத பிள்ளைகளுக்கு வேண்டாத சுமையா போயிடக்கூடாதேன்னுதான் துக்கமா இருக்கு'' என்றார் முத்துக்கவுண்டர்.

இப்ப மருத்துவதுறை ரொம்ப முன்னேறிவிட்டது மாமா. ரொம்ப கடினமான நோயைக் கூட குணப்படுத்தி விடுகிறார்கள். நீங்கள் சீக்கிரமாய் குணமாகி விடுவீர்கள் பாருங்கள்'' என்ற வானதி அப்பா கொடுத்த பணத்தை கொடுத்துவிட்டு, அம்மா தந்த சாதத்தையும் மீன்குழம்பையும் அவருக்கு பரிமாறவும் முத்துக்கவுண்டரின் கண்கள் கலங்கின.

''சங்கரனை எனக்கு சின்ன வயசிலிருந்து தெரியும். உன் அம்மா திருமணமாகி வந்ததிலிருந்து என்னை அண்ணா என்றும் என் மனைவியை அண்ணி என்றும் கூப்பிட ஆரம்பித்தான். அந்த பழக்கத்தில் நீயும் மலரும் மாமா, அத்தை என உறவு கொண்டாடினீர்கள். உண்மையில் இரத்த பாசத்தை விட பழகினபாசம் பெரிசு கண்ணு.

இல்லை என்றால் பெற்ற தகப்பனே வந்து கெஞ்சியபோதும் மனமிரங்காத உன் அப்பா எனக்கு முடியவில்லை என்றதும் கவலைப்படுவானா? பெற்ற பிள்ளைகள் கவனிக்காமல் புறக்கணித்த போதெல்லாம் கவலைப்படாத நான் உங்களை எல்லாம் பார்க்க முடியாமல் போனதும் இடிந்து போவேனா? இந்த உலகில் நட்புக்கு மிஞ்சிய விஷயம் எதுவுமே இல்லை வானதி'' என்றார் முத்துக்கவுண்டர் நெகிழ்ந்த குரலில்.

'' என் தாத்தா எங்கே இருக்கிறார் மாமா?'' என்றாள் வானதி ஆர்வத்துடன்.

'' தாத்தாவா?''

'' ஆமாம். இப்போது சொன்னீர்ளே. என் அப்பாவின் அப்பாவைப் பற்றி?''

முத்துக்கவுண்டர் தவறுதலாக வாயைவிட்டதை உணர்ந்தார். அவர் சமாளிக்க முயலுமுன் வானதி படபடத்தாள் ''மாமா நான் இன்னும் சிறு பிள்ளை இல்லை. எதற்கு என்னிடம் மறைக்க வேண்டும்? உண்மையை சொல்லுங்கள்.''

''மறைக்கும் படியாய் பெரியரகசியம் எதுவும் இல்லை வானதி.''

'' ரகசியம் இல்லை என்றால் எதற்கு சொல்லமாட்டேன் என்கிறீர்கள்? சொல்லுங்கள்!''

வானதி மீண்டும் மீண்டும் வற்புறுத்தவும் முத்துக்கவுண்டர் தனக்குள் முடிவு செய்தவராக சொன்னார். ''உன் தாத்தாவும் பாட்டியும் வேறு வேறு ஜாதி சமூகத்தை சேர்ந்தவர்கள் வானதி. அந்த காலத்திலேயே கலப்பு மணம் செய்தவர்கள் என்று சொல்லலாம். வசதி படைத்த குடும்பத்தை சேர்ந்த உன் தாத்தா ஏதோ காரணத்தால் உன் பாட்டியை விட்டுவிட்டு வெளிநாடு சென்றவர் அங்கேயே ஒரு பெண்ணை மணந்து செட்டில் ஆகிவிட்டார். உன் பாட்டி மிக சிரமப்பட்டு உன் அப்பாவை வளர்த்தார்.



தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்தவள் என்பதாலும் கணவன் உடன் இல்லாததாலும் சென்ற இடமெல்லாம் உன் அப்பாவும் பாட்டியும் அவமானத்தையே சந்தித்தார்கள். தான் பட்ட அவமானம் தன் பிள்ளைகளுக்கு தெரிந்து அவர்கள் மனதில் தாழ்வுணர்ச்சி ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் உன் அப்பா பெண்கள் இருவரையும் பொத்தி வைத்து வளர்த்தான். எதையும் சொல்லாமல் இருந்தான்''

''மறைக்கத் தேவையே இல்லை மாமா. எங்கப்பாவிற்கே தெரியாமல் அவருடைய மூத்த தலைமுறை செய்த தவறால் நாங்கள் ஏன் காயப்பட வேண்டும்? அப்படி யாராவது எங்களை புண்படுத்த நினைத்தால் அவர்கள் நிச்சயம் முட்டாளாகத்தான் இருக்க வேண்டும்.'' என்றாள் வானதி.

'' இந்த மனத்தெளிவும், பக்குவமும் எப்போதும் உனக்கிருக்க வேண்டும்.' என்றார் முத்துக்கவுண்டர் ஆசீர்வதிக்கும் விதமாக.

'' மாமா என் தாத்தாவின் பெயர் என்ன?'' என்றாள் வானதி அடக்கமாட்டாத ஆர்வத்துடன்.

'' வரதராஜு''

வானதி திகைத்தாள். உள்ளுக்குள் உறுத்திக் கொண்டே இருந்த விஷயம் உறுதிப்பட்டுவிட்டதில் மூளை கணம் ஸ்தம்பித்தது. உத்சவ்வுடன் சென்று அவர்கள் வீட்டில் தங்கிய அன்றைய இரவில் வரதராஜு ஜீரவேகத்தில் 'லட்சுமி சங்கரா' என புலம்பிய போதே புரிந்தும் புரியாததுமாய் ஏதோ நிழல் தட்டியது. இப்போது அந்த நிழலுக்கு உருவம் கிடைத்துவிட்டதில் மனம் படபடத்தது.

''மாமா என் தாத்தா இப்போது எங்கே இருக்கிறார் தெரியுமா?'' என்றாள் முத்துக்கவுண்டரிடம்.

''அவர் கோயம்புத்தூரில் இருந்தபோது மனைவி நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டதாகவும் பிறகு மகளுடன் பாரிஸ் போயிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். அதன் பிறகு தகவல் இல்லை.

உன் அப்பாவையும், தாத்தாவையும் இன்னார் என இந்த பகுதியில் யாருக்கும் தெரியாதாகையால் விபரம் சொல்ல ஆளில்லை. உன் தாத்தாவின் இரண்டாவது மனைவி இறந்ததைக் கூட அவர் சொல்ல சொன்னதாக அவரது மேனேஜர் தெரியப்படுத்தினார். அந்தம்மா மிகவும் நல்ல பெண்மணி. உன் அப்பாவிற்கு அந்தம்மா மீது கோபம் இல்லை என்றாலும் தன் அப்பாவுடன் உறவு தொடர்புகளை வளர்க்க பிரியப்படாததாலேயே துக்கத்திற்கு கூட செல்லவில்லை.''

வெகுநேரம் கழித்து வானதி கவுண்டரிடம் விடைபெற்று வீடுவந்து சேர்ந்த பின்பும் ஏதோ பிரமையுடனேயே இருந்தாள். வரதராஜு என் தாத்தா. உத்சவ், அவன் மாமா வீட்டினர் எல்லோரும் என் உறவினர்கள் என்ன அதிசயம் இது. வால்பாறையின் மலை பிரதேசத்தில் சுற்றித் திரிந்த பாட்டியையும், கோயம்புத்தூரில் பிறந்த தாத்தாவையும் சந்திக்க வைத்து பின் பிரித்து வைத்த விதி ஒரு தலைமுறை கழிந்த பின் பாரிஸிலிருந்து தாத்தாவை அழைத்து வந்து பொள்ளாச்சியிலிருந்து பேத்தியையும் இழுத்துப் போய் மீண்டும் சந்திக்க வைத்திருக்கிறது. வானதிக்கு இந்த விஷயத்தை யாரிடமாவது சொல்லி குதிக்க வேண்டும் போலிருந்தது. யாரிடம்

சொல்வது?

தாத்தாவின் மீது இன்னும் வெறுப்பு கொண்டிருக்கும் அப்பா விஷயம் தெரிந்தால் என்னை வெளியிலேயே விடமாட்டார்.

தாத்தாவும் அவர் குடும்பமும் நான் யார் என்று தெரிந்தால் எப்படி வரவேற்பார்கள்? முக்கியமாய் உத்சவ் என்ன நினைப்பான்? மகிழ்ச்சியடைவானா? அல்லது தாத்தாவின் அங்கீகாரமற்ற குடும்பத்துப் பெண் என கேவலமாய் நினைப்பானா? தன்னைப் பார்த்ததும் மலர்ந்து போகும் அவன் முகம் ஏளனத்துடன் சுழித்தால்? அவளால் தாங்க முடியாது போலியிருந்தது. வெகுநேர யோசனைக்கும் தவிப்பிற்கும் பின் ஒரு முடிவுக்கு வந்தவளாக வானதி உறங்கத் தொடங்கினாள்.

## 9

**வா**னதி காலையில் தன் வழக்கமான உற்சாகத்துடன் தொழிற் சாலைக்கு கிளம்பவும், ''இப்போதான் உன்னைப் பார்க்க சந்தோஷமா இருக்கு. ஒரு வாரமாய் எங்களையும் பயமுறுத்திவிட்டாயே'' என வேணி சிரித்தபடி மகளை வழியனுப்பினாள்.

தொழிற்சாலை அலுவலகத்திற்குள் நுழைந்த வானதி வரதராஜு எதிரில் நின்று'' ஹலோ தாத்தா எப்படியிருக்கிறீர்கள்?'' என விசாரித்த போது வழக்கத்தை மீறிய நெருக்கம் குரலில் தெரிந்தது.

அவளைக் கண்டதும் வரதராஜுவின் முகம் மலர்ந்தது. சார்' என்று அழைத்துக் கொண்டிருந்தவளை தன் வீட்டிற்கு வந்தபோது அவர்தான் தாத்தா என்று கூப்பிட சொல்லியிருந்தார். எனவே அவளது அழைப்பில் மகிழ்ந்துபோய் '' ஒரு வாரமாக ஒரு போன் கூட செய்யாமல், வராமல் இருந்துவிட்டாயே! உனக்கு உடம்பு சரியில்லையோ என்று எனக்கு கவலையாக போயிற்று. இன்று நீ வராமல் இருந்தால் மாலையில் நானே உன்னை பார்க்க வரவேண்டும் என்றிருந்தேன்'' என்றார் வரதராஜு

நல்லவேளை நான் இன்று வந்துவிட்டேன். என்று நினைத்தபடி அவருடன் சிறிது நேரம் பேசிவிட்டு வானதி தன் வேலையை பார்க்கப் போனாள். எப்போதும் வரதராஜுக்கு முன்பே வந்துவிடும் உத்சவ் இன்று இன்னும் வரவில்லை. போலும் என்று எண்ணியபடி தன் வேலையில் ஈடுபட்டாள். மதிய உணவு இடைவேளையின் போது வானதி தன் உணவை முடித்துவிட்டு அமர்ந்திருந்த சமயம் உத்சவ் யாருடனோ பேசியபடி வந்து கொண்டிருந்தான். இத்தனை நாள் இல்லாத விதமாய் மனம் படபடக்க அவனது புன்னகைக்காக காத்திருக்கையில் அவளைப் பார்க்காமலேயே கடந்து போனான். வானதி தன் ஏமாற்றத்தை பெரிதாக்காமல் ' எதோ அவசர வேலை போலும், என்னை கவனித்திருக்க மாட்டான்.' என்றாள் மனசுக்கு சமாதானமாய். அடுத்த அரைமணி நேரத்தில் வந்தவன். அவள் அருகிலேயே நின்று திரும்பி சூப்ரவைசருடன் பேசவும், வானதிக்கு அவன் தன்னை வேண்டுமென்றே தவிர்க்கிறான் என புரிந்தது. என்ன தவறு செய்தோம் என்று புரியாமல் மனம் குழம்பியது. மாலையில் வேலைமுடிந்து அவள் கிளம்புவதற்குள் உத்சவ்வை பலமுறை நேருக்கு நேர் பார்த்தும் அவன்முகம் திரும்பாததால் வானதி சோர்ந்து



போனாள். வேலையில் கவனம் சிதறவே கிளம்புவதற்கு சற்று தாமதமாகியது.

வெறிச்சோடி கிடந்த அலுவலகத்திற்குள் சென்றவள் தன் ஒர்க் ரிப்போர்ட்டை வழக்கமான மேஜை இழுப்பறையில் வைத்து விட்டு திரும்பும் பேக்கும் பர்சும் சிதறி விழ, பயத்தில் கத்தவாயை திறந்தவளை அசையமாட்டாமல் இரு உதடுகள் சிறை செய்தன. புகையில் இருவலிய கரங்கள் இறுக அணைத்தன. கையிலிருந்த ஹேண்ட்

''உத்சவ்'' என்றாள் வானதி பலகீனமான குரலில். ''வேறு யார் உன்னைத் தொட முடியும்? ''என்றான் உத்சவ் கர்வமான குரலில்.

வானதி கோபத்துடன் தன்னைப் பற்றியிருந்த அவன் கைகளை உதறினாள். '' சரியான திருடன் நீ. காலையில் பார்த்தும் பார்க்காமல் போவது. மாலையில் தேடி வந்து அணைப்பது. இதெல்லாம் எனக்கு பிடிக்கவேயில்லை.''

'' ஒரு நாள் முகம் திருப்பியதையே தாங்க முடியவில்லை உன்னால். ஒரு வாரம் சொல்லாமல், முகம் காட்டாமல் மறைந்து போய் தவிக்கவிட்டாய். எனக்கு எப்படி இருந்திருக்கும். நினைத்துப் பார்''

'' நீ ஏன் தவிக்கவேண்டும்?'' உறவு தெரிந்ததால் வந்த உரிமையோ அல்லது அவன் மனம் புரிந்ததால் வந்த நெருக்கமோ, வானதிக்கு மரியாதை பன்மை மறந்துபோய் விட்டிருந்தது.

''இன்று நீ தவித்த அதே காரணம்தான்'' என்றான் உத்சவ் அவள் விரல்களை பற்றி

'' நான் தவித்தேனா? நல்லகதை'' என்றாள் வானதி விரல்களை உருவ முயன்றபடி.

'' கதையா இல்லையா என்று உன் மனசை கேட்டுப் பார். சொல்லும். அல்லது நானே கேட்கட்டுமா?'' அவன் குனியவும் வானதி பின்னால் நகர்ந்தாள்.

''உத்சவ் இது அலுவலகம், யாராவது வரக் கூடும். நாம் தனியாய் இங்கு நின்று பேசிக் கொண்டிருப்பது கூட சரியல்ல.''

'' என் வருங்கால மனைவியிடம் நான் தனிமையில் பேசுவதை யார் பார்த்தாலும் எனக்கு அக்கறையில்லை.''

'' உத்சவ் நீ இப்போது சொன்னது நிஜமா?''

'' எது?''

'' வருங்கால மனைவி என்றது.''

''முட்டாள், திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் இல்லாமலா

''டாக்டர், இந்த ஆபரேஷனை கண்டிப்பா எனக்கு பண்ணித்தான் ஆகணுமா?''

''ஆமாம், அப்பத்தானே நா பொழைக்க முடியும்!''

-முத்து ஆனந்த், வேலூர்.



உன்னிடம் இத்தனை உரிமை எடுத்து கொள்வேன்? தாத்தா வீட்டில் நீ தங்கியிருந்த அன்றே இதை நீ புரிந்து கொண்டிருக்க வேண்டாமா?'' என்றான் உத்சவ் லேசான கோபத்துடன்.

வானதிக்கு துக்கமும், மகிழ்ச்சியும் ஒரே நேரத்தில் ஏற்பட, கண் கலங்கியது. இந்த சில நாட்களில் ஏற்பட்ட எதிர்பாராத திருப்பங்கள் அவளை எங்கே கொண்டு செல்லப்போகிறது என அவள் திகைத்து நிற்கையில் ''வானதி'' என்றான் உத்சவ் மென்மையான குரலில்.

அவள் முகத்தில் புரண்டு கண்ணை மறைத்த முடிக்கற்றைகளை அவன் விரல்கள் மிருதுவாக ஒதுக்கிவிட, வானதி உரிமையுடன் அவன் தோளில் முகம் பதித்தாள். உச்சந் தலையில் உரசிய அவன் இதழ்கள் வானதி 'ஐ லவ் யு' என்றன திரும்ப திரும்ப, ஒரு இதமான மயக்கம் அவர்களை ஆட்கொள்ள தங்களை மறந்தவர்களாய் நின்றிருந்தனர்.

அவர்களுக்கு பின்னால் கேட்ட காலடி ஓசையும், குரலை செருமும் சத்தமும் சற்று நேரத்தில் அருகில் கேட்கவும் இருவரும் சடாரென விலகினார்கள். போர்ட்டிகோவில் பேரனுக்காக காத்திருந்து, அவன் அங்கே வராததால் உள்ளே வந்த வரதராஜு இருவரையும் தீர்க்கமாக பார்த்தார். வானதி கூச்சமும் தயக்கமாய் தடுமாற, உத்சவ் ''தாத்தா ரெடியா? போகலாமா?'' என்றான் எந்த தயக்கமும் இன்றி.

''போகலாம் என்றுதான் போர்டிகோவில் காத்திருந்தேன். ஆனால் இப்போது உனக்கு வீட்டிற்கு போகவேண்டும் என்பதே மறந்து போய் விட்டது போலிருக்கிறது'' என்றார் வரதராஜு

''ஆமாம். வானதியுடன் பேசிக் கொண்டிருந்ததில் மறந்துதான் போய் விட்டது'' என்ற உத்சவ் 'பை வானதி' என அவளுக்கு கையசைத்து விட்டு தன் வழக்கமான துடிப்புடன் அவருடன் நடந்தான்.

இரவு உத்சவ் தன் அறையில் ஒரு புத்தகத்தில் மூழ்கியிருந்தபோது, அறைக் கதவை தட்டிவிட்டு வரதராஜு உள்ளே வந்தார்.

''வாங்க தாத்தா, இன்னும் தூக்கம் வரலையா?'' என்றான் உத்சவ்

''இல்லப்பா, ஏதோ குழப்பம். அதனால தூக்கம் வரல நீ?''

''நான் ரொம்ப தெளிவா இருக்கேன். அதனால தூங்கல,''

''இந்த வயசுல தெளிவா தெரியற விஷயங்கள் எல்லாம் உண்மையாலுமே நமக்கு தேவையானதுன்னு சொல்ல முடியாது உத்சவ்.'' தாத்தாவை உற்றுப் பார்த்த உத்சவ் புன்னகைத்தான்.

''எதுக்கு தாத்தா சுத்தி வரணும். நீங்க கேட்க நினைத்ததை நேரடியா கேளுங்க.''

''கேட்கறதுமட்டுமில்லப்பா. சொல்லணும். ரொம்ப பழைய கதை தான். இருந்தாலும் அது என்னுடைய கதை என்பதால் நீ தெரிந்திருக்க வேண்டியது அவசியம்னு ''சொன்னார். லட்சுமியைப் பற்றி, அவர்களுக்குள் நடந்த திருமணம், அவர் வெளிநாடு சென்றது. சரளா அவர் வாழ்க்கையில் வந்தது என கடைசி வரை சொல்லி முடித்தவர், முகத்தைத் துடைத்தபடி கூறினார்.

''உன் பாட்டிக்கும் எனக்கும் தவிர நம் வீட்டில் யாருக்கும் தெரியாத ரகசியம் இது. சிறுவயதில் நான் தெரியாமல் செய்த தவறினால் ஒரு தலைமுறையே அவமானப்பட நேர்ந்தது. இன்றுவரை எனக்கு பிறந்த மகனே



என்னை விரோதியாய் நினைக்கும்படி ஆனது. இளவயதில் செய்த தவறு ஒருவனை கடைசிவரை நிம்மதியாய் இருக்க விடுவதில்லை என்பதற்கு நானே ஒரு உதாரணம்.''

வரதராஜுக்கு முன்பே ஒரு மனைவியும் மகனும் இருந்திருக்கிறார்கள் என்று கற்பனை கூட செய்திராத உத்சவ் அசந்துபோய் அப்படியே அமர்ந்திருக்க வரதராஜு தொடர்ந்து பேசினார். ''வெளிநாட்டு வாழ்க்கையில் கண்டதும் காதலிப்பதும், பிடிக்கும்வரை இணைந்து வாழ்வதும் சகஜமான விஷயம். ஆனால் இங்கே அப்படியில்லை என்று உனக்குத் தெரியும். நான் அறியாமல் செய்த அதே தவறை நீ அறிந்த பிறகும் செய்யக்கூடாது. உத்சவ் வானதி மிகவும் நல்லபெண். எந்த காரணத்தைக் கொண்டும் அவள் இன்னொரு லட்சுமியாக மாறிப்போவதை தான் அனுமதிக்க முடியாது.?''

''தாத்தா உங்கள் பயம் தேவையற்றது'' என்றான் உத்சவ் ''வானதியை நான் திருமணம் செய்து என்னுடன் பாரிஸ் அழைத்துச் செல்லப்போகிறேன். அம்மாவிடம் கூட ஒரு வார்த்தை சொல்லிவைத்திருக்கிறேன். அம்மா, அப்பா இருவருக்கும் ஓகே தான்''

வரதராஜு இப்போதும் திடுக்கிட்டார். ''உத்சவ் ஆயுசுக்கும் தொடர வேண்டிய உறவில் அவசரப்பட்டு முடிவெடுக்கக் கூடாது. வானதியின் பெற்றோர். குடும்பம் என பார்க்கவும், யோசிக்கவும் நிறைய இருக்கிறது.''

''நான் வானதியின் பெற்றோரை சந்தித்திருக்கிறேன் தாத்தா மிக நல்லவர்கள். எளிமையானவர்கள்.'''' நல்லவர்களாக இருந்தால் மட்டும் போதுமா? எந்தக் காலத்திலோ அறியாமல் நடந்த தவறுகளுக்காக இன்னும் மனசை இரும்பாக வைத்துக் கொண்டிருப்பவனிடம் போய் பேசி என்ன பயன்?'' ''தாத்தா சற்று முன்னால்தான் நீங்களே சொன்னீர்கள் வானதி நல்லபெண். என்னால் அவள் வாழ்க்கை வீணாகி விடக்கூடாது என்று? ''உத்சவ் நினைவுபடுத்தினான்.

''அவள் யாரோ ஒரு பெண்ணாக இருந்தபோது மிகவும் பிடித்திருந்தது. அவள் வாழ்வைப் பற்றிய அக்கறையும் இருந்தது. ஆனால் இப்போது.. உத்சவ் நலிவடைந்து போன என் தொழிலை சரிபடுத்தத்தான் உன்னை அழைத்து வந்தேன். இதனால் உன் எதிர்கால வாழ்க்கையே போராட்டத்தில் தொடங்கி உன்னை அலைக்கழிக்க வைப்பதை அனுமதிக்க மாட்டேன்'' என்றார் வருத்தமான குரலில்.

''தாத்தா அந்த காலத்திலேயே நீங்கள் தாழ்த்தப்பட்ட பெண்ணை மணந்து புரட்சி செய்தவர். தொழிலில் போராடி உயர்ந்தவர் பல ஆண்டுகள் வெளிநாட்டில் வாழ்ந்திருக்கிறீர்கள், வானதி நல்லபெண் என்று தெரிந்த பின்பும் இன்னும் அந்த குடும்பத்துடன் உறவு ஒட்டுமா என்று நம்பிக்கை இழந்து பேசுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அவள் பெற்றோர்களும் நல்லவர்கள் தான் தாத்தா?''

உத்சவ்விடம் பேசி பயனில்லை என்பது வரதராஜுக்கு புரிந்தது. அவள் தன்னை சமாதானப்படுத்த முயலுவது கூட மரியாதை நிமித்தமே தவிர தன் அனுமதியை கேட்டு அல்ல என்பதை உணர்ந்தவராய் தன் அறைக்கு திரும்புவதற்காக எழுந்து நின்றார்.

'' தாத்தா எதைப் பற்றியும் யோசிக்காமல் போய் நிம்மதியாக தூங்குங்கள். உங்கள் மூத்த மகனை, அதாவது என் பெரிய மாமாவை சமாதானம் செய்வது என் பொறுப்பு'' என்றான் உத்சவ்.

வரதராஜன் தன் அறைக்கு சென்றதும், தாத்தாவின் விலகிப் போன உறவை எப்படி ஒட்ட வைப்பது என்ற சிந்தனையில் உத்சவ்வும் பேரனிடம் ஒட்டிக் கொண்ட உறவை எப்படி விலக்குவது என்ற சிந்தனையில் வரதராஜனும் இரவை கழித்தார்கள். விடியும் போது இருவருமே தமக்குள் ஒரு முடிவுக்கு வந்திருந்தனர்.

சில நாட்களுக்கு முன்பானால் உத்சவ், வானதியின் விருப்பத்தை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டு வரதராஜனே முன்னின்று எல்லா ஏற்பாடுகளையும் செய்திருப்பார். ஆனால் வானதியின் தந்தைதன் மீது வெறுப்பை ரத்தத்தோடு ரத்தமாக கலந்து விட்டிருப்பதை எப்படி மாற்ற முடியும்

காலையில் வழக்கம் போல் உத்சவ் தொழிற்சாலைக்கு கிளம்புகையில் வரதராஜன் சொன்னார். ''நான் இன்று தொழிற்சாலைக்கு வரவில்லை. உத்சவ். நீ போய் இறங்கிக் கொண்டு காரை அனுப்பிவைக்கிறாயா?''

'சரி தாத்தா. டிரைவரிடம் காரை கொடுத்தனுப்புகிறேன். கோவிலுக்கோ உறவினர் வீட்டிற்கோ எங்கே போனாலும் நிதானமாக திரும்பி வாருங்கள், அவசரம் இல்லை. நான் வேறு ஏற்பாடு செய்து கொள்கிறேன்'' என்று கூறிவிட்டு தன்ற வழக்கமான வேக நடையுடன் சென்றான் உத்சவ், வேலையாட்களின் வணக்கத்தை ஒரு கம்பீரத்துடன் ஏற்றுக் கொண்டு காரில் அமர்பவனைப் பார்த்த வரதராஜன்

'' என்னை மன்னித்துவிடு உத்சவ் உனக்காக மட்டுமல்ல. மொத்த குடும்பத்தின் நலனுக்காகவும் இந்த முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது' என்றார் மனதுக்குள்.

உத்சவ் திருப்பி அனுப்பிய காரில் ஏறி அமர்ந்து டிரைவரிடம் ''வானதி வீடு உனக்கு தெரியுமா?'' என்றார் வரதராஜன்

'' தெரியும் ஐயா. போயிருக்கிறேன்'' என்றான் டிரைவர். ''சரி அங்கே போ'' என்ற வரதராஜன் பின்னால் சாய்ந்து அமர்ந்தார்.

அவர் அறிந்தவரை வானதியின் குடும்பம் பண்பானது. கிராமத்தில்

''சமைச்சு... பாத்திரம் தேய்ச்சி துணிகளை தோய்ச்சு.. போரடிச்சுப் போய்தான் கல்யாணம் பண்ணினேன்''

''சமைச்சு, பாத்திரம் தேய்ச்சு, துணிகளை தோய்ப்பதும் என் வேலைன்னு மனைவி சொன்னதால் தான் டைவர்ஸே பண்ணிட்டேன்!!''

-ராஜிராதா, பெங்களூர்.





வசிப்பதால் மானம் மரியாதைக்கு அஞ்சியவர்களாக இருப்பார்கள் இவர்கள் பழைய பிடிவாதத்துடன் இருந்தால் தன்பேரன் உத்சவ் வெற்றிகரமான இளைஞன் இங்கே வந்து தோல்வியடைய நேரிட்டால்..?

சிந்தனையுடன் இருக்க, ஒரு குலுக்கலுடன் வண்டி சென்றது. வரதராஜன் கண்களை திறந்தார். செம்மண்சாலையில் சென்ற கார் ஒரு வீட்டின் முன் நின்றது.

'' ஐயா, இந்த வீடுதான்'' என்றான் டிரைவர்.

வரதராஜன் இறங்கி நின்றார். ரம்மியமான அந்த சூழ்நிலைமனதை மயக்கியது. சில வருடங்களுக்கு முன் அவர் இங்கே வந்திருக்கிறார். கூடவே அப்போது சரளா இருந்தாள். அப்போது இத்தனை பெரிய வீடு இல்லை. ஒருவேளை இது வேறு இடமாக இருக்குமோ? பின்னால் வந்த டிரைவரை அழைத்து கேட்க முற்பட்ட போது உள்ளேயிருந்து வந்த பாஸ்கரன் அவரை அடையாளம் கண்டு கொண்டு ஐயா வாங்க என்றான் கை குவித்து.

வரதராஜன் புரியாமல் பார்க்க, ''என்னை நினைவில்லையா? நான் வானதியின் மாமா. சில வாரங்கள் முன்னே ஒரு திருமணத்தில் சந்தித்தோம்'' என நினைவுப்படுத்தவும் வரதராஜன் புரிந்து கொண்ட பாவனையில் தலையசைத்தார். வாயிலில் பேச்சுக்குரல் கேட்கவும் ''மாப்பிளை யார் வந்திருக்கிறார்கள்?'' என வீட்டின் பின்புறமிருந்து.வந்தார் சங்கரன். வானதியின் முதலாளி வந்திருக்கிறார். மாமா'' என பாஸ்கரன் வரதராஜனை சங்கரனுக்கு அறிமுகம் செய்ய, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட இருவரும் எதிர்பாராத அதிர்ச்சியில் சிலையானார்கள். வரதராஜன் கீழே விழுந்து விடாமலிருக்கும் பொருட்டு அருகிலிருந்த மரத்தின் கிளை ஒன்றை கெட்டியாக பற்றினார். சங்கரன் முகத்தில் ஆறாக பெருகிய வியர்வையை துடைத்தபடி, '' இப்போது என்ன சொன்னீர்கள்?'' என்றார் பாஸ்கரனிடம்.

''இவர்தான் வானதியின் முதலாளி மாமா. ஏற்கனவே நாங்கள் சந்தித்திருக்கிறோம்'' என்ற பாஸ்கரன் '' உள்ளே வாருங்கள் சார். வானதியைத் தேடியா இத்தனை தூரம் வந்தீர்கள்? வானதியும் அத்தையும் இங்கே அருகில் உறவினர் வீடுவரை போயிருக்கிறார்கள். வருகிற நேரம்தான். இன்று வானதிக்கு விடுமுறை நாள் தானே! ஏதாவது முக்கியமான விஷயமா உள்ளே வந்து உட்காருங்கள் ''என்றார் பாஸ்கரன் விருந்தாளியை உபசரிக்கும் விதமாக.

வரதராஜன் வேரோடிப் போனவராக அப்படியே நிற்க, 'இங்கே யாரும் வர வேண்டாம்'' என்றார் சங்கரன் கடுமையான குரலில், 'இங்கே புதிதாக தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவோ, சொந்தம் கொண்டாடவோ யாரும் தயாராக இல்லை''.

இத்தனை நாள் அறிந்திராத விதமாய் சங்கரனின் குரலும், அதில் தெரிந்த உதாசீனத்தையும் கண்ட பாஸ்கரனுக்கு தூக்கிவாரிப் போட்டது.

மறுபடி யாரும் பேசுமுன் சங்கரனே பேசினார். '' வானதி இனி வேலைக்கு வரமாட்டாள். என் மகளின் முதலாளியாகக்கூட யாரும் இருப்பதை ஏன், அவளை கண்ணால் பார்ப்பதைக் கூட நான் விரும்பவில்லை இதற்கு மேல் நின்று இங்கே நேரத்தை வீணாக்க வேண்டாம்' 'என்றவர்,

''மாப்பிள்ளை தேங்காய் ஏற்றிப் போக லாரி வந்துவிடும் நம் வேலையை நாம் பார்ப்போம். வேண்டாதவர்களுடன் பேசி நேரத்தை வீணாக்காதீர்கள்'' என்றார் பாஸ்கரனிடம்.

பின் அதற்குமேல் அங்கே நிற்காமல் வீட்டின் பின்புறம் குவிந்திருந்த தேங்காய்களை ஆட்கள் நார் உரிப்பதை பார்க்கப் போனார்.

வரதராஜ™ தான் நினைத்து வந்த விஷயம் அப்படியே நடப்பதை எண்ணி இடிந்து போனார். வானதி தன் பேத்திதான் என்பதை நினைத்து சந்தோஷப்படுவதா? இத்தனை வருடங்களுக்கு பிறகும் மகன் அதே வெறுப்புடன் இருப்பதை நினைத்து துயரப்படுவதா? கால்கள் பின்ன நடக்க மாட்டாமல் தடுமாறியவரைப் பார்த்த டிரைவர் ஓடிவந்து கைகளைப் பற்றி அழைத்துப் போனான். திகைப்பில் கல்லாய் சமைந்து நின்ற பாஸ்கரன் சுய உணர்வு பெற்றவனாய் தன் மாமனாரைத் தேடிப் போனான்.

உத்சவ் மிகுந்த குழப்பத்தில் இருந்தான். எல்லோரிடமும் எரிந்து விழுந்தான்

வானதி நான்கு நாளாய் தொடர்ச்சியாக தொழிற்சாலைக்கு வரவில்லை.

அவளது போனும் 'ஸ்விட்ச் ஆப்' செய்யப்பட்டிருந்தது. டிரைவரை அனுப்பி பார்த்து விட்டு வர சொன்னபோது இனி அவள் வேலைக்கு வர மாட்டாள் என்ற பதில் கிடைத்தது.

இந்த எதிர்பாராத திருப்பம் அவனுக்கு திகைப்பாக இருந்தது. ஒரு வேளை வானதி தன் விருப்பத்தை வீட்டில் சொல்லியிருக்கக்கூடும். பார்வைக்கு நல்லவர்களாக தென்படும் வானதியின் பெற்றோர் மகளின் விருப்பத்திற்கு மதிப்பளிக்க மாட்டார்கள் என்பதை அவனால் நம்ப முடியவில்லை. இரண்டு நாளாய் தனக்குள் யோசித்த உத்சவ் தன்னைப் பற்றிய அவர்களின் சந்தேகங்களை தெளிவுபடுத்தி, நம்பகத்தன்மையை தான் தான் ஏற்படுத்த வேண்டும் என்ற முடிவுக்கு வந்தவனாக வானதியின் வீட்டிற்கு சென்றான்.

அவன் போன சமயம் மொத்த குடும்பமும் ஹாலில் அமர்ந்திருந்தது. அவனைப் பார்த்த முகங்களில் ஒரு வியப்பும், சங்கடமும் தெரிந்தது. சுவரோரமாய் சரிந்து அமர்ந்திருந்த வானதிக்கு உத்சவ்வை பார்த்ததும் தன்னையறியாமல் கண்கள் கலங்கின. வானதியை பார்த்த அவனும் ஒரு நிமிடம் பேசவாய் வராமல் நிற்க, ''தம்பி என்ன விஷயமா வந்தீங்க? ''என்றாள் வேணி தயக்கத்துடன்.

''வானதி ஏன் வேலைக்கு வரவில்லை''. என்றான் உத்சவ். ''வானதிக்கு திருமணம் செய்வதாக முடிவு செய்திருக்கிறோம். அதனால் இனி அவள் வேலை பார்க்க மாட்டாள்' என்றாள் சங்கரன் அவனுக்கு பதிலாக.

''திருமணம் செய்ய முடிவு செய்தது நல்ல விஷயம் தான். ஆனால் மாப்பிள்ளை யார் என்பதும், வேலை பார்க்கலாமா வேண்டாமா என்பதையும் நீங்கள் எப்படி முடிவு செய்ய முடியும்?''

''வேறு யார் முடிவெடுப்பார்கள்?''

''நானும் வானதியும் தான்''

''என்னது?''



''ஆமாம். நாங்கள் இருவரும் தான் மணந்து கொள்ளப் போகிறோம் என்னும் போது நாங்களே முடிவெடுப்பதுதானே சரியாக இருக்கும்? என்ன வானதி, நான் சொல்வது சரிதானே?'' என்றான் உத்சவ் அவளிடம் சகஜமாக.

அங்கிருந்த அத்தனை பேரும் அதிர்ந்து போக, 'கடவுளே! அதிர்ச்சிகள் இவ்வறளவுதானா? இன்னும் இருக்கிறதா?' என்றார் சங்கரன் நெஞ்சில் கைவைத்தப்படி.

''நீங்கள் அதிர்ச்சியடைய வேண்டிய அவசியம் இல்லை அங்கிள். என்னிடம் எந்த கெட்ட பழக்கமும் இல்லை. நன்றாக சம்பாதிக்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் பெண்ணை மிகவும் விரும்புகிறேன். அவளை சந்தோஷமாக பார்த்துக் கொள்வேன். என் பெற்றோருக்கு என் மகிழ்ச்சிதான் முக்கியம். அதே போல உங்களுக்கும் உங்கள் பெண்ணின் சந்தோஷம் முக்கியம் என்று நினைத்தால் மறுக்காமல் எங்கள் திருமணத்தை நடத்தி வையுங்கள். மகளாக தேடிக் கொண்டாள் என்ற ஒரே காரணத்திற்காக என்னை எதிரியாக பார்க்காதீர்கள்''

உத்சவ் பேசி முடித்ததும் சங்கரன் திரும்பி மகளைப் பார்க்க, வானதி அப்பாவின் பார்வையை எதிர் கொள்ளத் தயங்கினாள்.

பெற்றோர்களுக்கு மகளின் முகம் விஷயத்தை உணர்த்திவிட சங்கரன் மிக அமைதியான குரலில் கூறினார்.

''உங்களுடைய பெற்றோரைப் போலவே எங்களுக்கு எங்கள் பெண்ணின் மகிழ்ச்சிதான் முக்கியம். அவள் தேர்ந்தெடுத்தவர் என்பதற்காக மட்டுமல்லாமல் எங்களுக்கும் உங்களை பிடித்துதான் இருக்கிறது. ஆனால் இதனாலெல்லாம் இந்த திருமணத்தை நடத்தி விட முடியாது?''

''ஏன்..ஏன் முடியாது?'' என்றான் உத்சவ் வேகமாக.

''எத்தனையோ தனிப்பட்ட காரணங்கள், கருத்துக்கள் இருக்கும். எல்லாவற்றையும் வெளிப்படையாய் சொல்ல முடியாது. சொல்வதால் பயனும் இல்லை. நீங்கள் படித்தவர். நாகரீகம் தெரிந்தவர். இனிமேல் தொல்லை தர மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்''

''நாசூக்காக இனி வர வேண்டாம் என்கிறீர்கள். ஆனால் சராசரி இந்திய பெற்றோர்களுக்கே உரிய பிடிவாதம் என்பதை தவிர நீங்கள் மறுப்பதற்கு வேறு காரணம் இருப்பதாக தோன்றவில்லை. இந்த பிடிவாதம் மாறி நீங்கள் இறங்கி வர வேண்டும். அதற்கு தேவையான நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்ற உத்சவ், ''வானதி நாம்



''என்ன கபாலி நீ மாமூலா கொடுத்த செக்கெல்லாம் ரிட்டர்ன் ஆயிடுச்சாமே?''

''ஆமா ஏட்டய்யா, செக்குல கையெழுத்து போடறதுக்கு பதிலா சீல் அடிச்சிட்டேன், அதான்!''

-முத்து ஆனந்த்.
வேலூர்.

இருவரும் இணையத்தான் போகிறோம். மனசை தளரவிடாதே. நான் வரட்டுமா? பை ''என வானதியிடம் சொல்லிக் கொண்டு கிளம்பிச் சென்றான்.

அதுவரை ஒரு வார்த்தை பேசாமல் அமர்ந்திருந்த வானதி. அவன் கார் கிளம்பிச் சென்ற சத்தம் கேட்டதும் எழுந்து தன் அறைக்கு சென்றாள். தொடர்ந்து உள்ளேயிருந்து கேட்ட அழுகை சத்தம் வீட்டிலிருந்தவர்களை கலங்கடித்தது.

## 10

இரவு சுருண்டு படுத்திருந்த மகளின் அருகே வந்து அமர்ந்தார் சங்கரன். வீங்கியிருந்த அவள் முகத்தையும், கலைந்து பறந்த கூந்தலையும் கண்டு மனம் துடித்தவராக 'வானதி' என்றார் கனிவான குரலில்.

அப்பாவைப் பார்த்ததும் வானதி எழுந்து அமர்ந்தாள். 'அப்பாவிடம் கோபமாடா?' என்றார் சங்கரன். வானதி இல்லை என தலையசைத்தாள். 'உத்சவ் நல்ல பையன் தான் வானதி. நீ விரும்பியதில் எந்த தவறும் இல்லை. ஆனாலும் இது நடக்காது'

'எனக்குத் தெரியும் அப்பா'

'என்ன தெரியும்?'

'இந்த திருமணம் நடக்காது என்று'

'என்ன சொல்கிறாய் வானதி?'

'ஆமாம் அப்பா. நான் வேறு யாரை விரும்பியிருந்தாலும் நீங்கள் என் மகிழ்ச்சிக்கு தடை போட்டிருக்க மாட்டீர்கள். இப்போது நீங்கள் மறுக்கக் காரணம் உத்சவ் எனக்கு அத்தை மகனாக வேண்டும். அதனால் தான்!'

'வானதி!' என்றார் சங்கரன் அதிர்ச்சியுடன்.

'ஆழமான பிரியம், பொருத்தமான உறவுமுறை எல்லாம் இருந்தும், உங்களுக்கும் தாத்தாவிற்குமுள்ள உறவுமுறை கோபங்களால்-வெறுப்பால் இந்த திருமணம் நடக்காது என்பது எனக்கு முன்பே தெரியும் அப்பா. எனக்கு உத்சவ் மீது ஏற்பட்டுப் போன பிரியத்தைத்தான் அடக்க முடியவில்லையே தவிர உண்மை தெரிந்ததும் திருமண ஆசையை ஜாக்கிரதையாக கட்டுப்படுத்திக் கொண்டேன்.

உத்சவ் பாவம், உண்மை தெரியாததால் இது சராசரி பெற்றோரின் சாதாரண பிடிவாதம் என்று நினைக்கிறான்! அப்பா, சிறுவயதில் உங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களும், அவை உங்கள் அப்பாவின் மீது உங்களுக்கு ஏற்படுத்தி விட்ட வெறுப்பையும், பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனால் என்னைப் பொறுத்தவரை எங்கள் அப்பாவைப் போன்ற ஒரு அப்பா யாருக்கும் கிடைக்க மாட்டார்கள் என்று எல்லோரும் பொறாமைப்படும் படியாய் வளர்த்தீர்கள். தவறு செய்தாலும் அதட்டாமல், அரவணைத்து புரிய வைக்கும் உங்கள் மென்மை, உங்கள் மனக்காயத்திலிருந்து வந்தது தான் என்று இப்போது எனக்கு புரிகிறது அப்பா. நான் நிச்சயம் உங்களை காயப்படுத்த மாட்டேன். உங்களுக்கு பிடிக்காத எதையும் செய்ய மாட்டேன். என்னால் யார் முன்பும் நீங்கள் தலைகுனிய வேண்டியதில்லை.'



வானதி பேசபேச சங்கரன் உடைந்து போனார். மேல் துண்டால் முகத்தைப் பொத்தியபடி அவர் அழ, குலுங்கிய அவர் முதுகை அணைத்தபடி வேணியும், மலர்க்கொடியும் அழுதனர். பாஸ்கரன் துக்கத்தில் கரைந்து போகும் அந்த குடும்பத்தை வெறித்து பார்த்தபடி அமர்ந்திருந்தான்.



''பேங்கல கொள்ளையடிக்கும் போது எதுக்கு கபாலி கேஷியரையும் கடத்தினே?''

''எவ்வளவு பணம் திருடினேன்னு எண்ணி சொல்றதுக்குதான்!''

-முத்து ஆனந்த், வேலூர்.

வரதராஜு விட்டத்தை வெறித்தபடி சோபாவில் சாய்ந்திருந்தார். சில நாளாகவே யாரிடமும் பேசாமல் தன் போக்கில் படுப்பதும், நடப்பதும் வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருப்பதுமாய் இருந்தவரின் அருகில் வந்த மோகன், 'அப்பா உத்சவ்விடம் பேசினீர்களா?' என்றான். வரதராஜு புரியாத பார்வை பார்த்தார். 'என்ன விஷயம்?'

மோகனும் சுதாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். எத்தனை முக்கியமான விஷயத்தை மறந்து விட்டீர்களா? பிரீத்தி உத்சவ் திருமணம் பற்றி சொல்லியிருந்தேனே!'

வரதராஜு அலுப்புடன் சூள் கொட்டினார். 'விதியிருந்தால் நடக்கும். எல்லாம் விதி வழியில் தான் செல்லும். கண்காணாமல் இருப்பவர்களை அழைத்து வந்து சேர்த்து வைக்கும். அருகில் இருப்பவர்களை பிரித்து வேடிக்கை பார்க்கும். நினைத்துப் போன விஷயம் நடக்காது. நினைக்காததெல்லாம் நடந்து விடும். விதியை விட வலியவன் யார் இந்த உலகில்?'

மோகன் அவர் பேச்சு புரியாமல் மனைவியைப் பார்க்க, மூளை குழம்பிவிட்டது போலும் என்றாள் சுதா சைகையில்,

'அப்பா என்ன இருந்தாலும் பிரீத்தி உங்கள் பேத்தி. அவள் எதிர்காலத்தை தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கிருக்கிறது' என்றான்.

மோகன் பேச்சை விட்டுவிடாமல், பேத்தி என்ற வார்த்தையில் வானதி அவன் கண்முன் வந்தாள். வானதியும் என் பேத்திதான். உரிமை கொண்டாடக் கூட வழியற்ற பேத்தி. அதற்காக அவள் மகிழ்ச்சியை கெடுக்க முடியுமா? ஒரே குடும்பத்திற்கு நான் இரண்டு முறை துரோகம் செய்ய வேண்டுமா? என்றார் தனக்குள்.

'அப்பா' என்றான் மோகன் பொறுமையிழந்து. வரதராஜு திரும்பி மகனைப் பார்த்தார். 'நீ எப்படி இருந்த போதிலும் பிரீத்தி விஷயத்தில் எனக்கும் பொறுப்பு இருக்கிறது. உத்சவ் சரி சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்து தர வேண்டியது என் கடமை'

'இதற்கு என்ன பொருள்? உத்சவ் திருமணத்திற்கு சம்மதிக்கவில்

லையா?' என்றாள் சுதா அவர் எதிரே நின்று.

வரதராஜு எப்படி சொல்வதென யோசிக்கையிலேயே 'ஹலோ' என்ற குரல் கேட்டது. 'என்ன என் பெயர் அடிபடுகிறது?' என்றபடி உத்சவ் அவர்கள் எதிரே வந்து அமர்ந்தான்.

பேச்சு மும்முரத்தில் அவன் வந்ததை கூட கவனிக்காததை உணர்ந்தவர்களாய் மூவரும் அமைதியாய் இருக்கவும், உத்சவ் மறுபடி கேட்டான்.

'என்னிடம் ஏதாவது கேட்க வேண்டுமா? அல்லது சொல்ல வேண்டுமா?'

சுதா சட்டென ஒரு முடிவுக்கு வந்தவளாக சொன்னாள். 'ஆமாம், உன் திருமணத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம்'

உத்சவ் புன்னகைத்தான். 'என் திருமண விஷயமா? தாத்தா அதற்குள் உங்களிடம் சொல்லி விட்டாரா?'

'நாங்கள் தானே தாத்தாவிடமே சொன்னோம்!' என்றான் மோகன் பொறுமையுடன்.

'அப்படியா? 'என்றான் உத்சவ் வியப்புடன். 'வானதியை உங்களுக்கு எப்படி தெரியும்? தாத்தாவைத் தவிர இங்கே நான் யாரிடமும் சொன்னதில்லையே!'

'வானதியா? உன்னிடம் வேலை பார்க்கும் பெண்ணையா மணந்து கொள்ளப போகிறாய்?' என்றான் மோகன் திகைப்புடன்.

'அந்த பெண் பெண்கள் இல்லாத சமயம் வீட்டு ஆண்பிள்ளையை கவரவென்றே ஏதோ சாக்கிட்டு இங்கே ஒருமுறை வந்திருக்கிறாள். நல்ல குடும்பத்துப் பெண் இப்படி செய்வாளா? 'சுதா குரோதத்துடன் பேச வரதராஜு அவளை அதட்டினார்.

'நாம் நினைத்தது நடக்கவில்லை என்பதற்காக அடுத்தவர்களை பழித்து பேசக் கூடாது. பிரீத்தி விஷயம் என் பொறுப்பு என்று சொன்ன பிறகு இந்த வீட்டில் வேறு யாரும் எதைப் பற்றியும் பேசக் கூடாது. போங்கள் இங்கிருந்து? 'என்றார் குடும்பத் தலைவரின் கண்டிப்பான தொனியில்

முகத்தை தொங்க போட்டபடி இருவரும்செல்லவும், 'என்ன விஷயம் தாத்தா?' என்றான் உத்சவ் வியப்புடன்.

'அதை விடு. நீ இன்று ஏன் சீக்கிரம் வந்து விட்டாய்? அதை சொல்லு முதலில்' என்றார் வரதராஜு.

'உங்களிடம் சில தகவல்கள் கேட்க வந்தேன்'.

'என்ன தகவல்'

'உங்களது மூத்த மகன் பற்றி. அவர் எங்கே இருக்கிறார் என்ற விபரம் வேண்டும்'

'இப்போது எதற்கு அந்த விபரம்?'

'அவரை சமாதானப் படுத்த முடியுமா என்று பார்க்க வேண்டும். முடிந்தால் அவரை இங்கே அழைத்து வந்து'

'முடியாது உத்சவ்'

'உங்களால் முடியாதது என்னால் முடியக் கூடும். முதலில் அவர்கள் முகவரி கொடுங்கள் தாத்தா?'

'முதலில் இதற்கு பதில் சொல். வானதி வீட்டில் நீங்கள் இருவரும்



விரும்பும் விஷயம் தெரியுமா?'

'தெரியும்'

'எப்படி தெரியும்'

'நான்தான் சொன்னேன்'

'நீயா? நீ எப்போது அவர்களை சந்தித்தாய்?' 'இரண்டு நாள் முன்பு வானதி வீட்டிற்கு போனேன் தாத்தா. அவள் அக்கா, அவரது கணவர் என மொத்த குடும்பமும் அங்கிருந்தது. வானதியை திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக சொன்னேன்'

'அதற்கு அவர்கள் என்ன பதில் சொன்னார்கள்?'

'என்ன சொல்வார்கள்? டிபிக்கல் இந்திய பெற்றோராய் மறுப்பு தெரிவித்தார்கள். இருந்தாலும் நான் விடப்போவதில்லை. காத்திருப்பதாக சொல்லி, யோசிக்க அவகாசம் கொடுத்திருக்கிறேன். கடைசி வரை முடியாது என்றால் அவர்கள் சம்மதமின்றி நாங்களே திருமணம் செய்து கொள்ள வேண்டியதுதான். வேறு வழியில்லை'.

'வேண்டாம் உத்சவ். அப்படி செய்யாதே.' என்றார் வரதராஜு.

'வளர்ந்த பிள்ளைகளின் மனதை புரிந்து கொள்ளாமல் பிடிவாதம் பிடிப்பவர்களிடம் வேறு எப்படி நடந்து கொள்ள முடியும் தாத்தா?' என்றான் உத்சவ் போத்துடன்.

வரதராஜு கெஞ்சலுடன் அவன்கைகளைப் பற்றினார். 'உத்சவ் அந்த குடும்பத்திற்கு நான் கொடுத்த வேதனையின் வடு இன்னும் மறையாமல் இருக்கிறது. அதே வடுவில் நீயும் காயப்படுத்தாதே'

'தாத்தா நீங்கள் சொல்வது புரியவில்லை' என்றான் உத்சவ் குழப்பத்துடன். வரதராஜு சங்கரனைப் பற்றியும், தான் அங்கே போனதையும், சங்கரனின் கோபத்தையும் பேரனிடம் விவரிக்கவும், அவன் திகைத்துப் போனான். இந்தியா வந்ததிலிருந்து அவன் சந்திக்க நேர்ந்த எதிர் பாராத சம்பவங்களை யோசித்துப் பார்க்கையில் இது நிஜமா, அல்லது ஒரு சுவாரஸ்யமான நாவலின் பக்கங்களை புரட்டுகிறோமா என்ற பிரமை கூட ஏற்பட்டது.

'உத்சவ்' என்றார் வரதராஜு இரண்டாம் முறையாக. உத்சவ் அவர் பேச்சை கவனித்தான்.

'சங்கரன் இன்னும் என் மீது வெறுப்பை வளர்த்து வைத்திருக்கிறான். வானதியின் மீது உனக்கு இயல்பாக ஏற்பட்டுப் போன பிரியத்தைக் கூட மகளை பிரிக்க நான் செய்த சதிச் செயலாக அவன் நினைக்கக் கூடும். நீ அவர்களை எதிர்த்து வானதியை மணந்து கொண்டால், இளமை பருவத்தில் அவனுக்கு அரவணைப்பை கொடுக்காத நான், அவனது நடுத்தர வயதில் அருகில் இருக்க வேண்டிய மகளையும் பிரித்து விட்டதாகதான் எண்ணுவான்.

என்னுடன் சேர்த்து மகளையும் வெறுக்கத் தொடங்குவான். பிரிந்தே இருந்த போதிலும் சங்கரன் என் மகன்! என்னைப் பொறுத்தவரை மோகனுக்கும், அவனுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. இன்னும் சொல்லப் போனால், என் ஆதரவை இழந்தவன். உழைப்பில் உயர்ந்தவன். என் மூத்த மகன் என்பதால் அவன் மீது சற்று அதிகமான பாசமே உண்டு. அவனை எந்த விதத்திலும் யாரும் புண்படுத்துவதை நான் பார்த்துக்

கொண்டிருக்க முடியாது. அது நானாகவே இருந்தாலும் சரி.'

உத்சவ் அவனுக்கு விபரம் தெரிந்ததிலிருந்து முதன் முறையாக துவண்டு போனான். வானதியுடன் தன் திருமணம் நிச்சயம் நடக்கும் என்று உறுதியாக எண்ணியிருந்தான். தான் நினைத்ததையே நடத்தி பழக்கப்பட்டவன் என்பதால் முதலில் தாத்தா மறுப்பு தெரிவித்த போதும், பிறகு வானதியின் பெற்றோர் மறுத்த போதும் அவன் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் இவர்கள் மறுப்பிற்கு பின்னால் இப்படியொரு காரணம் இருக்கும் என்பதை அவன் நினைத்துக் கூட பார்க்கவில்லை. இந்த சூழ்நிலையில் வானதி துணிந்து அவனை மணக்க சம்மதிப்பாளா என்பதே இப்போது சந்தேகமாக இருந்தது.

பேரனின் மகிழ்ச்சிக்கு தாமே தடையாக இருக்கிறோம் என்ற குற்ற உணர்வுடன் வரதராஜு தலை குனிந்து அமர்ந்திருக்க, உத்சவ் குழப்பத்தின் உச்சியில் இருந்தான்.

அடுத்து வந்த நாட்களில் இரு குடும்பத்திலும் கனத்த அமைதி நிலவியது. வானதி தன் பேச்சையும், சிரிப்பையும் மறந்து போய் வீட்டிற்குள்ளேயே முடங்கிப் போனாள். உத்சவ் தொழிற்சாலையின் இயந்திரங்களுடன் தானும் ஒரு இயந்திரமாய் மாறிப் போனான். இளையவர்களை பார்த்த இரு குடும்பத்து பெரியவர்களும் தங்களுக்குள் குமைந்து போனார்கள். நடப்பதை எல்லாம் அமைதியாக கவனித்துக் கொண்டிருந்த பாஸ்கரன் தான் எதிர் பார்த்த தருணம் வந்துவிட்டதென உணர்ந்தான். காயை எப்படி நகர்த்தலாம் என்று யோசிக்க ஆரம்பித்தான்.

சங்கரன் மதிய வெயிலில் வயலில் அலைந்த களைப்பில் கயிற்றுக் கட்டிலில் சாய்ந்தார். உடல் களைத்துப் போனாலும் விழித்திருந்த மனம் அலைபாய்ந்தது. நாலு சுவற்றுக்குள் அடைந்து கிடந்த வானதி மலரின் வற்புறுத்தலின் பேரில் தன் தாயுடன் புரவி பாளையம் போயிருந்தாள்.

வீட்டின் தனிமையில் மூடிய கண்களுக்குள் மகளின் எதிர்காலம் பாரமாய் வந்து அமர்ந்தது. கண் ஓரத்தில் துளிர்த்து நின்ற நீரை மேல் துண்டால் ஒற்றியெடுத்த போது, 'மாமா தூங்குகிறீர்களா?' என்ற படி அவர் அருகில் வந்தான் பாஸ்கரன்.

'வானதியும், வேணியும் மலரைப் பார்க்க புரவிபாளையம் வந்தார்களே! நீங்கள் பார்க்கவில்லையா? 'என்றார் சங்கரன்.

'அவர்களை பார்த்த பிறகு தான் கிளம்பினேன். வானதி மிகவும் இளைத்துப் போய் விட்டாள்' என்றான் பாஸ்கரன்.

'எனக்கும் அவளைப் பற்றிதான் கவலையாக இருக்கிறது' என்றார் சங்கரன்.

'கவலை என்ன மாமா? வானதிதான் உங்கள் பேச்சை மீறமாட்டேன் என்று சொல்லி விட்டாளே! உங்களுக்கு தெரிந்த பையனாகப் பார்த்து திருமணம் செய்து வைக்க வேண்டியது தானே!'

'ஆனால் வானதி மனசில் இருப்பது அந்த பையன் தானே! எனக்காக திருமணத்திற்கு சம்மதித்தாலும் மனம் விரும்பாத அவள் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்குமா'

'அப்படியானால் அவள் விரும்புகிற பையனுக்கே செய்து வையுங்கள்'



'இத்தனையும் தெரிந்த பிறகு இப்படி சொல்கிறீர்களே! நான் யாரை பார்க்கவே கூடாது என்று இத்தனை நாள் ஒதுங்கி இருந்தேனோ அவர்களிடம் நிரந்தரமாக வசிக்க என் மகளை எப்படி அனுப்ப முடியும்! ஒரு திருமணம் என்பது இரு குடும்பங்களையும் இணைப்பது அல்லவா? சிறு வயதிலிருந்து விரோதியாக கருதி வளர்ந்திருந்த ஒருவருடன் என்னால் இணைய முடியுமா? மகள் வீடு என்ற உரிமையுடன் அங்கே செல்லவோ, சம்பந்தி வீட்டினர் என்று இங்கே அழைத்து சீராட்டவோ முடியுமா? சொல்லுங்கள் மாப்பிள்ளை!'

'மாமா மலர்க்கொடியை என்றைக்கு திருமணம் செய்து கொண்டு இந்த வீட்டு மாப்பிள்ளை ஆனேனோ அன்றிலிருந்து மனதளவில் என்னை இந்த வீட்டின் மூத்த மகனாகத்தான் நினைத்திருக்கிறேன். அந்த உரிமையில் உங்களிடம் சற்று பேசலாமா?' என்றான் பாஸ்கரன்.

'சொல்லுங்கள்' என்றார் சங்கரன் நெகிழ்ந்து போய்.

'மாமா உங்கள் அப்பாவை நீங்கள் வெறுத்த அளவிற்கு உங்கள் அம்மா வெறுக்கவில்லை அல்லவா?' என்றான் பாஸ்கரன்.

'ஆமாம். கடைசி வரை என் அம்மா அவரைப் பற்றி மரியாதையுடன் தான் பேசுவார்கள். என்னிடம் குறைவாக பேசியதே இல்லை'

'உண்மையில் அவர் நல்லவராகவே இருந்திருக்கலாம் மாமா. அவர் இரண்டாவதாய் மணந்து கொண்ட மனைவியுடன் உங்களை தேடி வந்த போதே உங்களுக்கு புரிந்திருக்க வேண்டாமா? தட்டிக் கழித்து விட்டு போக நினைப்பவராய் இருந்தால் இத்தனை வருடம் கழித்து தேடிப் பிடித்து ஏன் சொந்தம் கொண்டாட வேண்டும்? யாருக்குமே தெரியாத தன் முதல் திருமணத்தை அவர் எளிதாக மறைத்திருக்கலாம் அல்லது மறந்திருக்கலாம். தன் இரண்டாம் மனைவியிடம் சொல்லியிருப்பதிலிருந்தே அவர் மனச்சாட்சியுள்ளவர் என்று தெரிகிறது'

'நீங்கள் சொல்கிற படி அவர் நல்லவராக இருந்தாலும் சிறு வயதிலிருந்து நான் பட்ட கஷ்டத்திற்கு அவரால் ஈடு செய்ய முடியுமா?' என்றார் சங்கரன்.

'இறந்த காலத்திற்கு பதில் சொல்ல யாராலும் முடியாது மாமா. உங்களது துன்பமான கடந்த காலத்திற்கு வானதியின் மகிழ்ச்சியான எதிர்காலம் பலியாகி விடக்கூடாது'

'மாப்பிள்ளை என் இருபெண்களும் தான் என் உயிர். வானதியின் எதிர் காலத்தில் எனக்கு அக்கறை இல்லை என்றா சொல்கிறீர்கள்?'

'இருக்கிறது மாமா. நிச்சயம் இருக்கிறது. ஆனால் அந்த அக்கறை நடந்து போனவற்றை மன்னிக்கும் அளவு விசாலமானதாக இருக்க வேண்டும்'

சங்கரன் பதில் பேசாமல் இருக்க பாஸ்கரன் தொடர்ந்தான். 'உத்சவ்வை சில நாட்களுக்கு முன்பு நான் சந்தித்தேன் மாமா. அன்று நம் வீட்டிற்கு வந்து கண்டிப்பாக வானதியை தான் மணந்து கொள்ளப் போவதாக சொல்லி சென்றவன். பிறகு ஏன் எந்த முயற்சியும் எடுக்க வில்லை என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

உத்சவ்விடம் பேசிய போதுதான் விபரம் தெரிந்தது. உத்சவ் நம் வீட்டிற்கு வந்த போது உங்கள் உறவு முறை பற்றி அவனுக்கு தெரியாது. தான்

விரும்பிய பெண்ணை மணந்தே தீர வேண்டும் என்ற ஆவலுடன் தான் வந்திருக்கிறான். இங்கிருந்து சென்ற பிறகு தான் அவன் தாத்தா மூலமாய் விஷயம் தெரியவர அதிர்ந்து போய்விட்டான். உங்கள் அப்பா உத்சவ்விடம் 'என் மகனுக்கு தெரிந்தோ, தெரியாமலோ நான் கொடுத்த துரோகம் போதும். உன்னால் மறுபடி அந்த குடும்பத்திற்கு எந்த அவமானமும் ஏற்படக்கூடாது? என உத்சவ்வின் கையை கட்டிப் போட்டிருக்கிறார்.

தாத்தாவின் நியாயமான கட்டளையை மீறவும் முடியாமல் தான் விரும்பும் பெண்ணை மறக்கவும் முடியாமல் உத்சவ் தவிப்பதைக் காண எனக்கே வருத்தமாக இருந்தது. மாமா நன்றாக யோசியுங்கள். நீங்கள் தலையசைத்தால் போதும். எல்லோருடைய முகமும், மனமும் மலர்ந்து போகும்'

சங்கரன் மவுனமாகவே இருக்கவும், 'மாமா உங்கள் அப்பாவிற்காக அல்ல. உங்கள் பெண்ணிற்காக இறங்கி வாருங்கள். உங்கள் கோபம் நியாயமானதுதான். அதே போல வானதியின் ஆசையிலும் நியாயம் இருக்கிறது. உங்களுக்கு பிடிக்காத குடும்பத்துப் பையன் என்று தெரிந்து அவள் விரும்பவில்லை. விரும்பிய பிறகுதான் உண்மை தெரிந்தது. அப்போதும் தன் பிரியத்தை விட உங்கள் கவுரவம்தான் முக்கியம் என்று சொன்ன பெண்ணுக்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? எதையாவது செய்வதை விட அவள் விரும்பியதையே அவளுக்கு கொடுப்பதுதானே சரியானதாக இருக்கும்?'

மகள் மீதுள்ள பாசத்திலும், மருமகனின் மனோநிலையை புரிந்து கொண்ட பாஸ்கரன் விட்டால் அவர் பழைய நிலைக்கு போய்விடுவார் என்ற பயத்தில் விடாது. பேசி, பேசி, அவரை வழிக்கு கொண்டு வந்தான்.

ஒரு மாலை வேளையில் முத்து க்கவுண்டரைப் பார்க்க சங்கரன் அவர் வீட்டிற்கு போனபோது, வரதராஜுவை வரவழைத்து அப்பாவையும் மகனையும் பாஸ்கரன் சந்திக்க வைத்தான்.

மகனின் கைகளைப் பற்றிய வரதராஜு 'இப்பவாவது என்னை பார்க்கணும்னு தோணுச்சே! இத்தனை வருடம் நான் காத்திருந்தது வீண் போகலப்பா' என்றார் கண்களை துடைத்தபடி.

சங்கரன் உணர்ச்சி மேலீட்டால் பேசவராமல் தவிக்க, பாஸ்கரனும், முத்துக் கவுண்டரும் சகஜமாய் விலகி குத்தலோ குதர்க்கமோ இன்றி இருவரும் பழைய கதைகளை பேசினார்கள். இளைய தலைமுறையின் எதிர்காலத்தைப் பற்றி திட்டமிட்டார்கள்.

சங்கரன் குடும்பத்தில் மகிழ்ச்சி களை கட்டியது. சங்கரனுக்கு தன் சிறு வயது ஏக்கங்களுக்கும், மகளின் திருமணத்திற்கும் சுயமான முடிவு ஏற்பட்டு விட்டதாக நிறைவு ஏற்பட்டது.

பால்கனியில் அமர்ந்து ஏதோ புத்தகத்தை சுவாரஸ்யமின்றி புரட்டிக் கொண்டிருந்த உத்சவ்வை அழைத்தார் வரதராஜு.

'இளவயது பையன். சுறுசுறுப்பும், துடிப்புமாய் இல்லாமல் இப்படியா சோர்ந்து கிடப்பார்கள்? நீ கிளம்பு, நாம் வெளியே போய் வரலாம்' என்றார் பேரனிடம்.

'எங்கே தாத்தா?'

'அதை அங்கே போனதும் சொல்கிறேன். நன்றாக உடையணிந்து



டிரிம்மாக வரவேண்டும்.'

சில நாட்களாக சோர்ந்து போயிருந்த தாத்தா உற்சாகத்துடன் பேசுவதைக் கேட்க உத்சவ்விற்கு வியப்பாக இருந்தது.

'என்ன விஷயம் தாத்தா?'

'சீக்கிரம் தாமதிக்காமல் கிளம்பு' என்றார் வரதராஜு.

அவரின் அவசரமும், ஆர்வமும் உத்சவ்விற்கு ஆவலை ஏற்படுத்த வெளியே செல்ல தயாராகி வந்தான்.

இருவரும் காரில் அமர்ந்ததும் டிரைவர் வண்டியை எடுக்க, 'இப்பவாவது சொல்லுங்கள்?' என்றான் உத்சவ்.

'உனக்கு பெண் பார்க்கப் போகிறோம் உத்சவ்'

'தாத்தா உங்களுக்கு பைத்தியம் பிடித்திருக்கிறதா?' என்றான் உத்சவ் கோபத்துடன்.

'எனக்கில்லை. உனக்கு பிடித்திருக்கும் பைத்தியத்தை தெளிய வைக்கத்தான் இந்த ஏற்பாடு'

'காரை நிறுத்துங்கள். நான் இறங்க வேண்டும்.'

காரின் கைப்பிடி குமிழை திருக முற்பட்ட அவன் கைகளை பற்றினார் வரதராஜு. 'சிறிது நேரம் மட்டும் அமைதியாய் இரு உத்சவ். உனக்கு பிடிக்காத எதுவும் நடக்காது. கட்டாயப்படுத்தி கட்டி வைக்க நீ குழந்தை அல்ல. பெண் பிடிக்கவில்லை என்றால் உடனே திரும்பிவிடலாம்.'

'கண்டிப்பாய் எனக்கு பெண்ணை பிடிக்காது.

'அதை பார்த்த பிறகு சொல்.'

'எப்போது கேட்டாலும் ஒரே பதில் தான்'

'சரி. அவர்கள் வீட்டில் வருவதாக சொல்லிவிட்டேன். மரியாதைக்கு தலையை காட்டிவிட்டு கிளம்பி விடலாம்'

நம்மை மீறி எதுவும் நடக்கப் போவதில்லை என்ற எண்ணத்தில் உத்சவ் முகம் இறுக அமைதியானான். தன்னிடம் ஒரு வார்த்தை கேட்காமல் ஏற்பாடு செய்து விட்ட தாத்தாவின் மீது கோபம் வந்தது. இலக்கின்றி வெறித்தபடி அவன் அமர்ந்திருக்க, 'உத்சவ் வீடு வந்து விட்டது. இறங்கி வா' என்றார் வரதராஜு.

அலட்சியமாய் தலையை கோதிவிட்டபடி காரிலிருந்து இறங்கிய உத்சவ், 'தாத்தா, இது வானதியின் வீடு' என்றான் நம்ப மாட்டாத ஆச்சரியத்துடன்.

'என் மகனின் வீடும் கூட' என்றார் வரதராஜு.

'அப்படியானால்?'

'சங்கரன் என்னுடன் சமாதானமாகிவிட்டான்' என்றார் வரதராஜு ஒற்றை வார்த்தையில்

'யாஹு'. என உத்சவ் கத்திய கத்தலில் சத்தம் கேட்டு வீட்டிற்குள்ளிருந்து ஒரு கும்பலே வெளியே வந்தது. வானதி குடும்பத்துடன் தன் மாமா குடும்பம். மற்ற உறவினர்களையும் பார்த்த பிறகுதான் உத்சவ்விற்கு இது நிச்சயதார்த்த விழா என்று புரிந்தது.

'என்னிடம் ஒரு வார்த்தை சொல்லாமலே இத்தனை செய்திருக்கிறீர்கள்?' என்றான் உத்சவ் வியப்புடன்.

'உண்மைதான். ஆனால் நான் உன்னை வற்புறுத்தவில்லை உத்சவ்.

சற்றுமுன் சொன்னது போல பெண் பிடிக்கவில்லை என்றால் இப்போது கூட நீ விலகிக் கொள்ளலாம்' வரதராஜு உற்சாகத்துடன் பேரனை சீண்டினார்.

'மைகாட். நீங்களே என்னை விரட்டி விடுவீர்கள் போலிருக்கிறது' என்று உத்சவ் வேகமாக உள்ளே ஓட சிரித்தபடி அனைவரும் பின் தொடர்ந்தனர்.

சம்பிரதாயப்படி நிச்சயதாம்பூலம் நடந்து, விருந்து சாப்பிட்ட பின் உறவினர்கள் எல்லாம் கலைந்து சென்ற பின் நிதானமாக குடும்பத்தினர் அமர்ந்திருந்த வேளையில் வரதராஜு பேரனிடம் சொன்னார்.

'சங்கரன் தன்னைப் பற்றி புதிதாக உறவுகளிடையே செய்யப்படும் அறிமுகம் சலசலப்பை ஏற்படுத்தும் என்கிறான்.

மோகன் மனதிலோ, மைதிலியின் மனதிலோ தன்னைப் பற்றி சற்று தாழ்ச்சியான எண்ணம் எழுந்தாலும், கூட அது வானதியின் மகிழ்ச்சியான வாழ்வை பாதிக்கக் கூடும் என்று அஞ்சுகிறான். நான் எத்தனை எடுத்துச் சொன்ன போதும் அவன் கேட்கவில்லை.

இத்தனை வயதுக்கு பிறகு என்னை உங்கள் மகன் என்று ஊரறிய அறிவித்து ஆகப்போவது எதுவுமில்லை. பதிலாக வானதி உத்சவ்வின் மனைவி உங்கள் குடும்பத்துப் பெண் என்ற அங்கீகாரமே போதும் என்கிறான். இத்தனை வருடங்கள் கழித்து ஒன்று சேர்ந்திருக்கிறோம். அவனிடம் விவாதம் செய்யவோ, வற்புறுத்தி எதையும் செய்ய சொல்லவோ எனக்கும் மனமில்லை. எனவே நீயும் வானதியும் விரும்பி மணந்து கொள்வது மட்டுமே எல்லோருக்கும் தெரியும். எனக்கும் சங்கரனுக்கும் உள்ள உறவு உன் அம்மா உட்பட யாருக்கும் தெரியாது' என்றார் வரதராஜு வருத்தத்துடன்.

சங்கரனின் நியாயமான உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்துதான் ஆக வேண்டும் என்றாலும் இதை எத்தனை நாட்களுக்கு மறைக்க முடியும்? என்ற சந்தேகமும் உத்சவ்விற்கு ஏற்பட்டது.

'தாத்தா, உங்களுக்கு காபியா, டீயா? என்ன வேண்டும்?' என விசாரித்த படி அவர்கள் அருகில் வந்தான் பாஸ்கரன்.

வரதராஜு 'காபி' என்றதும் 'உங்களுக்கு?' என்றான் உத்சவ்விடம்.

'எனக்கு வேண்டியது கிடைக்குமா பாஸ்கரன்?' என்றான் உத்சவ் சிரித்தபடி.

'ஏன் கிடைக்காது? நிச்சயம் கிடைக்கும். வாங்க,' என்று ஒரு அறைக்குள் அழைத்து சென்று உட்கார வைத்தான். 'இங்கே இருங்கள். வந்து விடுகிறேன்' என வெளியே சென்றதும் அந்த அறைக்கதவு தாழிடப்பட்டது.

திரும்பிப் பார்த்த உத்சவ் 'வானதி நீ இங்கேயேவா இருந்தாய்?' என்றான் ஆச்சரியத்துடன்.

'இது என் அறை. நான் இங்கே இருப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது' என்றாள் வானதி.

'உண்மைதான். நாம் இருவரும் சந்தித்த பிறகு நம் வாழ்வில் நடந்த விஷயங்கள் எல்லாமே வித்தியாசமானவைத்தான்' என்ற படி உத்சவ் அவள் அருகில் வந்தான். 'ஆனால் இத்தனை ஆச்சரியங்களுக்கும் அப்



பாற்பட்ட ஒரு விஷயம் இருக்கிறது.

அது என்னவென்று சொல் பார்க்கலாம்?' அவள் முகத்தை நிமிர்த்தி கன்னங்களை பற்றினான். 'என்ன விஷயம்?' என்றாள் வானதி கூச்சத்தில் மனம் படபடக்க உத்சவ் குனிந்து மிக மிக மிருதுவாக மூடியிருந்த அவள் இமைகளில் முத்தமிட்டான்

'நம் அனைவருக்குள்ளும் இருந்த அன்புதான் எல்லா அதிசயங்களுக்கும் மேம்பட்டது. அந்த அன்புதான் குழந்தைகளுக்காக விட்டுக் கொடுக்கவும், சகித்துக் கொள்ளவும் பெரியவர்களை தூண்டியது. இத்தனை நாள் நாம் பார்க்காமல் பேசாமல் காத்து இருந்ததற்கும் நமக்கு நம் குடும்பத்தின் மீது இருந்த அன்பு தான் காரணம். இப்போது அதே பிரியம் தான் நம் இருவரையும் இணைத்து வைத்திருக்கிறது.' வானதி உரிமையுடன் அவன் தோளில் சாய, அவளை அணைத்தபடி அவன் பேச்சு மறந்து, நின்றிருந்த சமயத்தில் மெலிதாக கதவு தட்டப்படும் சத்தமும், மலர் கொடியின் குரலும் கேட்டது. வானதி அவனிடமிருந்து விலகினாள்.

'மீதியை கல்யாணத்திற்கு பிறகு பார்த்துக்கலாம் சார்

'சே! இந்த ஏற்பாட்டில் இந்த ஒரு விஷயம் மட்டும்தான் எனக்கு பிடிக்கவேயில்லை' என்றான் உத்சவ் எரிச்சலுடன்.

'ஆமாம். பிடிக்காதுதான்?' வானதி கலகலவென சிரித்தாள்.

சிவந்த இதழ்களும், முத்துப் பற்களும், எப்போதும் போல் மனதை ஈர்க்க உத்சவ் அந்த சிரிப்பை சிறை செய்தான்.

பெரிய பெரிய பெட்டிகளும், பைகளும் கிளம்பத் தயாராகி அணிவகுந்திருந்தன. மண மக்கள் எல்லோரிடமும், விடை பெற்றுக் கொண்டிருந்தனர்.

தன் பெற்றோரை வணங்கி எழுந்த வானதி, 'அப்பா நான்தான் உங்கள் கூடவே இருந்து பார்த்துக் கொள்வதாக சொன்னேன். ஆனால் இப்போது உங்களை எல்லாம் விட்டுவிட்டு கடல் கடந்து போகப் போகிறேன். இப்படி நடக்கும் என்று நான் நினைக்கவேயில்லை' என்றாள் துயரத்துடன். 'இது தான் கண்ணு வாழ்க்கை' என்றாள் வேணி பெண்ணின் கன்னத்தை வருடி. 'விதைவிட்ட பயிரை பிடுங்கி வயலில் நட்டால்தான் அது பலன் கொடுக்கும். அது போலத் தான் பெண்ணும். நீ மகிழ்ச்சியாக இருப்பது தான் எங்களுக்கு செய்யும் பெரிய உதவி' என்றாள்.

'நீ கவலைப்படாதே வானதி. உன் பெற்றோர் இனி தனி அல்ல. நான் இங்கேயேதான் இருக்கப் போகிறேன். வாழ்கிற வயதில் இல்லை என்றாலும் போகிற வயதிலாவது உங்கப்பாவுடன் சிறிது காலம் இருந்து விட்டு கண்ணை மூடுகிறேன். அதனால் நீ உன் பெற்றோருக்கு ஒரு துணையை ஏற்படுத்தி விட்டுப் போகிறோம் என்ற நிம்மதியுடன் கிளம்பு' என்றார் வரதராஜு.

'வானதி தயாராகி விட்டாயா?' என்ற படி வந்தாள் சுதா.

உத்சவ் தாத்தாவின் தொழிற்சாலையை மோகனிடம் ஒப்படைத்து சிறிது நாட்கள் கூடவே இருந்து அவனை தயார்படுத்தியிருந்ததில் சுதா சமாதானமாகி விட்டிருந்தாள். பிரீத்திக்கும் உத்சவ்விடம் உறவு முறையை தாண்டிய ஈடுபாடு இல்லை என்று அவளே தன் தாயிடம் அடிக்கடி சொல்லி வந்திருந்ததால் இந்த திருமணத்தில் சுதா எந்த அதிருப்தியையும்

காட்டாமல் வளைய வந்தாள்.

'இதோ வருகிறேன்' என சுதாவுக்கு பதில் சொல்லிவிட்டு வெளியே வந்த வானதிக்கு அங்கிருந்த பாஸ்கரனைப் பார்த்ததும் மனம் கலங்கியது. இந்த திருமணம் நடக்க அவன் எடுத்துக் கொண்ட முயற்சியையும், அலைந்த அலைச்சலையும் நேரில் பார்த்தவள் என்பதால்' எதையாவது மறந்து விட்டாயா வானதி? யோசித்துப் பார்' என அவன் கேட்டதும் கண்ணீர் பெருகியது. சடாரென அவன் கைகளைப் பற்றி 'மாமா என்னை மன்னித்து விடுங்கள்' என்றாள் வானதி.

'வானதி நீ என்ன சொல்கிறாய்?' என்றான் பாஸ்கரன் திகைப்புடன்.

'மாமா என் அப்பா அவர் அப்பாவுடன் இணைவதற்கும், உத்சவ்வும் நானும் ஒன்று சேர்வதற்கும் நீங்கள் தான் காரணம். என் அக்காவை என்னிடமிருந்து பிரித்து விட்டதாக விபரம் தெரியாத வயதில் உங்கள் மீது கோபம் கொண்டிருந்தேன்.

ஆனால் என் அப்பாவின் ஜாதி உண்டாக்கிய சமூக அடையாளங்களை புறக்கணித்து அக்காவை மணந்து உள்ளூரிலேயே வாழ்ந்து காட்டுவதற்கு பரந்த மனப்பான்மை இருக்க வேண்டும். எங்கள் குடும்பத்திற்கு எத்தனை பெரிய துணையாய் நீங்கள் இருக்கிறீர்கள் என்பது இப்போது தான் புரிகிறது'மேலே பேச முடியாமல் வானதி அழ, பாஸ்கரனுக்கும் கண் கலங்கியது. அருகில் இருந்த மலர்க்கொடி தன் கண்களை துடைத்தபடி தங்கையையும் கணவனையும் சமாதானப்படுத்தினாள்.

'வானதி நான் தனியாக பிறந்தவன் என்பதால் எப்போதுமே உன்னை என் உடன் பிறப்பாகத்தான் கருதி வந்தேன். நீ உத்சவ்வை விரும்பத் தொடங்கியதை நீ உணரும் முன்பே நான் தெரிந்து கொண்டதால்தான் மாமாவை என்னால் தயார் செய்ய முடிந்தது. நீ என்னிடம் சகஜ முறையில் பழகவில்லை என்ற குறை மட்டும் அடி மனதில் இருந்து கொண்டே இருந்தது. இப்போது அதுவும் இல்லை. நல்ல படியாக போய் வா வானதி.

இனி நம் வீட்டில் யாருக்கும் எந்த மனக்குறையும் இல்லை' என்றான் பாஸ்கரன் உணர்ச்சி வசப்பட்டு.

தங்கள் விருப்பப்படியும், மகனின் ஆசைப்படியும், நல்ல பெண்ணாக கிடைத்து திருமணம் நல்ல படியாக நடந்து முடிந்த நிறைவில் மைதிலியும், ராமச்சந்திரனும் மண மக்களுடன் எல்லோரிடமும், விடை பெற்று கிளம்பினார்கள்.

இணைந்து விட்ட மகிழ்ச்சியையும், பிரிவுத் துன்பத்தையும் சுமந்து கொண்டு கிளம்பத் தயாராக இருந்த விமானத்தில் அமர்ந்திருந்த உத்சவ் மனைவியின் காதருகே முணுமுணுத்தான்.

'ஏய். பட்டிக்காடு, முதன் முறையாக ப்ளைட்ல வர இல்ல? பயமா இருந்தா என்னை கெட்டியா பிடிச்சிக்கோ?'

'பயம் இல்ல. ஆனால் பிடிச்சிக்கறேன்' வானதி புன்னகையுடன் அவன் தோளில் சாய்ந்தாள்.

முற்றும்

Owned, Published, Printed and Edited by R.KANNAN ADITYAN, from 246, Anna salai, Chennai- 600 006 at Deviyin Kanmani Achagam.



